கல்கி

KALKI 16.3.97 ரூ. 3.00



புதுடெல்லியிலுள்ள கே.கே.பிர்லா ஃபௌண்டேஷன் அகில இந்திய அளவில், ஆண்டுதோறும் ஆறு பத்திரிகையாளர்களைத் தேர்வு செய்து, சமுதாய நோக்குடன் ஏதேனும் ஒரு பிரச்னையைப் பற்றி ஆய்வு செய்ய உதவித்தொகை அளிக்கிறது.

இந்த உதவித்தொகையினைப் பெற்ற முதல் தமிழ்ப் பத்திரிகையாளர் சியாமளா சுவாமிநாதன். 'ஷ்யாமா' என்ற பெயரில் எழுதுபவர்.

'தமிழக கிராமங்களில் பெண் சிசுக் கொலைகள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டு பல்வேறு குக்கிராமங்களுக்கும் தனியே போய் அங்கேயே தங்கியிருந்து இக்கொடுமையின் பல பரிமாணங்களை ஆராய்ந்தவர். இவரது ஆய்வு புத்தகமாக வெளியாகியிருக்கிறது.

இப்படி ரொம்பவும் சென்ஸிடிவான பிரச்னையை அந்தந்த இடங்களுக்கே தனியொரு பெண்மணியாகப் போய் இருந்து, பெற்ற பெண் சிசுவைத் தாமே கொன்று போட்ட தாய்மார்களைப் பார்த்துப் பேசிய அனுபவங்கள் - இந்த முயற்சியில் தாம் அடைந்த சங்கடங்கள் - ஆகியவை பற்றிச் சொல்கிறார் ஷ்யாமளா:-


• கருத்தம்மா: எதிர்மறை விளைவு

மதுரை, தர்மபுரி, சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களை என் ஆய்வுக் களமாக எடுத்துக் கொண்டேன். சிசுக் கொலை நடைபெறும் கிராமங்கள் பற்றி, பல்வேறு இடங்களிலிருந்து முதலில் தகவல் திரட்டினேன். அரசு சார்பில்லாத தொண்டு அமைப்புகளோடு தொடர்பு கொண்டேன்.

முதலில் உசிலம்பட்டியை நோக்கி என் பயணம். பத்து நாள் அங்கே இருந்து, என் ஆய்வை மேற்கொள்ள திட்டம் வகுத்திருந்தேன். முதல்நாள் மட்டும் மதுரையில் தங்க வேண்டும்.

பெயர் மட்டும் கேள்விப்பட்டு, முகம் பார்த்திராத ஒருவரிடம் மதுரையில் தங்க ஏற்பாடு செய்யும்படி சொல்லியிருந்தேன்.

ஹோட்டல் போன்ற பொது இடங்களில் தங்க எனக்கு விருப்பமில்லை என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்திருந்தேன்.

மதுரை ஸ்டேஷனில் நானும் அவரும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொண்டோம்.

காருடன் வந்திருந்த அவர் என்னை அழைத்துக் கொண்டு போய் நிறுத்தியதோ ஒரு நட்சத்திர ஹோட்டல் வாசல் முன். அங்குதான் எனக்கு ரூம் போட்டிருக்கிறார் என்பதை அறிந்ததும் உண்மையில் ஆடிப் போனேன். மனத்தில் தோன்றிய பயத்தை முகத்தில் வெளிப்படுத்தாமல் சமாளித்தேன். ஹோட்டலில் இருந்த ஒவ்வொரு நிமிடமும் முள்ளின் மேல் இருந்த நிலை.

பெண் சிசுக் கொலை பற்றி அந்த வட்டாரத்தைச் சேர்ந்த சிலருடன் பேசுவதுதான் மதுரையில் என் அந்த ஒருநாள் திட்டம். அது முழுக்க முழுக்க வீணாகப் போகிறது என்று அப்போது எனக்குத் தெரியாது.

வந்த ஒருவர், சிசுக் கொலையை விட்டு விட்டு வேறு ஏதோ பேசினார். நேரம் போய்க் கொண்டே இருந்தது.

என் துணிச்சலான பயணம், தனிமை, சூழ்நிலை எல்லாமாகச் சேர்ந்து அவர் மனதை திசை மாற்றிச் செல்வதை என்னால் உணர முடிந்தது. 'பெண் பத்திரிகையாளர் என்றால் கொஞ்சம் அப்படி இப்படி இருப்பார்கள்; இருக்க வேண்டும்' என்று நினைக்கும் பலரில் அவரும் ஒருவராக இருப்பதையும் உணர்ந்தேன்.

அச்சூழலிலிருந்து நான் உடனடியாக விடுபடத் தீர்மானித்தேன். 'பெண்களின் காவலர்' என்று மங்கையர்மலரில் ஒரு கட்டுரையின் மூலம் தெரிந்து கொண்ட அப்போதைய மதுரை ஊரக காவல்துறை அதிகாரி - எஸ்.பி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்கப் போவதாகச் சொல்லி, அந்த நண்பர் முன்னிலையிலேயே போன் செய்து பேசி

னேன். என் ஆராய்ச்சி பற்றி கேள்விப்பட்டதும் உடனே வரச் சொன்னார்.

இந்தப் போனுக்குப் பிறகு அந்த 'நண்பரி'ன் போக்கில் மாறுதலைக் கண்டேன். எனினும் முதல் நாள் அந்த அனுபவம் கசப்பாகவே மனதில் தங்கிவிட்டது.

எஸ்.பி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து என் ஆராய்ச்சியின்போது எனக்குப் பாதுகாப்பு தேவை என்று கேட்டதும் சம்பந்தப்பட்ட அனைத்துப் பகுதி போலீஸ் அதிகாரிகளுக்கும் கடிதம் கொடுத்தார். மதுரையில் அந்த ஹோட்டலுக்கும் போன் செய்து 'இந்த ஜர்னலிஸ்ட் திரும்பிப் போகும் வரை அவருக்கு ஒரு சிறு தீங்கும் ஏற்படக்கூடாது' என்று உத்தரவிட்டார். இரவு ஹோட்டலுக்குத் திரும்பினேன். ஒரே ராஜ மரியாதைதான்!

உசிலம்பட்டி. மதுரையிலிருந்து 35 கி.மீ. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் பார்த்தால் 'திக்' என்றது. சென்னையிலிருந்து வரும் பத்திரிகையாளர் ஷ்யாமாவுடன் ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சி' என்று நிறைய போஸ்டர்கள் ஒட்டி இருந்தார்கள். 'இதென்னடா வம்பு' என்று பயந்தேன். மதுரை மீனாட்சி கல்லூரியிலிருந்து அந்த முகாமுக்கு வந்திருந்த என்.எஸ்.எஸ். மாணவிகளுக்கு என் வருகை தெரிய, அவர்கள் இப்படி ஒரு திடீர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள்.

பஸ் நிலையத்திலிருந்து டாக்ஸியில் நேராக மீட்டிங்குக்கு அழைத்துப் போனார்கள். 'பெண்களுக்கான சட்ட உதவிகள் பற்றி என்னிடம் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். 'நான் வந்த விஷயம் வேறு. பெண் சிசுக்

"பாரதிராஜாவுக்கு இன்னா போச்சு?"



கொலை சம்பந்தமாக ஆராய்ச்சி செய்ய...' என்று சொல்லும்போது என் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பேராசிரியை (மீனாட்சி கல்லூரி) என் தொடையில் லேசாகக் கிள்ளி 'அதைச் சொல்லாதே' என்பது மாதிரி சாடை செய்தார்.

ஒருவழியாக அந்தக் கேள்வி பதில் நிகழ்ச்சியைச் சமாளித்த பின் அந்த அம்மாள் என்னிடம் தனியாகச் சொன்னார்:

"இதுக்குதான் நீ வந்திருக்கிறேன்னு தெரிஞ்சா இங்க சும்மா விடமாட்டாங்க. ரொம்ப ஜாக்கிரதையா பேசணும்."

சில நாட்கள் முன்பு கேரளாவிலிருந்து வந்த ஒரு பெண் இப்படித்தான் சிசுக் கொலை பற்றி கேட்கப் போய், அந்தப்

பெண்ணை பிறகு காணவேயில்லையாம். அப்புறம் பார்த்தால் ஒரு புதரில் அவர் உடல் கிடைத்ததாம்!

-சர்வசாதாரணமாய்ச் சொன்னார்கள். எனக்கு சில்லிட்டுப் போனது!

பிறகு என் அணுகுமுறையை மாற்றிக் கொண்டேன். எந்த வீட்டுக்குப் போனாலும் பத்திரிகையாளர் என்ற அடையாளத்தைச் சொல்வதில்லை. 'சும்மா கிராம வாழ்க்கை பற்றித் தெரிந்து கொள்ள வந்த ஆள்' என்று தான் சொன்னேன்.*

முதலில் குசலம் விசாரித்து, மெல்ல மெல்ல ஊர் கதை பேசி, நம்பிக்கை ஏற்படுத்தி பிறகு சப்ஜெட்டுக்கு வந்ததில் பலன் கிடைத்தது.

மெய்யணம்பட்டி என்ற குக்கிராமம். ஒரு குடும்பத்தில், பெண்களோடு பேசிக் கொண்டிருந்தேன். பெண் சிசுவைக் கொன்று விட்டதை அவர்களாகவே சொல்லிக் கொண்டிருந்த தருணம். ஆவேசமாக ஒரு ஆள் ஓடி வந்து அந்தப் பெண்மணியைக் கடிந்து கொண்டான்.

"யார் வந்தாலும் எல்லாத்தையும் சொல்லிடறதா? வாயை மூடிட்டு உள்ளே போங்கடி"

நான் அந்த ஆளை சமாதானப்படுத்தி 'ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்' என்றெல்லாம் கேட்டு, மெதுவாக அவன் கோபம் அடங்கியதும் அவனிடமே பேச்சு கொடுத்தேன். கடகடவென்று எல்லாவற்றையும் கொட்டி விட்டான்.

"என் பெண் குழந்தையை நானேதான் கொன்றேன்."

"பாரதிராஜா உங்க ஊர்ப்பக்கம்தானே. அவர் இதையெல்லாம் வச்சுதானே 'கருத்தம்மா' எடுத்தார். படம் பாத்தீங்களா?"

இதற்கு அந்த ஆள் சொன்ன பதிலில் நான் ஒருகணம் நிலை குலைந்து போனேன்.

"ஆங்... பாரதிராஜாவுக்கு இன்னா போச்சு? ஒரு சீன்லே பொட்டைக்குட்டியைக் காமிப்பார். அடுத்த சீன்ல அந்த பொண்ணு படிச்சி வளர்ந்து டாக்டரா வருவா... பொட்டைய வளர்க்க நாங்க பட்ற பாடு எங்களுக்குத்தானே தெரியும். அவருக்கு இன்னா?"

சொக்கத்தான்பட்டியில் சுப்பையா என்பவர் வீட்டுக்குப் போனேன். அவருக்குப் பெண் குழந்தை பிறந்து சில நாட்களே ஆகியிருந்தது என்றும், அதைக் கொல்ல அவர் தயாராக இருந்தபோது கலெக்டர் அவரை மிரட்டி 'கொல்ல மாட்டேன்' என்று கைப்பட லெட்டர் எழுதி வாங்கி விட்டதாகவும் எனக்குத் தகவல் கிடைத்தது.

நான் போனபோது சுப்பையா கையில் அந்தப் பெண் சிசுவை வைத்துக் கொண்டிருந்

"ஐந்து கண்டங்கள் யாவை?"
"ஆங்கிலம், கணக்கு, வரலாறு, புவியியல், அறிவியல் தேர்வுகள் ஐயா."

வெ. ராஜாராமன்

தார். நான் போனது அவருக்குப் பிடிக்க வில்லை என்பது அவர் எரிச்சலில் பேசியதிலிருந்தே தெரிந்தது.

"இன்னும் எத்தினிபேர் என்னெய வந்து பாக்கப் போறீங்க?"

"ஏன்... நான் இப்பதானே வந்தேன். இதுக்கு முன்னே யார் வந்தாங்க?"

"கலெக்டர் வந்தாரு... போலீஸ்காரங்க வந்தாங்க... இப்ப நீங்க..."

ஒரு கட்டத்தில் சுப்பையா சொன்னார்.

"எத்தினி நாளக்கு என்னெய காவல் காப்பீங்க... இந்தக் குழந்தையைத்தானே கொல்லக் கூடாதுன்னு எழுதி வாங்கியிருக்காங்க... மூத்த பொண்ணு இருக்கா... அவளைக் கொன்னுட்டுப் போறேன்..."

நடுங்கியது எனக்கு. எப்படி இப்படி அவர்களால் சிந்திக்க முடிகிறது என்றே தெரியவில்லை.

ஒரு விஷயம் கவனித்தேன். எந்த வீட்டிலும் பிறக்கும் முதல் பெண் குழந்தையைக் கொல்வதில்லை. அடுத்துப் பிறக்கும் பெண்ணுக்குத்தான் எருக்கம்பால், நெல்மணி, ஆமணக்கு எண்ணெய், ஒடுவன்தழை, உப்புத்தண்ணி எல்லாம்.

போகிற இடங்களில் எல்லாம் மூன்று மாவட்டங்களிலுமே நான் 'பிரைமரி ஹெல்த் சென்டர்'களுக்கும் போய் ஒரு நோட்டம் விட்டேன்.

தாய்மார்கள் இங்கே வந்து குழந்தை பெற்றுக் கொண்ட ஒரு மணி நேரத்துக்குள் வீடு திரும்பி விடுவது எனக்கு வியப்பாக இருந்தது.

'இங்கெல்லாம் அப்படித்தாங்க' என்றார் மருத்துவ அதிகாரி ஒருவர்.

"அதுவும் பெண் குழந்தை பிறந்தா வீடு இரும்ப ரொம்ப அவசரப்படுவாங்க. ஏன்னா உடனே போய் அந்தச் சிசுவோட கதையை முடிக்கணுமில்லே..."

மருத்துவர் சொன்ன இன்னொரு விவரமும் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"சில சமயம் பெண்களுக்கு மார்பில் பால் கட்டிக் கொள்ளும். அவசர அவசரமாக வந்து 'டாக்டர் குழந்தைக்கு பால் கொடுக்கணும். பால் கட்டிப் போச்சு. மருந்து கொடுங்க' என்று கேட்டால் அவருக்கு ஆண் குழந்தை என்று அர்த்தம். சீவி சிங்காரித்து முகத்துக்குப் பவுடர் போட்டுக் கொண்டு சினிமாவுக்குப் போவது போல வந்து 'டாக்டர்... பால் வத்தறதுக்கு மருந்து கொடுங்க என்று கேட்டால்



'சரி... பெண் குழந்தை.. கதையை முடிச்சுட்டாங்க' என்று நாங்கள் புரிந்து கொள்வோம்."

மதுரைக்கு மீண்டும் திரும்பியபோது என் காமிராவில் இருந்த பிலிம் முழுவதும் முடிந்திருந்தது. நிறைய படங்கள் எடுத்திருந்தேன். ஹோட்டலில் தங்கியிருந்தபோது பலர் வந்து என்னைப் பார்த்து 'எப்படி இருந்தது உங்கள் ஆராய்ச்சி?' என்று அக்கறையுடன் விசாரித்தார்கள். அவர்களுள் ஒருவரின் முகம் எனக்கு இதற்கு முன்பே பரிச்சயமாகி இருந்தது. உசிலம்பட்டி கிளம்புமுன் என்னிடம் பேசியவர்.

அவர் ரொம்பவும் நட்பாக என்னை விசாரித்துக் கொண்டிருந்தார். 'என்ன காமிராம்மா அது' என்று உரிமையோடு அதை எடுத்துப் பெயரைப் பார்த்தார். 'ஒலிம்பஸ்' என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வினாடியில் காமிராவைத் திறந்து பிலிம் ரோலை உருவினார். முகம் கொடூரமாக மாறியிருந்தது.

"எங்க ஊருக்கு; எங்க வீடுகளுக்கு வந்து எங்க பொம்பளங்களை போட்டோ எடுத்து... எங்க பழக்க வழக்கத்தைப் பத்தி எழுதப் போற உன்னை இந்த போட்டோங்களோட அனுப்பிடுவோமா... சத்தம் போடாம போய்ச் சேரு" என்று சர்வசாதாரணமாகச் சொல்லி விட்டு பிலிம் ரோலோடு மறைந்து போனார்!

ஒரு வினாடி என்ன நடந்தது என்றுகூடத் தெரியவில்லை.

எவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்துக் கொண்டு இந்த ஆராய்ச்சிக்காக வந்திருக்கிறோம் என்பது மட்டும் புரிந்தது.

தர்மபுரி மாவட்ட கிராமம் பென்னகரம். இப்பகுதியில் பெரமனூர் குக்கிராமத்துக்கு அருகே நான் வண்டியை நிறுத்தி சாலையில் இளநீர் அருந்தியபோது என் காமிரா, டேப் ரிகார்டர் இவற்றைப் பார்த்துவிட்டு அருகே இருந்த பள்ளிக்கூட மாணவ மாணவிகள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அனைவரும் 5-10 வயதுக்குட்பட்டவர்கள்.

வழக்கம் போல அவர்களைக் குசலம் விசாரித்துவிட்டு அவர்கள் குடும்பம் பற்றிக் கேட்டேன். ஒரு இருபது பேர் இருந்தார்கள் அங்கே.

"உங்களுக்கு அண்ணன் இருக்கானா?"

"இருக்கான்" கோரஸாக பதில்.

"அக்கா?"

"ஓ... இருக்காளே..."

"தங்கச்சிப் பாப்பா?"

சொரேல் என்றது. அவ்வளவு பேரும் மௌனம்.

இருபது பேர் வீட்டில் ஒருவருக்குக் கூடவா தங்கை இல்லாமல் இருக்கும்? அவர்களின் வாயை மேலும் கிளறினேன்.

"உங்கள்ல எத்தனை பேருக்கு தங்கச்சிப் பாப்பா பொறந்துச்சி?"

பத்து பேர் கை தூக்க, அவர்களை மட்டும் தனியே அழைத்து தட்டிக் கொடுத்து விசாரித்தேன்.

"பொறந்தவுடனேயே பாலாடைல எருக்கம்பால் ஊத்தி சாவடிச்சிட்டாங்க" - இதுவே பொதுவான பதிலாக எனக்குக் கிடைத்தது.

இந்த ஒரு வருட ஆராய்ச்சியின் முடிவில் எனக்குத் தோன்றியவை:

- அரசின் தொட்டில் குழந்தைகள் திட்டம் சுத்த வேஸ்ட். குழந்தைகளிடம் தொட்டில் போக வேண்டுமே தவிர, தொட்டிலிடம் குழந்தைகள் வராது. "எங்கேயோ அனாதையா வளர்றதைவிட நானே கொன்னு போட்டுடறேன்" இப்படிப் பல தாய்மார்கள், மாமியார்கள் என்னிடம் சொன்னார்கள்.

- அரசு திட்டமிட்டபடி குழந்தையின் பெயரில் 5000 ரூபாய் டிபாசிட் செய்வது சரியான முறையில் செய்யப்படவில்லை. வேண்டியவர், வேண்டாதவர் என்று அரசியல் விளையாடிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

- பெண் சிசுவைக் கொல்பவர்களுக்கு மரண தண்டனை என்கிற அளவுக்கு ஈவு இரக்கமின்றி சட்டத்தின் பிடியை இறுக்குவது ஒன்றே வழியாக எனக்குப் படுகிறது. மயிலே மயிலே என்றால் இறகு நிச்சயம் கிடைக்காது.

ஷ்யாமாவின் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை மணிமேகலைப் பிரசுரம் புத்தகமாக வெளியிட்டிருக்கிறது.

"இப்போதைய முதல்வர் கலைஞர் அலுவலகத்தில் இந்நூலின் ஒரு பிரதியைக் கொடுத்தபோது அவர்கள் பார்த்துவிட்டு, 'இது சி.எம்.மே பார்க்க வேண்டிய புத்தகம். வெளியீட்டு விழா வையுங்கள். சி.எம்.மே வரக்கூடும்!' என்றார்கள். பல மாதங்கள் ஆகி விட்டன. அவ்வப்போது அலுவலகத்துக்கு போன் செய்து நினைவூட்டிக் கொண்டிருக்கிறேன். பதில் இல்லை. சி.எம். இந்த நூலைப் படித்துப் பார்த்தால் அதுவே போதும் எனக்கு" என்கிறார் ஷ்யாமா.

பேட்டி - **ராணிமைந்தன்**

படம்: **யோகா**

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு சவரன்

போட்டி - 7;

முடிவு



பயத்தை - திகிலை ஏற்படுத்திய அனுபவம்


●● பொறியியல் இரண்டாம் ஆண்டு பயிலும் நான், சென்ற வருட இறுதியில் வேதியியல் செய்முறைத் தேர்வு அன்று மறக்க முடியாத திகில் அனுபவம் ஒன்றைப் பெற்றேன். 'டைட்ரேஷன்' செய்து, முடிவினை, கண்காணிப்பாளரிடம் காட்டியபோது வெறும் ஐந்து மதிப்பெண்கள் தந்தார்! 'கப்'பென்று பயம் பிடித்துக் கொண்டது. நாற்பதுக்கு ஐந்து மதிப்பெண் என்றால் நிச்சயம் ஃபெயில்! ஆனால் சரியாகத்தானே செய்தேன்? பயம் கல்விக் 'கொல்ல' மீண்டும் அதே டைட்ரேஷனைக் கண்காணிப்பாளர் முன் செய்து, அதே விடை வருவதைக் காட்டினேன். அவர் விடைத்தாளையும் என் டேபிள் நம்பரையும் உற்றுப் பார்த்தார். பிறகுதான் தன் தவறை உணர்ந்தார். என் டேபிள் எண்ணைத் தவறாக மாற்றிக் கருதி, வேறு விடை வர வேண்டும் என்று கருதி விட்டார்! இறுதியில் ஐந்து, நாற்பதாக மாற, என் பயம் நீங்கி புத்துணர்ச்சி கொண்டேன்.

ந. பாலாஜி, மதுரை -2.

●● துப்பாக்கி சப்தத்தை சினிமாவில் மட்டுமே கேட்டவள் நான். ஆனால் தொழில்ரீதியில் என் கணவருடன் நைஜீரியாவில் சில காலம் இருந்தபோது , அங்கே அடிக்கடி துப்பாக்கி வெடிப்பதை நேரில் கண்டு திகலடைந்திருக்கிறேன். ஒருநாள்... சூப்பர் மார்க்கெட் சென்றபோது என்னையும் என் கணவரையுமே தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் நிறுத்தி விட்டார்கள்! உயிர் பயம். திகில். குலை நடுக்கம்! எங்கள் உயிர் போனாலும் பரவாயில்லை. காரில் இருந்த எங்கள் குழந்தையை வேறு, ஒருவன் துப்பாக்கி முனையில் கடத்திப் போய்விட, பயந்து நடுங்கி விட்டோம். ஒருவழியாக நாங்கள் தப்பித்து, குழந்தையை அன்று முழுக்கத் தேடி.. வேறோர் இடத்தில் அது பத்திரமாக மீட்கப்பட்டு, எங்களிடம் சேர்ப்பிக்கப்படும்வரை பட்ட கலக்கம் இருக்கிறதே... ஐயோ!

லலிதா சிவசைலம், நெல்லை-7.

●● எனக்குப் பத்து வயதாக இருந்தபோது. நான் நடனம் பயின்ற குழுவினருடன் முதல் முதலாக வெளியூர் நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். 'மார்க்கண்டேயன்' நடன நாடகத்தில் எனக்கு சிவன் வேடம். அமர்க்களமாக ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தபோது, வெளியே திடீரென்று அதிர்வேட்டுச் சப்தம்! சுவாமி புறப்பாடு போலும்! ஏற்கெனவே வேட்டு என்றால் எனக்குப் பயம். திடீரென்று காதைப் பிளக்கும் ஓசை வரவே,



நான் அலறிக்கொண்டு எமனாக நடித்த வரைப் பாய்ந்து பிடித்துக் கொண்டு விட்டேன்! எமனிடம் அடைக்கலம் போன 'சிவனை'க் கண்டு, கூடியிருந்தோர் சிரிக்க, எனக்கே ஒருமாதிரி ஆகிவிட்டது!

மீனாட்சி பட்டாபிராமன், மதுரை-3.

●● நான் எம்.டி. தடய மருத்துவம் படித்துக் கொண்டிருந்தபோது (1993-ல்) ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். அன்று இரவு நடந்த பிரேதப் பரிசோதனையில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. மறுநாள் என் டிப்பார்ட்மென்ட்டில் அவரது உடல் உறுப்புகள், துணிகள், ஷூ - இவற்றைப் பரிசோதனை செய்ய வேண்டி வந்தது. திறந்து பார்த்தபோது அடைந்த திகில் இருக்கிறதே, அப்பா!

ஏ.கே. பிரபு, முகலூர்.



●● அஸ்ஸாமில் ஒரு நிறுவனத்துக்கு ஆடிட் விஷயமாகச் சென்றிருந்தேன். வாட்ச்மேன் என்னிடம், "சார், நீங்கள் இந்தத் தோட்ட வீட்டில் இன்று இரவு தங்க வேண்டாம். என் வீட்டுக்கு வந்து விடுங்கள்!" என்றான். காரணம் முன்பொரு சமயம் அங்கே ஒருவர் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டாராம். அவர் இறந்த தினம், அன்றுதான்! "நிச்சயம் அந்த ஆவி அங்கு வரும்" என்பது அவன் சொன்ன காரணம். எதற்கு ரிஸ்க் என்று நானும் அவன் வீட்டுக்கே வந்து விடுவதாகச் சொன்னாலும் பல காரணங்களால் அன்று இரவு பணி முடியத் தாமதமாகிவிட, சொன்னதுபோல் போக முடியவில்லை. அங்கேயே படுத்துவிட்டேன்.

நள்ளிரவு, திடீரென்று கரென்ட் போனது. ஏற்றி வைத்த மெழுகு வர்த்தி அணைந்துவிடும்படி, எதிர்பாராமல் காற்று பலமாக வீசத் தொடங்கியது. கதவுகள் படபடவெனத் தாமே அடித்துக் கொள்ள,

மணி பார்க்க, டைம்பீஸைத் தேடினேன். டேபிள் மேலிருந்த டைம்பீஸ் தடாலென்று கீழே விழுந்து உடைந்தது! காற்று என்றால் அப்படி ஒரு காற்று! திகிலில் உறைந்து போனேன். வாட்ச்மேன் சொன்னதைக் கேட்காமல் போனேனே என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு, பயந்து நடுங்கினேன். நாற்காலி மேசைகளெல்லாம்வேறு தாமாக ஆடத் தொடங்கின! அந்த இரவு கொடூரமாகக் கழிய, கடவுள் புண்ணியத்தில் தப்பித்தேன் என்று நினைத்துக் கொண்டேன்.

மறுநாள் செய்தி வந்தது. அஸ்ஸாமில் அன்றிரவு 7.5 ரிக்டர் நில நடுக்கம்! நான் திகிலடைய நேர்ந்தது ஆவியால் அல்ல; பூகம் பத்தால்!

என். சுப்ரமணியன், கும்பகோணம்.

●● ஒரு திருமணத்தில் கலந்து கொள்ள குக் கிராமம் ஒன்றுக்குச் சென்றேன். எனக்குத் தங்கக் கிடைத்த வீடு மிகப் பழையது. கல் வீடு அது ஒன்றுதான் அங்கே. இரவு மொட்டை மாடியில் படுத்துக் கொண்டேன். தூக்கமின்றி இரவு நான் புரண்டு கொண்டிருக்க, திடீரென்று மாடிப் படியில் அரவம் கேட்டது. திக்கென்றது. மெதுவாக எழுந்து, எட்டிப் பார்த்தேன். ஒரு சிறிய தீச்சுடர் படியேறி வருவது போலிருந்தது. என் இதயத்தில் லப்டப் கூடியது! கண்களைக் கூர்மையாக்கி உற்றுப் பார்க்க, மேலும் அதிர்ச்சி! கறுப்பு உடையணிந்த ஓர் உருவம் படியேறி வருவது போலத் தோன்றியது. கூடவே ஒரு நாற்றம். என்ன அது? உடம்பு நடுங்கியது. "யாரது?" என்று மெதுவாகக் குரல் கொடுத்தேன். திகில் போகவில்லை. கொள்ளிவாய்ப்



பிசாசோ? அலறிக் கொண்டு, மீண்டும் 'யாரது?' என்றபோதுதான் தெரிந்தது! கையில் புகையும் சுருட்டுடன் அது... அந்த வீட்டு மூதாட்டி!

சுருட்டுப் பிடித்தால்தான் உடல் வலி, ஜலதோஷம் குறைகிறதாம்! பிறரின் கேலிக்குப் பயந்து, இரவில் புகைப்பதை அவர் கூற, என் கிலி மறைந்து, சிரிப்பு பீறிட்டது.

ப. உத்தண்டராமன், நெய்வேலி.

●● 1984ம் வருடம். இந்திராகாந்தி இறந்த மறுநாள். குண்டர்கள், சர்தார்ஜிக்களை வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள், புது தில்லியில். என்னதான் நடக்கிறது என்று பார்க்கிற ஆவலில் வீட்டிலிருந்து புறப்பட்டு, சப்தர்ஜங் விமான நிலையம் பக்கம் போனேன். 50, 60 பேர் அங்கே கையில் பல ஆயுதங்களுடன் காத்திருந்தார்கள். தற்செயலாக அந்தப் பக்கம் ஸ்கூட்டரில் மனைவி, குழந்தையுடன் வந்து கொண்டிருந்த ஒரு சர்தார்ஜியை நிறுத்தி இறக்கி, தபதபவென அவர் மேல் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்த, பயத்தில் வெலவெலத்துப் போனேன்! ஓடிப் போய் ஒருவனிடம், "யாரோ ஒரு சிங் செய்த தவறுக்கு நீங்கள் இப்படிக் கண்ணில் படுகிறவர்களையெல்லாம் கொல்வது நியாயமா?" என்று கேட்டேன். அவ்வளவுதான். "மாரோ" என்று அத்தனைபேரும் என்னைக் குறி வைத்துத் தாக்க ஓடிவர, பிடித்தேன் ஓட்டம்! குலை நடுங்க ஓடித் தப்பித்த அந்த அனுபவம் ஆயுசுக்கும் மறக்காது!

டி. மகாராஜன், புதுதில்லி-21.

●● பள்ளி இறுதி வகுப்பு முடிந்து, கோடையில் என் தந்தையுடன் மாட்டுவண்டி எடுத்துக் கொண்டு கண்மாய்க்கரைக்குச் சென்றேன், வயலுக்கு வண்டல்மண் கொண்டு வர. மாடுகள் இரண்டும் கன்றுகளாக இருந்ததிலிருந்தே பழகியவை. ஆகையால் மண் நிறைந்து, நான் ஏறியவுடன் அவை தன்னால் கிளம்பிவிடும்.

அப்படித்தான் அன்று மண் நிறைத்து, நான் வண்டியில் ஏறிய சமயம் கால் தடுக்கி, சக்கரத்துக்கு நேராகத் தலை இருக்கும்படி விழுந்து விட்டேன். நான் ஏறியது தெரிந்ததும் மாடுகள் புறப்பட்டு விடும்! அவ்வளவுதான். சக்கரத்தில் மிதிபட்டு, என்ன ஆகப் போகிறதோ என்று அந்தச் சில விநாடிகளில் குலை நடுங்கி விட்டது!

ஆனால் நான் அமராததை கவனித்து அவை கிளம்பவில்லை! என் தந்தை என்னை வாரி அணைத்துக் கொண்டதை இன்று நினைத்தாலும் அந்தச் சில விநாடி



திகில் எட்டிப் பார்த்துப் போகிறது.

பி. மாரிமுத்து,
பெங்களூர் -43.

●● 1965ல் இந்தியா - பாக் போரில் Khem Karam Sector-ல் பாகிஸ்தான் விமானத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த சமயம். எங்கள் படைப் பிரிவில் நாலைந்து பேர் இறந்துவிட, தூரத்தில் வேறொரு நண்பன் படுக்கக் கண்ட நான், "சற்று மறைவாகச் சென்று படு" என்று எச்சரித்தேன். ஆனால் அவன் அசையவில்லை. தாக்கப் போகிறார்களே என்ற பயம் ஒருபுறம்; நண்பன் இப்படி வெட்டவெளியில் படுத்து விட்டானே என்ற கவலை ஒருபுறம்... கிட்டே போய், "மறைவாகப் போய்ப் படு, சீக்கிரம்!" என்றபடி நான் அவனை உலுக்க - அப்போது தான் அவன் இறந்து வீழ்ந்திருப்பது தெரிந்தது! இந்நிகழ்ச்சி தந்த பயமும் திகிலும் இன்றும் மறக்க முடியாதது.

வி. வாசுதேவன், திருச்சி - 21.

●● பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு பெண், "என்னைக் காப்பாத்துங்க!" என்று அலறியபடி ஓடி வர, என்ன ஏது என்று புரியும் முன் அவளைத் துரத்தி வந்தவன் கையிலிருந்த அரிவாளால் அவள் தலையைச் சீவி, ரத்தம் பெருகியது! குலை நடுங்கிவிட்டது. அவர்கள் கணவன் - மனைவியா? குடும்பச் சண்டையா - ஏதும் புரியவில்லை. ரத்தம் சொட்டிய அரிவாளுடன் அவன் போலீஸில் தானே சரண்டராகிப் போன காட்சியை நினைத்தால் போதும்! பயத்தில் உறைந்து விடுவேன்.

எம். சிவக்குமார், விழுப்புரம்.

●● இருபது ஆண்டுகளுக்கு முன்பு மின் பொறியாளர் உஸ்மானும் நானும் டெஹ்ரானில் பணிபுரிந்தபோது, அங்குள்ள சுற்றுலாத் தலம் (மலை) ஒன்றுக்கு கேபிள் கார் மூலம் சென்றோம். திரும்பும் வழியில், அசட்டுத் தைரியத்தில் ஒரு மீட்டர் அகலமுள்ள, சுற்றுப் பாதை வழியாக இறங்கினோம். கீழே 2000 அடி பாதாளம். உறைபனி வழுக்கும் பாதை. நண்பர், ஓரிடத்தில் இற்றுப் போயிருந்த கம்பி ஒன்றைப் பற்றுக் கோலாகப் பிடிக்க, கம்பி அறுந்து, சமநிலை தவறி, அவர் பாதாளத்தில் விழும் நிலை. பொறி கலங்கிய நான், உயிரைப் பணயம் வைத்து, அவர் காலைப் பாய்ந்து இழுத்துப் போட்டேன். எப்படியோ இருவரும், ஒருவழியாகக் கீழே இறங்கினோம்! அதிர்ச்சியிலிருந்து மீள ஒரு வாரமானது.

கே.எம். ஜக்கரியா, எலந்தங்குடி.

●● நான் புவனேஸ்வரில் இருந்தபோது சனிக்கிழமை தோறும் என் சித்தப்பாவைக் காண Charbalia செல்வேன். ரயிலில் இப்படி என்னைத் தொடர்ந்து கவனித்த ஒரு ரவுடிக் கூட்டம் ஒருநாள் கம்பார்ட்மெண்ட்டில் வேறு யாரும் இல்லாத சமயம் பார்த்து என்னைச் சூழ்ந்து கொள்ள, எனக்கு கிலி பிடித்துக் கொண்டது.


சட்டென்று ஒருவன் பல்புகளை உடைத்தான். இருள். பயம். நான் பதறி எழுந்து கதவருகே சென்றேன். இறங்கவிடாமல் ஒருவன் வழி மறிக்க, நல்லவேளையாக 'Charbalia' என்ற போர்டு தெரிய, துணிந்து "Look there! my military uncle is waiting for me" என்றேன். அவன் கவனம் விலக, டக்கென்று ரயிலிலிருந்து குதித்து விட்டேன். நல்ல காலம், ரயில் மெதுவாகச் சென்றதால் அதிக அடிபடவில்லை. ஸ்டேஷன் வரச் சற்றே தாமதித்திருந்தால்? நினைத்தாலே குலை நடுங்குகிறது!

கே. பாமா, திருவனந்தபுரம்-13.

இந்த வாரம் ஒரு சவரன் பெறும் வாசகர்:
டி. மகாராஜன்,
C/o. குல்பிகிஷன், ஐ.பி.எஸ்,
D11. 224 வினய் மார்க்,
புதுதில்லி - 110 021.

பெண்களுக்குத் தனி இடஒதுக்கீடு தேவை என்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வருகிறார்கள். அதற்கான சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படியொரு புதிய இடஒதுக்கீடு தேவைதானா? இதனால் பெண்கள் முன்னேற்றமடைந்து விடுவார்களா? வழக்குரைஞர் கே.எம். விஜயனும் பி.யு.சி.எல். (மனித உரிமைக் கழகம்) செயலாளரும் வழக்குரைஞருமான சுதா ராமலிங்கமும் இங்கே காரசாரமாக விவாதிக்கிறார்கள்....

இந்த மாற்றமெல்லாம் வெறும் மேல்பூச்சுதான்!



விஜயன் : முதலிலேயே ஒன்றைச் சொல்லி விடுகிறேன். பெண்களுக்கு உரிமை கொடுப்பதில் நான் ஒன்றும் எதிரி அல்ல. அதே போலப் பெண்ணியம் பேசும் நீங்கள் ஆண்களுக்கு எதிரியும் அல்ல. ஆனால், இடஒதுக்கீடு விஷயத்தில் நாம் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கிறோம். இதில் எவ்வளவு தூரம் நியாயம் இருக்கிறது என்பதுதான் இந்த விவாதத்தின் ஆதாரமான கேள்வி. முதலில் ஒன்று கேட்க விரும்புகிறேன். 1950-ல் அரசியல் அமைப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இன்று – 1997 வரை, ஒதுக்கீடு இல்லை என்ற காரணத்துக்காக, பெண்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கோ, வோட்டுப் போடுவதற்கோ தடை ஏதும் இருந்திருக்கிறதா?

சுதா : நீங்கள் குறிப்பிட்டவை அடிப்படை உரிமைகள். ஆனால் நடைமுறை என்பது பெண்களுக்குச் சாதகமாக இல்லையே!

இடஒதுக்கீடு தேவைதானா? - காரசாரமான விவாதம்

இப்போ, ஒழுங்காகப் படிக்கவில்லை என்றால் குழந்தைகளை என்ன செய்கிறோம்? நாலு உதை கொடுத்துப் படிக்க வைக்கிறோம். அது போல, அரசியல் சட்டம் தருகிற சமத்துவம், நடைமுறையில் முழுப்பயனையும் தரவேண்டும் என்பதற்காகத்தான் இடஒதுக்கீடு தேவை என்கிறோம்.

விஜயன் : பெண்கள் சம உரிமை பெற முடிவதில்லை என்பது உண்மைதான். சில

ருக்கிறதே! பெண்கள் முதலமைச்சராக, பிரதம மந்திரியாக இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அமைச்சரவையிலேயே எத்தனை பெண்கள் மந்திரிகளாக இருந்திருக்கிறார்கள்? அதிகபட்சம் ஒன்றே ஒன்று. அதுவும் சமூக நலத்துறைக்கு! அதனால் சட்டவழியில் இட ஒதுக்கீடு வரவில்லையென்றால் ஈக்வாலிடி வராது.

விஜயன் : ஆனாலும் கூட, அரசியல்ரீதியாக இடஒதுக்கீடு என்கிறபோது அது திணிக்கப்படுவதாகத்தான் நான் கருதுகிறேன். என் குடும்பத்திலேயே என் சகோதரர் - சகோதரி குழந்தைகளிடம் பேசும் போது, 'எங்களுக்கு யாரோட தயவும் வேண்டாம். நாங்க மெரிட்

பெண் ஒரு தலித்!

சயங்களில் பெண்களின் சமஉரிமையை நிலைநாட்டுவதற்காக உச்சநீதிமன்றம் தலையிட வேண்டியிருக்கிறது என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒதுக்கீடு ஏன்? 'சில குறிப்பிட்ட விஷயங்களில் மட்டும், பெண்களுக்குக் கூடுதல் சலுகை தேவையாய் இருக்கிறது; ஆனால் ஈக்வாலிடிதான் சட்டத்திலிருக்கிறது' என்று வி.ஆர். கிருஷ்ணய்யர் சொல்லியிருக்கிறார். இந்த ஈக்வாலிடி என்ற தத்துவத்துக்குக் கேவலமானது அல்லவா இடஒதுக்கீடு? இட ஒதுக்கீடு என்பதே ஒரு கெட்டவார்த்தையல்லவா!

சுதா : கெட்ட வார்த்தை என்பதை நீங்கள் எந்த அர்த்தத்தில் சொல்கிறீர்கள்? ஈக்வாலிடி என்பதே 50 சதவிகிதம் அல்லவா? இப்போது 33 சதவீதத்துக்கே போராட வேண்டிய



டுலயே படிச்சு முன்னுக்கு வந்துக்கறோம்'னு தான் சொல்றாங்க.

சுதா : நீங்கள் சொல்றது நகரத்து மக்கள் பற்றி. அதுலயும் பொருளாதார அளவிலும் கல்வியிலும் முன்னேறிய சொசைடியைச் சேர்ந்தவர்களைப் பற்றி. நீங்கள் தயவுசெய்து நகரத்தை விட்டு கிராமத்துப் பெண்களைப் பாருங்கள். மெஜாரிடியாக படிக்காத பெண்கள்தாம் இருக்கிறார்கள். ஓரளவுக்கு அவர்களைப் பிடித்துத் தூக்கிவிடறதுதானே நியாயம் – போலியோ குழந்தைகளுக்கு ஸ்பெஷல் அட்டென்ஷன் கொடுக்கிறோமே, அந்த மாதிரி. ஈக்வாலிடியையும் ரிசர்வேஷனையும் ஒப்பிடாதீர்கள். வாய்ப்புக்கள் ஆணை விடப் பெண்ணுக்குக் குறைவாக இருப்பதால்தான் ஒதுக்கீடு தேவை என்கிறோம்.

விஜயன் : பெண்களுக்குக் கிராமங்களில் சமஉரிமை கொடுப்பதில்லை என்பதில் எனக்கும் இரண்டாவது கருத்தே கிடையாது. அரசியல் அதிகாரம் கொடுப்பதால் மட்டும் பெண்கள் உரிமை பெற்று விடுவார்கள், பெண்ணியம் வளர்ந்து வரும் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அரசியலுக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் இருந்தால், தேர்தலில் நின்று வெற்றி பெற்று வரலாம். அதில் எந்தவிதமான தடையும் இல்லையே! ஒரு குறிப்பிட்ட தொகுதியில் பெண்கள்தான் நிற்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வருவானேன்? அப்படி இருந்தால், நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் – சமூகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கழிசடைகளும் இருப்பார்கள் – ஒரு கழிசடைக்கு நான் வோட்டுப் போட்டாக வேண்டுமே!

சுதா : கழிசடைகள் ஆண்களில் இல்லையா என்ன? இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், முக்கால்வாசி பாலிடிஷியன்கள் கழிசடைகள்தான் என்பதை அவர்களே நிரூபிச்சுக் காட்டி இருக்காங்க. அப்படிப்பட்ட கழிசடைகளை ஆதரிக்க எந்தவிதமான தயக்கமும் காட்டாத நீங்க, பெண்கள்ல ஒண்ணு ரெண்டு பேர் வரபோது ஏன் தடுக்கணும்? ஒரு தொகுதியில் நூறு பெண்கள் நின்னா, அந்த நூறு பேர்ல யாரு நல்லவளோ, அவளுக்கு வோட்டுப் போடலாமே? பெண்கள்தான் பெண்கள் முன்னேற்றத்துக்கு உதவி செய்வாங்கங்கறதை நானும் ஒப்புக்கலே. ராஜாராம்மோகன்ராய், பெரியார் – இவர்களை விடப் பெரிய சீர்திருத்தவாதிகள் யாரும் இருந்துவிட முடியாது. பெண்கள் காவல் நிலையத்திலேயே அக்கிரமங்கள் நடக்குது. என்றாலும் இதையெல்லாம் காரணமாகக் காட்டி இடஒதுக்கீடே தேவையில்லை என்று சொல்வது சரியான வாதமுமல்ல; நியாயமுமல்ல.

விஜயன் : இப்போது பெண் முதல்வராய் இருந்த ஜெயலலிதாவையே எடுத்துக் கொள்வோம். அவர் விரும்பியிருந்தால் தமது கட்சியில் 33 சதவித இடத்தைப் பெண்களுக்குக் கொடுத்திருக்க முடியாதா? அதே மாதிரி ஒவ்வொரு கட்சியும் செய்திருக்கலாமே? இப்படி, ஒரு கட்சி அரசியல் அளவிலேயே செய்து முடித்துவிடக்கூடிய விஷயத்தை, அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வந்துதான் தீர்க்க வேண்டுமா? இப்படிச் செய்வது சமுதாயத்தை இரண்டாகப் பிரித்து விடுவது மாதிரி எனக்குத் தோன்றுகிறது.

சுதா : நீங்க சொல்றது எப்படி இருக்கிறது என்றால், மானேஜ்மென்டே தாமாக முன்னுக்கு வந்து மடர்னிடி சலுகை கொடுத்துட்டா சட்டமே வேண்டாம்; மானேஜ்மென்ட் தாமாகவே முன்வந்து போனஸ் கொடுத்துடறேன்னு சொல்லிட்டா சட்டமே வேண்டாம்; எல்லா குற்றவாளிகளும் அவங்களாவே திருந்திட்டா போலீஸே வேண்டாம் என்கிற மாதிரி இருக்கு. இது சாத்தியமா? அதனால் சட்டங்களை முறைப்படுத்த – ரெகுலேட் செய்ய – பெண்களுக்கு இடஒதுக்கீட்டு முறை அவசியம். சமத்துவம் என்கிற நிலையை உண்மையாவே அடைகிற வரை, இடஒதுக்கீடு அவசியம்தான்.

விஜயன் : இதை அடைகிற வரை, அதை அடைகிற வரை என்பதெல்லாம் இந்த மாதிரி விஷயங்களில் பொருந்தாது. ஈக்வாலிடி என்பது 50-ம் 50-ம் நூறு என்கிற மாதிரியான கணித சம்பந்தப்பட்ட பிரச்னை அல்ல. சமுதாயம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு கணித ரீதியிலான தீர்வு காண முடியாது. பெரும்பாலான, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தாமாகக் கொண்டுவர முடியாத மாற்றத்தை, நாடாளுமன்றத்தில் சட்டம் போட்டுத்தான் கொண்டு வர வேண்



டும் என்பது ஏற்கக்கூடியதாய் இல்லை. கடந்த பத்து வருஷங்களாக +2, இஞ்சினீயரிங், மெடிகல் என்று எல்லாவற்றிலுமே பெண்கள் ஆண்களை முந்திக் கொண்டு முன்னால் வந்து நிற்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி போட்டிகளின் மூலமாக வருகிறவர்களின் தரம் - க்வாலிடியே - வேறாக இருக்கிறது. அதனால், போட்டியின் மூலம் வரக்கூடிய ஆதாயத்தை விட, திணிக்கப்படுவதனால் வரக்கூடிய பாதகம்தான் பளிச்சென்று தெரிகிறது. ரிசர்வேஷன் என்றாலே திணிக்கப்படும் அம்சம்தான் தலைதூக்கி நிற்கிறது. திணிக்கப்படும்போது, மோசமானதுதான் நமக்குக் கிடைக்கிறது!

சுதா : இடஒதுக்கீட்டின் மூலமாக குறிப்பிட்ட தொகுதிகளில், பெண்கள் போட்டியிட ஒரு வாய்ப்புக் கொடுக்கிறோம். ஏனென்றால் அந்த இடங்களில் ஆண்களோடு பெண்கள் போட்டியிட்டு ஜெயிக்க முடியாது என்ற காரணத்தால். இதில் கம்பல்ஷன் என்கிற அம்சமே கிடையாது - அந்தத் தொகுதியில் ஆண்கள் போட்டியிடக் கூடாது என்பதைத் தவிர. எத்தனை கட்சிகள் பெண்களுக்கு சீட் கொடுக்கிறது? சட்டம் என்று ஒன்று இருந்துவிட்டால், இப்படி ஒரு நிர்ப்பந்தம் இருக்கத்தான் செய்யும். அப்போதுதான் அது சாத்தியமாகும். வளர்ந்த நாடுகளில் கூட இல்லாத சில சட்டங்கள், உதாரணமாக பெண்களுக்கான சொத்துரிமை இந்தியாவில்தான் முதன் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேர்தல் என்கிற நடைமுறை வந்தபோதும் 1950ல் இந்தியாதான் முறையான சட்டம் கொண்டு வந்தது. எலக்ஷன்னு வந்தால், தகுதி ஒன்றுதான் அடிப்படையாகக் கருதப்படும். ரிலே ரேஸ் மாதிரி சலுகை கொடுக்க முடியாது. முன்னேறிய நாடுகளில் கூட, பெண்களுக்கான எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டுவிடுவதில்லை. நானே வாஷிங்டனில் ஒரு பெண்கள் பேரணியில் கலந்து கொள்ளப் போயிருந்தேன். எத்தனையோ உரிமைகளுக்காக அவர்கள் இன்னும் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.



விஜயன் : பிரச்னைகளில் ஆண்கள் பிரச்னை, பெண்கள் பிரச்னை என்று பிரித்துப் பார்க்கக் கூடாது... விலைவாசி ஏறினால் அது இருவரையும் பாதிக்கிற ஒரு விஷயம் தானே!

சுதா : ரேஷன் கடைகளில் உணவுப் பண்டங்கள் சரியாக விநியோகம் செய்யப்படவில்லை என்றால், ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் அந்தப் பிரச்னையை நாங்கள்தான் எடுத்துக் கொள்ளுகிறோம்! பொதுவான பிரச்னைகளிலிருந்து நாங்கள் தனியாக ஒதுங்கி இருந்துவிட்டு, எங்களுக்குத் தேவையான பிரச்னைகளில் மட்டுமே போராடுவதில்லை. இன்றைக்குப் பெண் ஒரு தலித். ஒடுக்கப்பட்டிருக்கிறாள். அவளுக்கு உரிமைகள் வேண்டும். அதனால்தான் அவளுக்கு ரிசர்வேஷன் தேவைப்படுகிறது.

விஜயன் : அடிப்படையாகச் சில மாறுதல்கள் வந்தால் போதும் என்று நான் தனிப்பட்ட முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முறைப்படுத்தப்பட்ட பொது விநியோக முறை, முறையான போக்குவரத்து அமைப்பு; ஒருங்கிணைந்த கல்வி - வேலை வாய்ப்புத் திட்டம்... இந்த மாறுதல்கள் வந்தாலே போதும். பொருளாதார வழிமுறை அல்லது எகனாமிக் ஆர்டர் மாறுபடுகிறபோது மற்ற மனோபாவங்களும் மாறும். ஆனால் இப்படி சமூகத்தைப் பெண்கள் சமூகம், தாழ்த்தப்பட்ட சமூகம், பிற்படுத்தப்பட்ட சமூகம் என்று பிரித்துப் பிரித்து வைக்கும்போது, அவை எல்லாம் சேர்ந்து ஒருநாள் அடிப்படைகளையே தாக்கி விடுமோ என்ற பயம் எனக்கு இருக்கிறது.

சுதா : நீங்கள் பயப்படத் தேவையே இல்லை. உங்கள் பயமே ஆதாரம் அற்றது.

விஜயன் : முன்பு கணவன் அடுப்படியில் மனைவிக்கு உதவினாலோ, பள்ளிக்கூடம் போகிற குழந்தைக்கு ஷூ லேஸ் கட்டிவிட்டாலோ அதையே பத்திரிகைகளில் ஜோக் ஆகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று பல கணவர்கள் அதை நிஜவாழ்க்கையில் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவே ஒரு மாற்

நம்தான்.

சுதா : ஆண் ஏதோ அடுக்களையில் பெண்ணுக்குக் கறிகாய் நறுக்கிக் கொடுத்து உதவுவதை வைத்து, அவன் பெண், எம்.பி. ஆக வருவதற்கும் வழிசெய்வான் என்பதை நான் நம்ப மாட்டேன். அப்படி அவனிடமிருந்து ஒரு சலுகையையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

விஜயன் : நான் அப்படிச் சொல்லவில்லை.

சுதா : வீட்டிலே கறிகாய் நறுக்கிக் கொடுத்து, ஷூ லேஸ் போடுவதே பெரிய தியாகம் மாதிரி நீங்கள் சொல்லுகிறீர்களா?

விஜயன் : தியாகம்னு நான் சொல்ல வரவில்லை...

சுதா : நோ. நோ. இருங்கள். அப்படி அடுப்படியில் கணவன் உதவுவதும், பள்ளிக்கூடம் போகிற குழந்தைக்கு ஷூ லேஸ் கட்டிவிடுவதும் கூட ஒரு எகனாமிக் ஆர்டர் மாற்றத்தினால்தான். ஏன் என்றால் அவளும் சம்பாதித்துக் கொண்டு வருகிறாள் என்பதனால்தான்!

விஜயன் : பல முனிசிபல் வார்டு தொகுதிகளில் பெண்கள் நின்று ஜெயித்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களோடு அவளது கணவரும் வந்துதான் நம்மிடம் பேசுகிறார்கள். அதனால் பெண்களைத் தேர்ந்தெடுத்த போதும் ஆண்களின் ஆதரவு தேவையாகத்தான் இருக்கிறது.

சுதா : இப்போது அப்படி ஒரு சார்புத் தன்மை இருக்கலாம். ஆனால் வருங்காலத்தில் முழுக்க முழுக்க இப்படியேதான் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு கவுன்சில் மீட்டிங்குல, தம் கணவரையும் உள்ளே அனுமதிக்கணும், ஏன்னா அவரால்தான் சரியாக பதில் சொல்ல முடியும்னு ஒரு பெண் பிரதிநிதி சொன்னதாகக் கேள்விப்பட்டேன். ஆரம்பத்துல இது எல்லாம் இருக்கலாம். காலப்போக்கில் இது சரியாகி விடும். ஒரு மாற்றம் என்று வரும்போது இதுமாதிரி சில ஆரம்பப் பிரச்னைகள் வரலாம்.

விஜயன் : உங்கள் பி.யூ.சி.எல்.லின் கோஷம் என்ன? தேர்தலின் போது – நல்லவர்கள் தேர்தலுக்கு நிற்பதில்லை என்பது தானே? அப்போது நல்லவர்கள் மட்டும் வர, ஏன் ரிசர்வேஷன் வைக்கக் கூடாது?

சுதா : நல்லவர், கெட்டவர் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? ஆணா, பெண்ணா என்று வேண்டுமானால் கண்டுபிடிக்கலாம்...

விஜயன் : ஏன், படிப்பறிவு இருக்கிற, நாணயம் இருக்கிற, நேர்மையான நபரைத் தேர்ந்தெடுக்கிற வழிவகை செய்யற ஒரு முழு மாற்றத்துக்கு வழி தேடுகிற சட்டத்துக்காகப் போராடலாமே? பிரபோர்ஷனல் ரிசர்வேஷன் என்கிற விகிதாசார முறையில் தேர்தல் நடத்தினால், ஒவ்வொரு கட்சியிலும் பர்சென்டேஜ் அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறபோது நிறையப் பெண்கள் சட்டசபைக்கும், நாடாளுமன்றத்துக்கும் வருவதை வரவேற்கலாம்.

சுதா : நாங்கள் அதுவரை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. விகிதாசார முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என்று நீங்கள் – ஆண்கள் – விரும்பினால் அதற்காகப் போராடுங்கள். அதற்காக எங்களை ஏன் காக்க வைக்கிறீர்கள்? பெரிய பலன்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறிய பலன்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டும் என்பதை நான் ஏற்க மாட்டேன். உயர்கல்வி எல்லாருக்கும் கிடைக்கும் என்பதுதான் குறிக்கோள். அதனால் அதை அடைகிற வரை பிரைமரி எஜுகேஷனை உனக்குத் தர மாட்டேன் என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறது நீங்கள் சொல்லுவது!

விஜயன் : ஆனால் இதுமாதிரியான மாற்றங்கள் எல்லாம் காஸ்மெடிக் ரெமடி (வெறும் மேல்பூச்சான தீர்வு) ஆன சமாசாரங்கள்...

சுதா : உங்கள் காஸ்மெடிக் ரெமடி என்ற வார்த்தையை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அவர்களுக்கு உரிமைகள் கொடுங்கள். அது முக்கியம்.

விஜயன் : அப்போ வேறு எத்தனையோ விஷயங்கள் இருக்க, இடஒதுக்கீடு மட்டும் கொடுங்கள் என்று கேட்பது எப்படிச் சரியாகும்?

சுதா : வேறு எத்தனையோ விஷயங்களும் இருக்கின்றன என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன்....

விஜயன் : அப்போது, வேறு எல்லா விஷயங்களையும் சௌகரியத்துக்காக ஒதுக்கி விட்டு, இதை மட்டும் பிடித்துக் கொண்டு

"தலைவர் எந்தக் காரியத்தையும் முழுசா முடிக்க மாட்டார்னு தெரியும். இருந்தாலும் இப்படியா?"

"ஏன்?"

"ஒரு பக்க மீசைக்கு மட்டும் 'டை' அடிச்சுட்டு, ஒரு பக்கம் அப்படியே விட்டிருக்காரு பாரு!"

– வெ. முருகானந்தம்



வாதாடுவானேன்?

சுதா : மற்ற விஷயங்களை ஒதுக்கவில்லை. கல்வியில், வேலை வாய்ப்பில் எல்லாமே அவர்களுக்குப் போதுமான வாய்ப்புக்கள் கொடுங்கள். பிறகு அதிகாரம் தானாக வந்துவிடும் என்றுதான் சொல்லுகிறேன். அவர்கள் அப்படி ஒரு நிலையை அரசியலிலும் அடைகிறவரை, ரிசர்வேஷன் தேவை என்கிறேன்.

விஜயன் : இப்படித்தான் இடஒதுக்கீடு விஷயத்தில் முதலில் 10 வருடங்களைத்தான் நிர்ணயித்தார்கள். பிறகு அது தள்ளிப் போட்டுக் கொண்டே போய் விட்டது.

சுதா : அதற்கு யார் காரணம்? வேலை வாய்ப்பு இருந்தும் அங்கே ஆட்கள் நியமிக்கப் படவில்லை. அவர்கள் ஒரு நிலையை அடைகிற வரை உதவிக் கரத்தை நீட்டுங்கள். அந்த உதவிக்கரம்தான் ரிசர்வேஷன்.

விஜயன் : பேக்வர்டு கிளாஸ் ரிசர்வேஷன்னு வந்தது. இப்போ சாதிகளை நிரந்தரமாக்கத்தான் உதவியிருக்கிறது.

சுதா : இன்னும் கூட சமூகத்தில் நாம் மாற்றங்கள் வர அனுமதிப்பதில்லை. நம் சமூகத்துக்கு உள்ளேயே ஜாதகம் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். இதெல்லாம் மாறி வரும்போது மற்ற விஷயங்களும் மாறும்.

விஜயன் : இந்தியாவின் 80 கோடி ஜனங்களை, 40 கோடி பெண்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். 525 எம்.பி.க்களில், 170 எம்.பி.க்கள் பெண்களாக இருப்பார்கள். அரசியல் அமைப்பில் 525 எம்.பி.க்கள் இருந்து, மக்களுக்கு நல்லதே செய்வார்கள் என்பது மக்களின் எதிர்பார்ப்பு. அவ்வளவுதான். ஆனால் அவர்கள் அப்படிச் செய்கிறார்களா என்பது வேறு விஷயம். அப்படி இருக்கும்போது, 170 பெண் எம்.பி.க்கள், பெண்களுக்காக மட்டும் என்ன செய்து விட முடியும்? இதற்கு முன்னுதாரணம் ஏதாவது சொல்ல முடியுமா?

சுதா : கல்வி என்பது ஒரு முக்கியமான ஆயுதம். கல்வி பெற்ற ஒரு பெண், நிச்சயம் எம்.பி. ஆக வந்து சமூகத்தை மாற்ற உதவ முடியும்.

விஜயன் : ஒவ்வொரு விஷயத்திலும் இடஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்து, சமூகத்தைக் கூறு கூறாகப் பிரித்து விடுவார்களோ என்ற பயம் எனக்கு வந்திருக்கிறது!

சுதா : ஒடுக்கப்பட்டவர்களுக்கு முன்னேற்றம் தருவதற்குத்தான் இடஒதுக்கீடு. அப்படி முன்னேறிய பிறகு சமூகத்தோடு அவர்களை ஒருங்கிணைக்க உதவுவதுதான் இடஒதுக்கீடு. பெண்கள் பிரச்னைகளை மட்டுமே எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லவில்லையே! எல்லா பொது பிரச்னைகளையும்



''ஜனநாயகத்துல மக்கள்தான் எஜமானர்கள் அப்படின்னு நான் மீட்டிங்கில பேசினது தப்பாயிடுச்சு...!''

''ஏங்க... என்ன நடந்தது?''

''நேத்து ஒருத்தர் கிடுகிடுன்னு என் அறைக்குள்ளே வந்து, 'டேய், ஒழுங்கா வேலை செய்ங்கடா. இல்லாட்டி சீட்டைக் கிழிச்சிடுவேன்'னு கத்திட்டுப் போறாரு!''

– கே. விஜயன்

எடுத்துக் கொண்டு போராடுங்கள் என்று தானே சொல்லுகிறோம்?

விஜயன் : கடைசியாக ஒரு பாயிண்ட். உங்கள் ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த வாசுகி மாதிரி ஒருவர் தேர்தலில் போட்டியிட்டு ஜெயித்து வருவதற்கும், 33 சதவிகித இடஒதுக்கீட்டில் ஜெயித்து வருகிற ஒரு மூக்காயிக்கும் திறமை அளவில் எத்தனை வித்தியாசம் இருக்கும் என்பதை யோசித்துப் பார்த்தீர்களா?

சுதா : மூக்காயியையும் முன்னேற்ற வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள். கடமை. பொறுப்பு. இது எல்லா பெண்களுக்கும், பெண்கள் அமைப்புக்கும், சமூக சிந்தனையாளர்களுக்கும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

விஜயன் : கல்வியறிவை அதிகப்படுத்தாத பட்சத்தில், இந்த ரிசர்வேஷன் எல்லாம் பயனற்றுப் போய்விடும் என்று தோன்றவில்லையா உங்களுக்கு? வழக்கமாகத் தேர்தலில் நின்று போட்டியிட்டு வெற்றிபெறுகிற பெண்ணுக்கும், இடஒதுக்கீடு மூலம் ரிசர்வேஷனில் நின்று ஜெயிச்சு வர்ற பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கு.

சுதா : பெண்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதனாலேயே அவர்கள் முன்னேறி விடுவார்கள் என்று நானும் சொல்ல வரவில்லை. அது ஒரு முன்னேற்றத்துக்கான முதல் படி. அவ்வளவுதான். அப்புறம் பெண்களுக்காக ஆண்கள் விட்டுக் கொடுக்கிறார்கள் என்று சொல்லுவதையும் நான் ஏற்கவில்லை. பெண்கள் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள், அவர்களிடமிருந்து!

தொகுப்பு : **சாருகேசி**

படங்கள் : **யோகா**

படித்ததில் பிடித்தது:



நம் குழந்தைகளுக்குச் சில சிறகுகள்!

"மின்மினிப் பூச்சி உலகத்திலுள்ள எல்லாத் தீயையும் தன் வாலில் வைத்துக் கொண்டு அதன் மேல் உட்கார்ந்து கொண்டது."

"முந்தைய காலந்தனில் மனிதருக்கு மிகப் பெரிய காதுகள். அவை எவ்வளவு பெரியவை எனில், ஒரு காதில் நீட்டிப் படுத்துக் கொண்டு இன்னொரு காதைப் போர்வையாக்கிப் போர்த்திக் கொள்ளலாம்."

கடவுள் நண்டு பிடிக்கிறார்; தவளையின் நாக்கை அறுக்கிறார்.

பறக்கும் யானைகள்; பல நிற எருமைகள்.

இப்படிப் பல மாஜிகல் ரியலிசங்களின் ஏதோ சில கூறுகள் இந்த நாட்டுப்புறக் கதைகளில் பொதிந்து கிடக்கிறது. (மாஜிக் ரியலிஸ்டுகள் கோபிக்காமல் இருப்பார்களாக...)

மத்திய இந்திய பைகா, அருணாசலப் பிரதேச மின்யாங், மாண்டலா மாகாண கோண்டர்கள்.... இப்படிப் பல்வேறுபட்ட பழங்குடிமக்களின் வாய் வழிக் கதைகளை அவர்களுடன் ஒன்றிப் பழகி, வெரியர் எல்வின் திரட்டித் தந்துள்ளார். (வழக்கம் போல இதற்கும் ஒரு வெளிநாட்டுக்காரர்தான் தேவைப்படுகிறார்!...) அவைதான் "உலகம் குழந்தையாக இருந்தபோது" நூலில் உள்ள கதைகள்.

மண்ணை இறுகச் செய்த கதை பழங்குடியினரின் கற்பனைகளுக்குச் சவால் விட்டிருக்கிறது. தாய், மகன் பெருமையுணர்த்தும் "முதலில் தோன்றிய ஆறுகள்."

மகாபாரதத்தின் ஒரு நிகழ்ச்சி சாயலடிக்கிறது 'முதல் நில நடுக்கம்' கதையில்.

மீன் பெண்ணாகும் 'ஆடைகள் ஆரம்பமான விதம்' நம்மூர் மீனகு, பெண்ணான கதையை ஞாபகப்படுத்தும்.

விறுவிறுப்பாய் நகரும் 'வீரமக்கள்'.

அருமையான ராஜாராணிக் கதையாய் 'மாயப் புல்லாங்குழல்கள்.'

சுற்றுப்புறச் சூழல் பேசும் 'சுத்தியலும் குரடும்'.

வாழ்க்கையை எப்படிச் சாரமுள்ளதாக்குவது, இறப்பே இல்லாமல் வயதாகிக் கொண்டே போனால் மனுசன் கதி என்னாகும், முதன் முதலில் இறந்து கிடக்கும் உயிரைப் பார்த்தவனின் மனோநிலை எப்படி இருந்திருக்கும்?' என்றெல்லாம் வழமையிலிருந்து மாறுபட்டுச் சிந்திக்க வைக்கும்.

பல கதைகள் எதிர் நம்பிக்கை கொண்டிருக்கின்றன (உ.ம். மனிதனிலிருந்துதான் புலி பிறந்திருக்கிறது, மனிதன்தான் வால் முளைத்துக் குரங்கானான்)

'கறுப்பு நாய்' என்னும் கதையில் அண்ணன் தம்பி தமக்குள் போரிட்டு மடிவது ராகுல சாங்கிருத்யாயனின் 'வால்கா முதல் கங்கை வரை' நிஷா தன் மகளுடன் நதியில் போரிட்டு மடிவதை ஞாபகப் படுத்தும்.

'தவளையும் குரங்கும்' ஜால்ரா அரசியல்வாதிகளின் சமத்காரத்தை உணர்த்தும் சுவை சொட்டும் கதை.

"யானையின் காலடியில் விழுந்த பொருட்கள் அனைத்தும் நசுங்கிப் போவதைப் பார்த்தான். யானையின் கால்களின் பலமும் அவை அமுங்கும் விதமும் நினைவில் பதிந்தது. உடனே கல்லில் சுத்தியல் செய்தான்."


"நண்டு இறுக்கிய விதத்தைப் பார்த்ததும் இரும்பு இடுக்கி எப்படித் தயாரிப்பது என்பதைப் புரிந்து கொண்டான்" என்பது போன்ற மிகச் சிலவற்றைத் தவிர, பகுத்தறிவில் வழுக்கும் பல கதைகள்.

ஆனாலும் நம் குழந்தைகள் பறப்பதற்கு இச் சிறகுகள் உதவும்.

பிள்ளைகளுக்குக் கதை சொல்ல முடியாத நகர வாழ்க்கையில் சிக்கியவர்கள், இந்தப் புத்தகத்தைத் தந்து விட்டு 'அக்கடா' என்று வேலைக்குப் போய் விடலாம்.

- நா. வே. அருள்

"உலகம் குழந்தையாக இருந்தபோது" - வெரியர் எல்வின். தமிழில் : பிரிஜிட்டா ஜெயசீலன். வெளியீடு : நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா ஏ-5, கிரீன் பார்க், புதுதில்லி - 110 016. விலை ரூ. 23/-





1997 மார்ச் 16
தாது பங்குனி 3
மலர் : 55
இதழ் : 33

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



எளியோருக்கான பட்ஜெட்!

'சிதம்பரத்தின் பட்ஜெட் துணிச்சலான பட்ஜெட்தான்' என்கிறார் சர்வதேச நிதிநிறுவன (ஐ.எம்.எஃப்) நிர்வாக இயக்குனர் காம்டெஸஸ். '1991-ஆம் ஆண்டைப் போன்ற நிதி நெருக்கடி இப்போது இல்லை' என ஒப்புக்கொள்கிறார். "ஆனால், துணிச்சலாக அமைந்திருப்பதாலேயே இந்த பட்ஜெட் சில அபாயங்களையும் உள்ளடக்கியிருக்கிறது" என்று எச்சரிக்கிறார்.

"வரிகளைக் கணிசமாகக் குறைத்திருப்பதன் காரணமாக, நிதியமைச்சர் எதிர்பார்க்கும் அளவிலும் வேகத்திலும் அரசுக்குக் கூடுதல் வருமானம் வர வாய்ப்பிருக்கிறதா?

"அவ்வாறு வராது போனால் சிதம்பரம் போட்டிருக்கும் கணக்குகள் என்னாவது?

"அனைத்துலகச் சந்தையின் ஏற்ற இறக்கங்கள், பருவ மழை பொய்த்தால் விளையக்கூடிய பாதிப்பு போன்ற எதிர்பாராத சிக்கல்களை மனத்தில் கொண்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டதா?"


- இப்படி வரிசையாகப் பல கேள்விகள் எழுப்பியுள்ளார் காம்டெஸஸ்.

நிதியமைச்சரும் பிரதமரும் அவருக்கு நம்பிக்கையூட்டும் விதமாகப் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்.

சிதம்பரம் போட்டுள்ள திட்டங்கள் சவால்கள் நிறைந்தவை என்பதையே இவையெல்லாம் உணர்த்துகின்றன.

மொத்தத்தில், மத்திய பட்ஜெட் உயர்மத்தியதர வகுப்பினர் மீதுள்ள பிடியைத் தளர்த்தி, அரசின் வருவாயை அதிகரிக்க முயன்றிருக்கிறது.

மாறாக, மாநில பட்ஜெட், கீழ்மத்திய தர வகுப்பினர் நீண்ட ஆசுவாசப் பெருமூச்சு விடும் வகையில்



அமைந்துள்ளது.

அதில் ஆறுதல் அளிக்கும் முக்கியமான அம்சங்கள் :

பல அன்றாட உபயோகப் பொருட்கள் மீதான வரிக் குறைப்பு.

'இன்றைக்கு நிலவும் பணவீக்கத்தில் பத்தாயிரம் ரூபாய் என்பது மத்தியதர வகுப்பு வருமானமே' என உணர்ந்து, அந்த வருமானப் பிரிவினருக்கு ரேஷன் அரிசி கிடைக்கச் செய்திருப்பது. (ரேஷன் அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளபோதும், மாநில அரசு அதை 3.75 ரூபாய்க்கே தர முன்வந்துள்ளது.)

மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணம்தான் இந்தச் செலவை ஈடுகட்டும் என்றாலும், முதல்வர் குறிப்பிடத்தக்க புதிய வரிகளைப் புகுத்தவில்லை என்பது கவனத்துக்குரியது.

கூடுதல் செலவுகளை ஈடுகட்ட பான்மசாலா, லாட்டரிச் சீட்டுகள், இந்தியாவில் உற்பத்தியாகும் அயல்நாட்டு மது வகைகள் போன்றவற்றின் மீதான வரிகளே உயர்த்தப்பட்டுள்ளன.

இரு சக்கர வாகனங்கள் மீதான வரி ஏற்றப்பட்டிருந்தாலும் சாமானியர்கள் உபயோகிக்கும் மொபெட்கள் போன்ற ஐம்பது சி.சி. வாகனங்களுக்கு வரி உயர்வு இல்லை.


பல எளிய கைவினைப் பொருட்கள் மீதான வரி ரத்து செய்யப்பட்டுள்ளதால், விற்பனை வரி வசூலிப்பு என்ற பெயரில் நடத்தப்பட்ட சுரண்டல்களிலிருந்து சிறு வியாபாரிகள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்.

சுமார் ஐந்நூறு கோடி ரூபாய் பற்றாக்குறை உள்ளது என்றாலும் இந்த பட்ஜெட்டின் பல செலவினங்கள் தமிழகத்தில் கடைசி நிலையிலுள்ள குடிமக்கள் பயன்பெறும்விதமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நிகர வரி வருவாயில் கணிசமான பகுதி கிராமப்புற அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இலவச நிலப் பட்டாக்கள் ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு மட்டுமின்றி வருமான அடிப்படையில் அனைத்துப் பிரிவு ஏழை எளியோருக்கும் வழங்கப்படும் என்பது மற்றொரு நற்செய்தி.

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குறுக்கீடு இல்லாத கூடுதல் அதிகாரம் வழங்க வழிசெய்யப் பட்டுள்ளது.



மத்திய அரசு, எம்.பி.க்களின் தொகுதி அபிவிருத்திக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை, மாநில அளவிலும் பின்பற்றியிருக்கிறார் முதல்வர். ஒவ்வொரு எம்.எல்.ஏவும் தமது தொகுதி அபிவிருத்திக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் பெறுவார்.

இந்த அறிவிப்பு மகிழ்ச்சி தந்தாலும், கூடவே சந்தேகத்தை எழுப்பவல்லது. 'அரசியல்வாதிகளின் கையில் வைக்கப்படும் பெருந்தொகைகள் மக்களைச் சென்றடையுமா?' என்கிற சந்தேகம். - இந்த அச்சத்தையும் தணிக்கும் வகையில், அத்தொகை, அந்தந்த தொகுதிக்குப் பொறுப்பான மாவட்ட கலெக்டர்கள் மூலமாகவே வினியோகிக்கப்படும் என்று விதித்திருக்கிறார் முதல்வர்.

எனினும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால் இத்தகைய திட்டங்கள் மிக மிக கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்பது புரியும்.

இதை முதல்வரும் உணர்ந்திருப்பதாலோ என்னவோ, நிர்வாகச் சீரமைப்பிலும் கணிசமான அளவு கவனம் செலுத்தி தமது பட்ஜெட் உரையைத் தயாரித்திருக்கிறார்.

'ஆம்புட்ஸ்மன்' அமைப்பை நிறுவுவதற்கான சிபாரிசுகளை ராமானுஜம் கமிட்டி ஆய்வு செய்து வெளியிடும் என்று கூறியதுடன் தகவல் பெறும் உரிமையை மக்களுக்கு வழங்கவும் சட்டம் இயற்ற முன்வந்துள்ளார்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் என்பது அமுலுக்கு வருமானால், அரசின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பொதுமக்கள் தட்டிக் கேட்கலாம்; விவரம் பெறலாம்.

நுகர்வோர் இயக்கங்களும் நீதித்துறையும் விழிப்படைந்து காணப்படும் இன்றைய சூழலில் இந்தச் சட்டத்தை அமுலாக்க முதல்வர் முன்வந்திருப்பது அவரது நல்லெண்ணத்தைக் காட்டுகிறது.

ஆனால், அமுலுக்கு வரக்கூடிய இச்சட்டம் சிவப்பு நாடா சிக்கல்களுக்கு உட்பட்டு அர்த்தம் இழந்துவிடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

'ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து ஓராண்டுக்குள் அதை முன்னோடி கிராமமாக உருவாக்குவோம்' என்கிறார் முதல்வர். மக்களின் தகவல் பெறும் உரிமை மட்டும் அர்த்தமுள்ள வகையில் அமலாகுமானால், அந்த ஒரு சில கிராமங்கள் மட்டுமல்ல... தமிழகமே சில ஆண்டுகளுக்குள் முன்னோடி மாநிலமாக மாறிவிடும்.

வெடிக்க வெடுக்க மேக்கப்!

எம்.எல்.ஏக்கள் அறைகளுக்கு ஓர் அதிரடி விசிட்!

தமிழக பட்ஜெட் தாக்கல் நிகழ்ச்சியை நமது டெலிவிஷன் நேரடி ஒளிபரப்புச் செய்தது. டெலிவிஷன் கேமரா தங்கள் முகங்களையும் படம் பிடித்துக் காட்டும் என்கிற நிலையில், நமது எம்.எல்.ஏக்கள் சட்டமன்றத்துக்கு எப்படிப்பட்ட மேக்-அப்களோடு சென்றார்கள்? எப்படிப்பட்ட மனோநிலையில் சென்றார்கள்? சட்டமன்றத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த எம்.எல்.ஏக்கள் சிலரைத் திடீரென்று போய் 'அதிரடி'யாகச் சந்தித்தோம்....

காலை ஏழரை மணி. நுங்கம்பாக்கத்திலுள்ள அவரது ஃபிளாட்டுக்கு அப்போதுதான் வந்து சேர்ந்தார் பள்ளிப்பட்டு (திருத்தணி) தொகுதி எம்.எல்.ஏ.வான டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன் (த.மா.கா.).

"என்ன சார்... இன்றைய சட்டமன்ற நிகழ்ச்சியை டெலிவிஷனில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப் போகிறார்களே, நீங்கள் ஃபிரஷ்ஷாகப் போக வேண்டாமா?" என்றோம் அவரிடம்.

"சாதாரணமாக எல்லோருமே வெளியில் போகும்போது பவுடர் பூசிக் கொண்டுதான் போவார்கள். நானும் அதுபோலத்தான் போகப் போகிறேன். வேறென்ன?"

"அசந்தர்ப்பமாக யாராவது காது குடைந்தால் கூட அதை டெலிவிஷன் கேமரா ஃபோகஸ் செய்து விடுமே! அதை ஜனங்கள் அத்தனை பேரும் பார்க்கும்படி ஆகிவிடுமே!"

"நான் அதுபோலெல்லாம் செய்வதில்லை. கலைஞரும் ஒரு ஸ்கூல் ஹெட்மாஸ்டரைப் போலக் கண்டிப்பாக நடந்து கொள்வதால் அவையும் கட்டுப்பாடாகவே நடக்கிறது என்பதால் டெலிவிஷன் கேமராக்களுக்கு 'சைடு லைட்ஸ்' கிடைக்க வாய்ப்பே இல்லை!"

"பட்ஜெட் கூட்டத் தொடருக்கு மாத்திரம் இன்றைக்கு நீங்கள் செல்லவில்லை. ஏறத்தாழ ஒரு ஷூட்டிங்குக்குச் செல்வது போலவும் செல்ல வேண்டுமே..." - அவரை விடாமல் குடைந்தோம்.

"காஸ்ட்யூம் விஷயத்தில் எங்கள் கட்சியினர் எப்போதும் வெள்ளை வேஷ்டி - சட்டைதான். கம்யூனிஸ்ட் கட்சியினர் சிவப்புத் துண்டு போடுகிறார்கள். கலைஞர் மஞ்சள் துண்டு போடுகிறார். பேராசிரியரும் வண்ணத் துண்டு போடுகிறார். ஆனால் எங்கள் கட்சியினரிடத்தில் துண்டு போடுகிற பழக்கமே இல்லை என்பதால் எங்களில் யாரும் கலர்ஃபுல்லாகப் போக முடியாது. முகத்துக்கு வெறும் பவுடர்தான்...!" என்று சொல்லிக் கொண்டே முகத்துக்குப் பவுடர் போட ஆரம்பித்தார்.



அந்தச் சமயம் பார்த்து அவரைப் படம்பிடித்துக் கொண்டு புறப்பட்டோம்.

எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குள் நாம் சென்றபோது எட்டே கால் மணி.

பர்கூர் தொகுதி எம்.எல்.ஏ. சுகவனம் (ஜெ.வை ஜெயித்தவர்) ரூமுக்குள் சென்று குரல்கொடுத்தபோது, "கொஞ்சம் பொறுங் கள் சார்! டிரெஸ் செய்து கொண்டிருக் கிறேன். இதோ வந்து விடுகிறேன்!" என்றார்.

''நீங்கள் டிரெஸ் செய்து கொண்டு புறப்படுவதைத்தான் பட மெடுக்க வேண்டும். அப்படியே வாருங்கள்!"

''என்னண்ணே தமாஷா செய்யறீங்க!"

"தமாஷே இல்லை. இன்றைய நிகழ்ச்சியை டெலிவிஷனில் நேரடி ஒளிபரப்புச் செய்யறாங் களே... அதற்காக நீங்கள் ஸ்பெ ஷல் மேக்அப் ஏதும் போட்டுக் கறீங்களான்னு பார்க்கத்தான் வந்தோம்!"

இதற்குள் டிரெஸ் செய்து கொண்டு தலைவாரிய படியே வெளியில் வந் தார் சுகவனம். அதை அப்படியே இனிக்



• இ.எஸ்.எஸ். ராமன்



• சுகவனம்

• தாமரைக்கனி

"கேமராவையே ஓடச்சுட்டா என்ன செய்ய முடியும் தலைவரே?"



கேள்வியின் வலைக்குள்ளே!

அடையாளங்களில் ஆதாரங்களையும்,
விளக்கங்களில் சத்தியத்தையும்-
தொலைத்தவர்கள்...

வேஷதாரிகளிடம் வாழ்க்கை கற்க
ஜீவனைத் தொலைத்தவர்கள்....

வாழ்க்கையில் மரணத்தை மறக்க
முயன்றவர்கள்,
மரணத்தில் வாழ்க்கையைத்
தொலைத்தவர்கள்....

வார்த்தைகளின் உணர்வுகளைத்
தொலைத்துவிட்டு,
அதன் உச்சரிப்புகளில் மாய சந்தோஷம்...

இப்படிப் பார்த்ததில்,

தேடியதைவிட இழந்தது அதிகம்;
கிடைத்ததைவிட தொலைத்தது அதிகம்

தொலைப்பதுதான் வாழ்க்கையா?
அல்லது, தேடுவது வாழ்க்கையா?

கேள்விகளின் வலைக்குள்
என்னையும்
உங்களையும்
காணவில்லை- தொலைந்து போனோம்!

— கே.ஆர். முரளி

செய்தபோது, "என்னண்ணே இப்படிப் படமெடுத்துட்டீங்க. யாராவது தப்பா நினைச்சுக்கப் போறாங்க..." என்றவர் தொடர்ந்தார்.

"வழக்கம் போலத்தான் இன்றைக்கும் போகிறேன். ஸ்பெஷல் மேக்அப் ஏதும் இல்லண்ணே... தலைவர் கரெக்டா 9:20க்கு வந்திடுவார். நாங்களும் அதுக்கு முன்னால போய் இருக்கணும். காப்பி சாப்பிடறீங்களாண்ணே..."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டோம்.

பெண் எம்.எல்.ஏக்கள் எப்படிப் புறப்படுகிறார்கள்?

தாராபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வான திருமதி சரஸ்வதி ராஜேந்திரன் (தி.மு.க.) அறைக்குச் சென்றோம்.

நீலவண்ணப் புடைவையில் தயாராக இருந்தார்.

"சிவப்பு, மஞ்சள் போன்ற கலர் புடைவை கட்டியிருந்தால் இன்னும் கொஞ்சம் பளிச்சென்று தெரிவீர்களே, லிப்ஸ்டிக் கூட போட்டிருக்கலாம்!" என்றோம்.

திடீரென்று இப்படியொரு கமெண்டை நம்மிடமிருந்து எதிர்பார்க்காததால் அவரது முகத்தில் இலேசான அதிர்ச்சி.

"இன்றைய பட்ஜெட் நிகழ்ச்சியை டெலிவிஷனில் நேரடியாக ஒளிபரப்புச் செய்வதால் கேமராவில் பளிச்சென்று தெரிகிற மாதிரி போக வேண்டாமா? அதற்காகத்தான் சொன்னோம் "என்றதும்தான் சகஜ நிலைக்கு வந்தார் அவர்.

"அதனால என்னங்க... டெலிவிஷன்ல தெரியணும்கிறதுக்கா நாம வர்றோம். மக்கள் பிரச்னைகளைப் பேசறதுக்காகத்தானே வர்றோம். அதனால, என் தொகுதில என்னென்ன பிரச்னைகள் இருக்குங்கிறதையெல்லாம் ஜனங்ககிட்ட மனுக்களா எழுதி வாங்கிக்கிட்டு வந்திருக்கேன், பாருங்க..!" என்று ஒரு கத்தை மனுக்களை நம்மிடம் எடுத்துக் காண்பித்தார்.

"நிஜமாகவே நீங்கள் ஸ்பெஷல் மேக்அப் ஏதும் போட்டுக்கலையா?"

"இல்லைங்க. நீங்க சொன்ன மாதிரி லிப்ஸ்டிக்கெல்லாம் போட்டுக்கிட்டுப் போனா அதையும் டெலிவிஷன்ல காட்டினா... என்னடா இது நம்ம பிரச்னைகளை எடுத்துச் சொல்ல இவங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினா, இவங்க மேக்அப் போட்டுக்கிட்டு போய் போஸ் குடுக்கறாங்களேன்னு ஜனங்களுக்கு எரிச்சல்தான் வரும்!" என்றார் சரஸ்வதி.

தாமரைக்கனி (அ.தி.மு.க)யைப் பார்க்கச்

சென்றபோது மணி 9:10. குளித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.

இரண்டு நிமிடத்தில் இடுப்பில் லுங்கியுடன் தலையைத் துவட்டியபடியே பாத்ரூமிலிருந்து வெளியே வந்தார்.

"வர வர இளைத்துக் கொண்டே வருகிறீர்களே!" என்றோம்.

"சுகர் இருக்குல்ல!" என்றவரிடம், "இன்றைக்கு ஸ்பெஷல் மேக்அப் ஏதும் உண்டா?"

"எதுக்குக் கேட்கறீங்க தலைவரே?" என்றார் ஆச்சரியத்தோடு.

"இன்றைய நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்புச் செய்கிறார்களே?"

"நான் வழக்கம் போல சென்டெல்லாம் போட்டுக்கிட்டுத்தான் போவேன். இதுல ஸ்பெஷலா என்ன இருக்கு?"

வேஷ்டியைக் கட்டி, தமது பெரிய சைஸ் பெல்ட்டை எடுத்துப் போட்டார். அது போட்ட இடத்தில் நிற்காமல் தொள தொளவென்று கொஞ்சம் கீழே இறங்கி நின்றதும் சிரிப்பு வந்து விட்டது.

"என் நெலமையைப் பாருங்க.... எல்லாரும் சிரிக்கிற அளவுக்கு வந்திட்டுது!" என்று அவரும் சிரித்தபடியே, "சில பேரு ஆயிரம் ரூபா கொடுத்துக் கூட முடிவெட்டிக்கிறாங்க... நான் வெறும் அஞ்சு ரூபா கொடுத்துத்தான் வெட்டிக்கறேன்!" என்று தலைவாரிக் கொண்டார்.

"அஞ்சு ரூபாய்க்கு வெட்டறதுக்கே முடியைக் காணோமே!" என்று நாம் தமாஷ் செய்து விட்டு, "இது மாதிரி சட்டசபை நிகழ்ச்சிகளை நேரடியா ஒளிபரப்புச் செய்யிறபோது, எந்த எம்.எல்.ஏ.வும் சட்டசபையில 'எக்குத்தப்பா' நடந்துக்க முடியாது, இல்லையா?" என்றோம்.

"அப்படி நடந்துக்கிடறவன் இப்ப மாத்திரம் நடந்துக்கிட மாட்டானா என்ன? எப்படிச் சொல்றீங்க தலைவரே?"

"அப்படி நடந்துக்கற போது, அதை கேமரா படம் பிடிச்சுடுமே!"

"கேமராவையே ஓடச்சுப்புட்டா என்ன செய்ய முடியும் தலைவரே?"

"ஐயய்யோ! இப்படிக் கூட ஒரு வழி இருக்கா?"

"சேச்சே! சும்மா தமாஷுக்குச் சொன்னேன்! நேரமாச்சு. சாவகாசமா வாங்களேன் பேசுவோம்!" என்று அவசர அவசரமாக டிபன் சாப்பிடக் கூட நேரமில்லாமல் சட்டசபைக்குப் புறப்பட்டார் தாமரைக்கனி.

— இளங்கோவன், ஸ்ரீநிவாசன்.

அட்டை வண்ணப்படங்கள், படங்கள் : **யோகா**



"ஐந்து இட்லி சாப்பிட்டால் ஒரு இட்லி இலவசமா தர்றோம்கிறது உண்மைதான். நீங்க 25 இட்லி சாப்பிட்டீங்க. அதுக்கு 5 இட்லி இலவசமா தந்துட்டோம்... அந்த ஐந்து இலவச இட்லிக்கெல்லாம் ஒரு இலவச இட்லி தர முடியாது. ம்... நடையைக் கட்டுங்க..."



"ஒரு பத்து ரூபாய் கொடு சார்"

"நீ யார்? உனக்கு நான் ஏன் பத்து ரூபாய் தரணும்?"

சும்மா தர வேணாம் சார். அவசரத்தில் கத்தி எடுத்து வர மறந்துட்டேன். வாங்கிட்டு வந்து கொள்ளை அடிக்கும்போது கழிச்சுக்கறேன்"

— வெ. ராஜாராமன்

முல்லாவிடம் பக்கத்து வீட்டுக்காரன், "முல்லா, உன் வீட்டிலிருக்கும் கொடிக் கயிற்றைக் கொஞ்சம் இரவல் கொடுங்கள். இன்று மாலையே திருப்பித் தந்து விடுகிறேன்" என்று கேட்டான்.

"அந்தக் கொடியில் கோதுமை காயப் போட்டிருக்கிறேன். அதனால் உனக்கு இரவல் தர முடியாது" என்றார் முல்லா.

"என்ன, கொடிக் கயிற்றில் கோதுமை காயப் போட்டிருக்கிறீர்களா? அது எப்படி முடியும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஒருவனுக்கு இரவல் தர விரும்பாதபோது எதுவும் முடியும்" என்றார் முல்லா.

தகவல்: எஸ். முகம்மது யூசுப்

வட்டமேஜை

அதிகாரிகள் செய்யும் பகுமைப்புரட்சி!

• கலைஞரின் அரசுக்கு விடுதலைப்புலிகளால் மீண்டும் சிக்கலும், பிரச்னையும் ஏற்படாமல் இருந்திட வேண்டுமானால், அவர்களைக் கண் காணித்திடவும், தமிழகத்தில் ஊடுருவும்போது பிடித்து தயவு தாட்சண்யம் இல்லாமல் தண் டித்திடவும், தமிழகம் என்றென்றும் அமைதிப் பூங்காவாக இருந்திடவும் "விடுதலைப்புலிகள் கண்காணிப்புக் காவல் பிரிவு" என்று ஒரு பிரிவை ஏற்படுத்துவதே சிறப்பாக இருக்கும்.

பெங்களூர், ப. மூர்த்தி.

• 'எருதுக்கு நோவு; காக்கைக்குக் கொண்டாட் டம்' என்பது போல், திண்டாடிக் கொண் டிருக்கும் ஐ.மு.அரசினைப் பல்வேறு கோணங் களில் அச்சுறுத்தி மகிழும் காங்கிரஸாரின் முகத்திரையை அழகாகவே தலையங்கம் வாயி லாகக் கிழித்துள்ளீர்கள்! நாற்காலியைப் பிடிப் பதில் அரசியல் கட்சிகள் தம் கற்பினை இழந்து, நாட்டை விபசார விடுதியாக ஆக்கி வருவது வேதனை தரக் கூடிய விஷயமாகும்!

இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

• அதிகப்படியாகக் கட்டிய வருமான வரியைத் திருப்பித் தருவதை அந்த இலாகா ஆண்டுகள் கணக்கில் தாம தப்படுத்துவதைப் பற்றி தராசு பதிவில் குறிப்பிட்டிருந்தது. அதற்கு சிகப்பு நாடா காரணமல்ல; சில அதி காரிகள் அதைப் பயன்படுத்தி பகுமைப் புரட்சி செய்து கொள் கிறார்கள் என்பது சங்கர நாரா யணன் கொலை வழக்கு புலன் விசாரணை மூலம் வெளியாகியுள்ளது.

சிட்லபாக்கம், அ. ஷண்முக சுந்தரம்.

பரிசுக் கடிதம்

• ஒரு காதல் கதையைத் தெளிவான திரைக் கதையோடு, இதுவரை யாரும் எடுத்திராத புதிய கோணத்தில் எடுத்ததால்தான் காதல்கோட்டை பெரும் வெற்றி பெற்றது. அகத்தியன் சொல்லு வது போல் கமர்ஷியல் பாடல்களுக்காக வெற்றி பெறவில்லை. தன்னுடைய திறமை யின் மீது முழு நம்பிக்கை வைக்காமல் கமர் ஷியல் வெற்றிக்காகப் பாடல்களை நம்பிய அகத்தியன், ரசிகர்களின் ரசனையைக் கீழ்த் தரமாக மதிப்பிடுவது வருந்தத்தக்கது.

அரசரடி, எல்.எம். அழகம்மாள்.

• சரத்குமாருக்கு இது போதாத காலம்தான் போலும்! ஆசை மனைவியைப் பிரிந்து, ஆவ லுடன் எதிர்பார்த்த அரவிந்தன் படமும் டப்பா வாகி, அரசியல் ஆர்வங்களும் அஸ்தமனமாகி, தன் பங்குக்கு கல்கியும் விமர்சனத்தில் 'குட்டு' வைத்து... பாவம் - சார் அவர்! விட்டுடுங்க..!

சேலம்-2, சூர்யநிலா.

• 'சிக்கனமாக ஸ்மைல் ப்ளீஸ்' வெகு தாராளமான சிரிப்பலை உண்டு பண்ணியது.

மதுரை-10, பெ. பொன் ராஜபாண்டி.

• வடேங்கப்பா! வடை விலை அதிகமாகத் தெரிந்தாலும் அதன் பின்னணியில் உள்ள சமூக சேவையை நினைக்கும்போது சிறியதாகி விடுகிறது!

அன்சாரிநகர், செ. மலர்விழி.

• அப்பா- மகன் பாசம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை மென்மையாக உணர்த்தும் 'தாசு' சிறுகதையைப் படித்து முடித் ததும் உண்மையிலேயே மனம் கனத்துப் போனது.

நாகைப்பட்டிணம், நாகை சந்திரா.


• ஆத்மார்த்தமான நட்பிற்கு ஆண், பெண் பாகுபாடு இல்லை என்ற உயரிய கருத்தை தெள்ளத் தெளிவாக விளக்கி விட்டார் அனு ராதா ரமணன்.

திண்டிவனம், ஆர். ரவி.

• மின்சாரம் பற்றி கலைஞர் - சம்சாரம் நடத் திய கற்பனை உரையாடல் பிரமாதம்!

சென்னை-15, நெல்லை ஆ. கணபதி.

பானுகுமார்



ஜட்ஜ்

மணி ஏழாகி விட்டது. என்ன இவர்களை இன்னும் காணமே? பிள்ளையோ, மாட்டுப் பெண்ணோ யாராவது ஒருத்தர் வந்து விட்டால் உபன்யாசத்துக்குப் போகலாம். எதிர் வீட்டில் போகிறார்கள். நல்ல துணையாச்சு. ஏற்கெனவே இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. அம்புஜத்தால் போக முடியவில்லை. கதை சொல்பவர் பற்றி காலனியில் பலர் சிலாகித்துக் கூற, அம்புஜத்திற்கு ஆசையாக இருந்தது. ஏதோ வயசான காலத்தில் நல்ல விஷயத்தைக் காதால் கேட்டால் போற லோகத்திற்குப் புண்ணியமாச்சு.

ஆச்சு. ராத்திரி சமையல் ரெடி செய்து மூடி வைத்தாயிற்று. அம்புவிற்கு இரவு வெறும் கஞ்சிதான். அதையும் போட்டுக் குடித்தாயிற்று. சமையல் மேடையை அலம்பி, துடைத்தாயிற்று. புடைவை மாற்றிக் கொண்டு ரெடியாக நின்றபோது மணி ஏழே முக்கால். கதவைத் தட்டிய எதிர் வீட்டினரைப் போகச் சொல்லி விட்டாள். தன்னால் அவர்கள் கதை கேட்பது கெடுவானேன்?

பிள்ளையும் மாட்டுப் பெண்ணும் வரும்போதே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தார்கள். கிட்டத்தில் உள்ள பிராஞ்ச் ஆபீஸுக்கு மாட்டுப்பெண் கேட்டிருந்த ட்ரான்ஸ்பர் ரிஜெக்ட் ஆகிவிட்டதாம். அந்த ஏமாற்றம்.

"போகட்டும் போ. விட்டுத் தள்ளு."

"இல்லே. மெயின் ஆபீஸ்னா ஒரு நாளைப் போல வர ஏழு, ஏழரை ஆயிடறது..."

"அதுக்கு என்ன பண்றது. இப்பத்திக்கு நான் பாத்துக்கறேன். நீ கவலையை விடு"

என்றவாறு காப்பி கலக்க உள்ளே சென்றாள்.

காப்பி குடிக்கும்போதுதான் மாட்டுப் பெண் கவனித்தாள்.

"ஆமாம். புடைவையெல்லாம் மாத்திண்டு... எங்கேயாவது கிளம்பறேளா?"

"பக்கத்து சமாஜத்திலே உபன்யாசம். எதித்தாத்து மாமியெல்லாம் போயிருக்கா. நீங்க வரட்டுமேன்னு நான் காத்திண்டிருந்தேன்."

"அப்படிப் போகணும்னா தனியா போக வேண்டாம். இவரைக் கொண்டு விடச் சொல்றேன்" என்றவாறு மாட்டுப்பெண், பிள்ளை யிடம் சிபாரிசுக்குச் சென்றாள்.

"இன்னிக்குப் போய்த்தான் ஆகணுமா? ஏற்கெனவே எனக்கு டயர்டா இருக்கு."

"நீ வரணுங்கறது இல்லேடா. பக்கம்தானே. நான் போயிப்பேன்."

"வேண்டாம். தனியா எல்லாம் போக வேண்டாம். காலம் கெட்டுக் கிடக்கு. உனக்கு குப் போய்த்தான் ஆகணும்னா நான் வர்றேன்."

அரை மனசோடு பிள்ளை சொல்வது புரிந்தது. பாவம்! களைத்துப் போய் வந்தவனை மறுபடி சிரமப்படுத்த தாய்மனம் இடம் கொடுக்கவில்லை. கதையென்ன? இன்னொரு நாள் கேட்டாப் போச்சு.

தொடர்ந்த இரண்டு நாட்களும் ஏதேதோ பிரச்னை. கதைக்குப் போக முடிய வில்லை. இன்று கடைசி நாள். இராமநவமியை முன்னிட்டு கோவிலில் இரவு முழுவதும் பஜனை. திவ்ய நாமம். கோவில் கால் கிலோ மீட்டர் தூரம்தான். எப்படியானாலும் இன்னிக்குப் போக வேண்டும். காலையிலேயே மாட்டுப் பெண்ணிடம் சொல்லி விட்டாள்.

எத்தனை வருஷமாச்சு. இப்படி திவ்ய நாமம் கேட்டு. அம்புஜத்தின் பிறந்தகத்தில் வருடா வருடம் பஜனை நடக்கும். விசாலமான பெரிய கூடம். நாலு குடும்பம் குடியிருக்கலாம். அதை அடைத்து கோலம் போட்டு, பிரமாதமாக ஏற்பாடு செய்வார்கள். கூட்டத்தில் புழுக்கத்தையும் மீறி ஒருவிதமான தெய்வீகச் சூழ்நிலை. கர்ப்பக் கிரகத்தில் இருக்குமே, அது போல. கொல்லைப்புறத்தில் கோட்டை அடுப்பில் வேகும் பிரசாதங்களின் நறுமணம்... பூக்களின் மணத்தோடு போட்டி யிடும். ஊரே கூடியிருக்கும். அப்பாவுடன் சேர்ந்து குரலெடுத்து அம்புஜம் உருகி உருகிப் பாடுவாள். அப்படி லயித்துப் பாடுகையில் ஆத்மா பரப்பிரும்மத்துடன் கலக்கும் அநுபூதி... அதை உணர்ந்து அனுபவித்தால்தான் புரியும்.

அதெல்லாம் ஒரு காலம். வசதியும் அதை நல்ல வழியில் உபயோகிக்க மனசும் இருந்த காலம். திருமணமான பின்னும் அவர்கள் வீட்டில் எதுவும் நடக்காதே தவிர, வெளியில் போய்க் கேட்டு வர எந்தத் தடையுமில்லை. கடந்த கொஞ்ச வருஷங்களாகத்தான் எதிலுமே ஆர்வம் குறைந்து விட்டது.

வரவர அம்புஜத்தால் பாட முடிவதில்லை. மூச்சு முட்டுகிறது. சரி. பாட முடியாட்டி என்ன? பகவான் நாமாவைக் காதால் கேட்டாலே போதுமே. இன்னிக்கு அவசியம் போக வேண்டும்.

இராமனின் திவ்ய ஸ்வரூபம் கண்முன் நிற்க, வேலையில் தனி பரபரப்பு வந்தது. ரொம்ப நாட்கள் கழித்து பேத்தி ஆசையாகக் கேட்டதால் இன்று சேவை பிழிந்து வைத்திருந்தாள். கையொடியப் பிழிந்ததில் உடம்பு அசத்தலாக இருந்தாலும் குழந்தையின் ஆசையை நிறைவேற்றிய இன்பம் இருந்தது.

பிள்ளை இன்று சீக்கிரம் வந்து விட்டான். அவனுக்கு டிபன் தந்து, காப்பியும் தந்

கோர்ட்டில் ஒருவர் மீது கொலை வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது.

நீதிபதி, குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை அளித்து தீர்ப்புக் கூறினார்.

குற்றவாளிக்காக வாதாடிய வக்கீல் திடீரென்று வாசல் பக்கம் பார்த்துவிட்டு, "நீதிபதி அவர்களே! என் கட்சிக்காரர் கொலை செய்த தாகக் கூறப்படும் நபர் இதோ உயிருடன் வருகிறார் பாருங்கள்" என்றார்.

கோர்ட்டில் வக்கீல், "பார்த்தீர்களா? நான் சொன்ன பொய்யை நம்பி எல்லோரும் வாசலைப் பார்த்தீர்கள். இதிலிருந்து என் கட்சிக் காரர் அந்த நபரைக் கொலை செய்து விட்டார் என்பதில் உங்களுக்கு சந்தேகம் இருக்கிறது என்று புரிகிறதா?" என்று கேட்டார்.

நீதிபதி அமைதியாக, "ஆமாம், நான் கூட திரும்பிப் பார்த்தேன் என்பது உண்மைதான். ஆனால் குற்றம் சாட்டப்பட்ட நபர் மட்டும் திரும்பிப் பார்க்கவே இல்லை. எனவே தண்டனையை உறுதி செய்கிறேன்" என்றார்.

'சிரிப்புக் கதைகள்' நூலிலிருந்து

- மன்னை எஸ்.எஸ்.



தான். ராத்திரி சமையலும் முடிந்து விட்டது. மாட்டுப் பெண் ஏழு மணிக்கு வந்தவுடன் கிளம்பினாள்.

"எங்கேம்மா போறே?"

"இல்லைடா. இன்னிக்கு கோவில்லே திவ்ய நாமம். கதைக் குத்தான் போகணும்னு நினைச்சும் போக முடியல்லே."

"திவ்யநாமம் கேட்டால் புண்யம்தான். ஆனா வெளிலே என்ன பனி பாத்தாயா? ஊதக் காத்து வேற அடிக்கறது. உனக்கு உடம்பு ஏற்கெனவே பூஞ்சை. ராத்திரி முழுக்க இந்தக் குளிர்லே உட் கார்ந்துட்டு... அப்புறம் படுத்துண்டா ஆஸ்துமா வந்து நீதான் கஷ்டப்படுவே."

"அதுக்கென்னடா பண்றது? கூடப் பொறந்த வியாதி. என் கூடத்தான் போகும்."

"இல்லம்மா. ஏதோ ஆசைலே போயிட்டு, பின்னே நீ மூச்சு விட முடியாம கஷ்டப்படுவியேன்னு சொன்னேன்."

பிள்ளையின் கரிசனம் கண்டு பெருமையாக இருந்தது. எத்தனை அக்கறை இருந்தா இப்படித் தன் உடம்பு பற்றிக் கவலைப்படுவான். அவன் சொல்றது நியாயம்தானே. இப்ப போகாட்டிதான் என்ன? ராமர் எங்கும்தான் இருக்கார். வீட்டில் மட்டும் இல்லையா? உள்ளே சென்று புடைவையை மாற்றிக் கொண்டாள்.

வேலைகள் சீக்கிரம் முடிந்தபடியால் வழக்கத்துக்கு மாறாக பத்து மணிக்கே படுத்துக் கொண்டாயிற்று. அரை மணிக்கு மேல் புத்தகம் படித்தும் தூக்கம் வரவில்லை. அதுக்கு மேல் படிக்க, மெதுவாக மங்கிவரும் பார்வை சக்தி இடம்தரவில்லை. விளக்கை அணைத்துவிட்டு, படுத்துக் கொண்டாள்.

கண்முன் காலில் சதங்கை கட்டி சந்துரு மாமா ஆட... கூட் டத்து திவ்ய நாம கோஷங்கள் காதில் ஒலித்தன. ஹூம்... அதெல் லாம் ஒரு காலம். உடம்பில் பலமும் உள்ளத்தில் உற்சாகமும் நிரம்பிப் பொங்கிய காலம். இப்போது தினப்படி வயத்துப்பாடே பெரிய அசுவமேதமாக இருக்கிறது.

'என்னிக்கோ ஒருநாள் வெளிலே கிளம்பினா, என் அதிர்ஷ்டம் இந்த ஊரிலே மார்ச் மாதம் கூடப் பனி பெய்கிறது.'

ராமு சொல்வது சரிதான். அவளுக்கு பனி ஒத்துக் கொள்ளாது.

"அப்பனே... ராமச்சந்திரா" என்று புரண்டு படுத்தாள். தூக்கம் வருவேனா என்று அடம் பிடித்தது. பாத்ரூம் போகணும் போல இருந்தது.

எழுந்து கதவைத் திறந்தவள் காதில் பிள்ளையிடம் மாட்டுப் பெண் பேசுவது விழுந்தது துரதிருஷ்டம்தான்.

"நல்லவேளை! நீங்க எப்படியோ சமாளிச்சுட்டேன். இல்லேன்னா பஜனைக்குப் போயிட்டு இருமல் ஆஸ்துமான்னு நாலு நாள் கட்டையை நீட்டி படுத்துண்ட்டா... மருந்துக்கு ஆகற செலவோட, லீவ் வேற போட வேண்டி வரும். அப்புறம் நானன்னிக்கு ஆபீஸ்லே பிக்னிக் வேற. நமக்குப் போக முடியாமல் போகும். பரவாயில்லே... நீங்க பேசக் கத்துண்டுருக்கேள். சாமர்த்தியமா தட்டிக் கழிச்சுட்டேள்" என்று சிரித்தாள்.

பாத்ரூம் போகாமலேயே திரும்ப வந்து படுத்துக் கொண்ட அம்புஜத்திற்குக் குழப்பமாக இருந்தது.

வயதானவர்களுக்கு ஆசையே இருக்கக் கூடாதோ? முடிகிறதோ இல்லையோ, குடும்பத்திற்கு வேலை செய்யலாம். ஆனால் தனக் காக என்று ஒன்றும் செய்ய முடியாது. சொந்த விருப்பம் இருக்கக் கூடாது. அவர்கள் உடம்பு படுக்கை போடக் கூடாது. கடைசி வரை அவர்கள் பிரயோசனப்பட்டாக வேண்டும். இந்தக் குடும்பத்திற்காகத் தான் காலில் சலங்கை கட்டி ஆடுகிறோமோ என்று தோன்றியது.



"நம்ம தலைவர் ரொம்ப மோசம்."

"ஏன்?"

"தன்னோட கையெழுத்து கிறுக்கலா இருக்குன்னு தனக்கு டாக்டர் பட்டம் வேணும்னு கேட்கறாரு."

– பா. ஜெயக்குமார்



"குறைந்த செல வுல அந்த மருத்து வர் ஆபரேஷன் செய் யறாருன்னு அவரி டம் போனது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"பிளேட்டால, வயிற் றைக் கீறி, பிறகு கோணி ஊசியால தைச் சுட்டார்!"

– அ. கிருஷ்ணன்

ஆசை நெசவு

10

"வராதவள் வந்து நிற்கிறாள்.. நிற்க காலில்லாவிட்டால் என்ன? மனதில் அவள் நிமிர்ந்தே நிற்பவள் என்பதை கண்ணிலேயே காட்டுகிறாள்.

'காதில்லை கேட்பதற்கு
கண்ணில்லை பார்ப்பதற்கு
வாயுமில்லை பேசுவதற்கு
ஆனால் வந்தவர்க்கெல்லாம்
நீதி தருமாமே தராசு....'

- மோகன்ராமையும் அவள் தராசாகக் கருதுகிறாள்!"

வாசலில் நரசிம்மனுடைய மனைவி நாமகிரியும் மகள் கனகாவும் நின்று கொண்டிருக்கின்றனர். இதில் கட்டைக் காலுடன் நிற்கும் கனகாதான் மகாலட்சுமிக்குள் அதிர்ச்சியை மூட்டியவள்.

'எப்படி ஆனது இப்படி?' - சொற்ப வினாடிகளில் நினைப்பைக் கண்களில் தேக்கியபடி நரசிம்மன் பக்கம் திரும்பிப் பார்க்கிறாள் மகாலட்சுமி. அவர்களை உள்ளே கூப்பிடக் கூட மறந்து போய் விட்டது.

"என்ன பாக்கறே? அம்மன் விக்ரகமாட்டம் இருக்கறவளுக்கு இப்படி ஒரு குறையான்னா...?" நரசிம்மனிடம் உஷ்ணமான பெருமூச்சு.

"வா நாமகிரி... வாம்மா வா..." - இருவரையும் உள்ளே அழைத்து அழுக்குப் பாயை விரித்து அதில் உட்கார்த்தியும் வைத்த பிறகே அடுத்த கேள்விக்குப் போகிறது மகாலட்சுமியின் மனது.

"ஆமா எப்படி ஆச்சு?"

"ஹூம்... எல்லாம் தலைஎழுத்து!"

"தோ பார்... இப்படி தலைஎழுத்து கால் எழுத்துன்னா எப்படி? உன்கிட்ட காசா இல்லை? நல்ல டாக்டர்கிட்ட..."

"நிறுத்துக்கா... நிறுத்து... நிறுத்து... காட்டாம இருப்பேனா? போலியோ கொடுமைக்கு இன்னும் சரியான மருந்து இல்லை. அதனால தான் தடுப்பு மருந்து கொடுக்க அரசாங்கமும் பாடா படுது..."

"இது எனக்குத் தெரியாதே நரசிம்மா...?"

"உனக்கு மட்டுமில்ல! யாருக்கும் நான் தெரிவிக்கலை. என் பாரம் என்னோட இருக்கட்டும்னு விட்டுட்டேன்."

மகாலட்சுமியின் பார்வை இப்போது கனகா மேல் அனுதாபக் கசிவோடு தாவுகிறது. நல்ல உயரம், நிறம் எல்லாம். உட்கார்ந்திருக்கையில் பார்க்க ஒரு ஊனமும் தெரியவில்லை.

கண்ணில் கூட காந்த அலை சரம் சரமாக! கால் ஊனத்துக்கு ஈடுகட்டுவது போல இடுப்பைத் தாண்டி விட்ட கூந்தல். நிறத்திலும் கூட செம்மையை விழுங்கி விட்டிருக்கிறாள்.

லாகவமாய் மருதாணி இட்டுக் கொண்டிருக்கிறாள். நகம் திருத்தியிருக்கிறாள். தலை வகிடு கூட சற்று ஓரம் கட்டப்பட்டு அந்த




நாளைய இந்திராகாந் தியை நினைவில் பற்றி இழுக்கிறது.

"என் கண்ணே...! பிரம்மா உன்னைப் பாத்து பாத்துப் படைச்சிருக்காண்டி! பாழாப் போனவன் கால்ல மட்டும் கைய வெச்சுட்டானே?" அவளைத் திருஷ்டி கழித்து சனைக்கிறாள் மகாலட்சுமி.

"ஆமா, எங்க மோகன்ராம்?" - நாமகிரி கேட்கும்போது மோகன்ராமே வந்து விட்டிருக்கிறான்.

முதலில் அவனுக்கு நரசிம்மனை அத்தனை





அடையாளம் தெரியவில்லை. யாரோ அம்மாவுக்குத் தெரிந்தவர்கள் என்பதாகத்தான் நினைக்கிறான். அதனால் அவர்களைப் பார்த்தும் பார்க்காதது போல் கைவசமிருந்த புத்தகத்தைத் தறிமேடையில் வைத்து விட்டு, கால் கழுவக் கொல்லைப்புறம் செல்கிறான்.

"என்ன உன் மகனுக்கு என்னை அடையாளம் தெரியலியா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். நீ அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருந்தா தெரியும். உன் பாவா சாவுக்குக் கூட பத்தாம் நாள் வந்து பத்து நிமிஷம் மட்டும் இருந்துட்டுப் போயிட்டே. அவனுக்கு எப்படி அடையாளம் தெரியும்? சரி சரி, இரு வந்துடறேன்..."

"எனக்கு எங்க போனாலும் இவ கவலையே பெரிசா இருக்கச்சே, நான் என்ன பண்ணட்டும்?"

– நரசிம்மனின் சமாளிப்பில் தான் மிதிபடுவதை உணர்ந்து, கனகா நிமிர்ந்து அப்பனை ஒரு பார்வை பார்க்கிறாள். இன்னும் எத்தனை பேரிடம் என்னை பாரம் என்றாக்கி உனது அலுப்பை கரைத்துக் கொள்ளப் போகிறாய்? என்று கேட்காமல் கேட்கிறாள்.

நொண்டிமுடமாக இருப்பதை விடவும் பெரிய கொடுமை இப்படிப் பிறத்தியாரின் கழிவிரக்கத்துக்கு உள்ளாவதுதான் என்கிற மாதிரி எல்லாம் நினைப்பவள் அப்படியே தலையைத் திருப்பி மோகன்ராமின் செயல்பாடுகளைப் படம்பிடிக்க ஆரம்பிக்கிறாள். மகாலட்சுமி ஒரு தூக்கு வாளியுடன் வெளிக்கிளம்புவதைப் பார்த்தால் காப்பி வாங்க ரங்காச்சாரி கடைக்குப் போகிறாள் என்பது புரிகிறது.

'மோகன் ரொம்ப நல்ல பையன். ஒரு சின்ன கெட்ட பழக்கம் கூடக் கிடையாது. எட்டாம் கிளாஸ் வரைதான் பள்ளிக்கூடம் போனான். அப்புறம் ப்ளஸ் டூ, காலேஜ் எல்லாமே தானே படிச்சு எழுதி பாஸ் பண்ணினான். அவனுக்குப் பெரிய வக்கீலா வந்துடணும்னு என்ன ஒரு ஆசை தெரியுமா?

ஏண்டா உனக்கு இந்த பொய் சொல்ற உத்யோகம்னு கேட்டா, பொய்ய கொல்ற உத்யோகம்னு சொல்லுங்கன்னு திருத்தறான்!

சதா சமூக நினைப்பு. தப்ப எங்க, யார் கிட்ட பார்த்தாலும் சீறி விழற குணம். நல்லதுக்காக உசுரையும் கொடுக்கத் துணிஞ்ச வைராக்ய மனசு... நம்ப சமூகத்துல இப்படி ஒரு பிள்ளையைப் பாக்கறது அபூர்வம்ப்பா...'

நரசிம்மனிடம் நேற்றோ முந்தினமோ யாரோ சொன்னது கனகாவின் காதில் ஓடிக் கொண்டிருக்கிறது.

– அது மட்டுமா ஓடுகிறது? பேசிய அத்தனையும்தான்...

"தோ பார் நரசிம்மா... பேசாம மகாலட்சுமியைப் போய்ப் பார். ரொம்ப நாளாச்சே. சொந்தம் சுணங்கிக்கிடக்கேன்னுல்லாம் நினைக்காதே. அவ கைல கால்ல விழுந்தாவது உன் பொண்ணை மோகன்ராமுக்குக் கட்டி வை.

"அவன் நொண்டி, முடம், நான் பண்ணிக்க மாட்டேன்னுல்லாம் ஒருக்காலும் சொல்ல மாட்டான். அவனை எனக்குத் தெரியும்.

"அதோட சில நியாயக் கதை பேசி ஊர் ரவுடிகளால கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கான். தறிக்கெல்லாம் நெருப்பு வெச்சுட்டாங்கப்பா! இனிமே அவனுக்கெதுக்கு தறியும் பட்டும்? பேசாம வீட்டு மாப்பிள்ளையாக்கி பரமக்குடிக்கே கூட்டிக்கிட்டுப் போ. உன்னோட வெச்சுக்கோ. அது அவனுக்கும் நல்லது.

"மதுரைலயும் நம்ம ஜனங்க அதிகம் இருக்காங்க. அங்க வேணாலும் பிராக்டீஸ் பண்ணட்டும். உன் சொத்து ஒன்னு போதுமே, அவன் ஒக்காந்து சாப்பிட. ஆகையால பிராக்டீஸ்ல வருமானம் பெயரலைன்னாலும் பாதகமில்லை."

– இப்படியும் பேசியதெல்லாம் அவள் காதில் ஓடி அடங்குகிறது. மோகன்ராமோ முகம் கழுவி, தலை வாரி, விபூதி தரித்து திரும்ப பாடப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளத் தயாராகிறான்.

வாலிப வயதில் ஒரு பெண் தேவலட்சணங்களோடு இருப்பதை ஓரஞ்சாரமாகக் கூடப் பார்க்காமல், யார் என்று கூடக் கேட்காமல் தன் காரியத்திலேயே எப்படி இத்தனை கருத்தாக இருக்க முடிகிறது? கனகாவிடம் வியப்பு மூளத் தொடங்குகிறது. நாமகிரி முதல் நரசிம்மன் வரை எல்லோருக்கும் வியப்புதான். அவர்களுக்கு அவனிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்றுதான் தெரியவில்லை.

"என்ன மோகன்ராம்...?" – நரசிம்மனே ஒருவழியாக ஆரம்ப நூல் பிடிக்கிறார்.

ஏறிடுகிறான் மோகன்ராம்.

"என்னைத் தெரியலையா?" – நரசிம்மன் அப்படிக் கேட்ட காரணத்தால் ஊன்றிப்

ரங்கசாமி கடற்கரை ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தான்.

"உதவி! உதவி!" என்று யாரோ கத்துவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கடலில் ஒருவர் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

ரங்கசாமி ஓடிப் போய் நீரில் குதித்து அவரைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

அதன் பிறகுதான் தெரிந்தது. அவர் அவனது ஆபீஸ் மானேஜர் என்று.

மானேஜர் நெகிழ்ந்து போய், "ரங்கசாமி! நீ செய்த இந்த உதவியை மறக்கவே மாட்டேன்.

நாளை காலை நமது அலுவலகத்தில் எல்லா ஊழியர்கள் முன்பாகவும் நீ என்னைக் காப்பாற்றிய விஷ



யத்தைக் கூறி உனக்குப் பரிசு தரப் போகி றேன்'' என் றார்.

ரங்கசாமி அழுதுகொண்டே சொன்னான் :

''வேண்டாம் சார். உங்களை நான் காப்பாற் றிய விஷயம் அவர்களுக்குத் தெரிந்தால் அவர் கள் என்னை அடித்தே கொன்று விடுவார்கள்!''

– 'சிரிப்புக் கதைகள்' நூலிலிருந்து மன்னை எஸ்.எஸ்.

பார்க்கிறான். தெரிய வரவில்லை என்பதை முகத்து தசை நார் சுருக்கத்திலேயே உணர்த்து கிறான்.

"நான் பரமக்குடி நரசிம்மன் மாமாப்பா..."

"அப்படியா?" – மோகன்ராமிடம் சுரத்தில் லாத அங்கீகாரம்.

''என்ன அப்படியான்னுட்டே.... உன் அம்மா வழிக்கு இப்ப நான் ஒருத்தன்தான் உசுரோட இருக்கேன்.."

"சந்தோஷம். இருந்து சாப்ட்டு போங்கோ..."

"நாங்க சாப்டுட்டு போறது இருக்கட்டும். நீ எங்க கிளம்பிட்டே?"

''இன்னும் கொஞ்ச நாள்ல பரீட்சை. அதான் கிளம்பிட்டேன்."

"இப்பல்லாம் எல்லாரும் டாக்டராகணும், எஞ்ஜினியராகணும்னுதான் ஆசைப்படுவா. நீ வக்கீலாக ஆசைப்பட்டிருக்கியே. நொவடேஸ் இட் ஈஸ் ஹைலி ரிஸ்கி ஜாப். யூ ஆல்சோ நோ தி எக்ஸாம்பிள் ஆஃப் சண்முககந்தரம்..."

– நரசிம்மன் தனது கல்வி உலக ஞானத்தை மெல்லக் கலந்தடிக்க, மோகன்ராமிடம் அதற்கு வழிசலான சிரிப்பு மட்டும்தான் பதிலாக மிஞ்சுகிறது. கனகா கைநிறைய கண்ணாடி வளையல் தரித்திருக்கிறாள். அதை வேண்டு மென்றே அசைத்து சப்தித்து தன்னைப் பார்த் திராத அவன் கவனத்துக்குள் சலனம் மூட்டு கிறாள். அவன் பார்வையும் கூட மெள்ள அவள் பக்கம் திரும்புகிறது. அவள் ஏறிடு கிறாள். ஊசி குத்தியது போல் ஒரு உள்ளு ணர்வு. பார்வையா அது? முதல் தடவையாக மோகன்ராம் பிரமிக்கிறான்.

"அது என் பொண்ணுப்பா! பேரென் னன்னு கேக்கலையே..?'' வாகாக எடுத்துத் தருகிறார் நரசிம்மன்.

''நிச்சயம் ஊர்வசி, மேனகான்னுதான் இருக்கணும்" – மோகன்ராமை மீறி விட்டது அவன் ரசனை. அதுதான் அப்படிப் பேசி விட் டான். அவளிடமும் பனிக்குளத்தில் பாய்ந்தது போல் ஒரு பரவசம்.

"வேணும்னா உன் விருப்பத்துக்காக அந்தப் பேரையும் வெச்சுடறேன். ஆக்சுவலி ஷி ஈஸ் கனகா!"

"ஐ.சி... என்ன படிச்சிருக்காங்க...?"

"சும்மா படிச்சிருக்கான்னே கேளு. எம்.ஏ. சோஷியாலஜி!"

"எக்ஸெலண்ட்."

"இந்த சோஷியாலஜிக்கு ஒரு வக்கீல்தான் மாப்பிள்ளையா வரணுமாம். அதுக்குத்தான் சேலம் வந்துருக்கோம்..."

நரசிம்மன் ஒருவழியாக விஷயத்தை நெருக் கிப் பிடிக்கிறார். மோகன்ராம் முகத்தையே கவனிக்கிறார். அவனிடம் ஒருவிதமான தடு மாற்றம். என்ன நினைத்தானோ, புத்தகத்தோடு வெளியே கிளம்பி விட்டான்.

அவன் அப்பால் நகரவும், மகாலட்சுமி தூக்கு வாளியில் காப்பியுடன் உள்நுழைகிறாள்.

''அட என்ன நீ... இதுக்கா வெளிய போனே?'' – நரசிம்மனிடம் போலி விசா ரணை.

"அது சரி.. வராதவன் வந்துருக்கே, ஒரு காப்பி கூட கொடுக்கலைன்னா எப்படி? ஆமா மோகன் ஏதாவது பேசினானா?"

"எங்க.. படிக்கணும் படிக்கணும்னு பறந் துட்டான்."

காப்பியை உறிஞ்சிக் கொண்டே நரசிம்மன் சடைத்துக் கொள்ள, அதை மகாலட்சுமி துல்லியமாக நறுக்குகிறாள்.

''அப்ப நிறைய பேசணும்னு நினைச் சியோ?"

"இல்லியா பின்னே.. என் மருமகப் பிள்ளை கூட பேசணும்னு எனக்கு ஆசை இருக்காதா?"

"அவன் கிட்டையோ என் கிட்டையோ பேச நாங்க என்ன மிட்டாவா, மிராசா, நர சிம்மா?"

மகாலட்சுமி எந்த அர்த்தத்தில் அப்படிக் கேட்டாளோ தெரியாது. நரசிம்மன் அடுத்த நொடி மகாலட்சுமியின் காலடியில்.

"நேத்து வரை எப்படி இருந்தாலும் மன் னிச்சு, இனி சகஜமா இருக்கணும்கா நீ. என் பொண்ணை நான் ஒரு நாலு நாளைக்கு இங்க விட்டுட்டுப் போகலாம்னு இருக்கேன். எப்ப வும் கூட அவ இங்க இருக்கறதுல எனக்கு ஆட்சேபணையில்லை – என்ன சொல்றே?"

''தாராளமா...''

இப்போதைக்கு இந்த அளவு விஷயம் பழுத்ததே பெரிதாகத் தோன்றியது நரசிம்ம னுக்கு. 'நாராயணா' என்று நன்றி சொல்கிறது உதடு.

காட்டுத் தீயை விடக் கூடுதல் வேகத்தில் தாமு எரிந்து போய் ஆஸ்பத்திரியில் கிடக்கும் சேதி பரவிக் கொண்டிருந்தது. அத்தனை களே பரத்திலும் ஒரு ஆச்சரியமான விஷயம் என்ன வென்றால் யாரால் அப்படி ஆனது என்கிற பேச்சே இல்லாததுதான்!

'ஒரு பொட்டச்சி எனக்கு நெருப்பு வெச்



உங்களை காமிரா முன்நிறுத்தி 'ஸ்டெடி, ஸ்மைல் ப்ளீஸ்' என்றவுடன் 'சீஸ்' என்ற வார்த்தையை குரல் எழுப் பாது, காற்றோடு உச்சரியுங்கள். க்ளிக்.

உங்கள் புகைப்படத்தைப் பாருங்கள்! நீங்கள் தான் புன்னகை மன்னன்! புன்னகை அரசியும் தான்!

- க. மாரியப்பன்.

கட்டாங்கறது வெளிய தெரிஞ்சா எனக்குத் தான்டா அவமானம். மூச்சு விடக் கூடாது' என்று தாமுவே கூட சொல்லி விட்டானோ என்னவோ? செய்தியறிந்து ஊரே பட்டாசு வெடித்துக் கொண்டாடாத குறை.

"பட்டுக்கு நெருப்பு வெச்சான். அதான் பகவானா பாத்து அவனுக்கு வெச்சுட்டான். கலியுகத்துல எதுவும் கண்ணுக்கு முன்னே..." - பருத்திப் பால் குடித்தபடி ஒரு பவர்லூம் காரன் ஆரம்பிக்கிறான்.

"எப்படிப்பா ஆச்சு.... விட்டா அவன் ஊருக்கே நெருப்பு வைக்கறவனாச்சே..." - ஒரு அரை தாடி, திவான் பீடிப் புகையோடு கேள்வியைக் கரைக்கிறான்.

அப்படியே அரசியல், ஆட்டுக் குட்டி என்கிற சமாசாரங்கள். இதற்கு நடுவில் அன்றைய பகலை கவ்விப் பிடித்து விழுங்க ஆரம்பித்து விட்டது இருட்டு. போகட்டும் என்று நிலாவிளக்கு ஏறுகிறது தென்கிழக்குக் கீழ்வானில்... அந்த நாளைய திருமணிமுத்தாறு இந்த நாளில் மெலிந்தும் கருத்தும் ஊர்ச் சாக்கடையை உள்வாங்கிக் கொண்டும் நாற்றக் கமறலோடு கிடக்கிறது. அதன் ஓரமாக நடந்து மாரியம்மன் கோவிலைப் பார்த்தபடி நடக்கும் போது மாரியம்மன் மேலேயே ஒரு பரிதாபம் தோன்றும்.

இந்த நாற்றம் சகியாமல்தான் அவள் கல்லானாளோ? சமயத்தில் இப்படிக் கூட மோகன்ராமுக்குத் தோன்றும். இன்று வேறு மாதிரி தோன்றுகிறது. அவனும் முகுந்தனும் காலார கிளம்பி வந்திருக்கிறார்கள்.

"என்னடா.... என்ன எதுவும் பேச மாட்டேங்கறே... தாமுவைக் கடவுள் எவ்வளவு சீக்கிரமா தண்டிச்சுட்டார் பார்த்தியா?" - என்று தாமுவின் விஷயத்தை அவனும் தொடுகிறான்.

- மோகன்ராமை ஏகத்தானச் சிரிப்பு கவ்வுகிறது.

"எதுக்குடா சிரிக்கிறே?"

"இல்ல, கடவுள் தண்டிச்சுட்டார்னு சொன்னியே, அதை நினைச்சு சிரிச்சேன்."

"இல்லியா பின்னே...?"

"அநாவசியமா இங்க கடவுளை கூப்பிடாதே. தாமு மேல பரிதாபப்பட வேண்டிய நேரம் இது. கடவுளை நினைச்சு கைகூப்பற நேரமில்லை..."

"என்னடா நான்சென்ஸ் பேச்சு இது... அவன் ஒரு தெருப் பொறுக்கி. அவனுக்குப் போய் பரிதாபப்படணும்கறே... மோகன் என்ன கிண்டலா?"

"சத்யமா இல்லை முகுந்தா... எனக்கு என்னவோ இப்ப அவனை நினைச்சா பரிதாபமாத்தான் இருக்கு."

"விட்டா போய் பால் பழம் வாங்கித் தந்து உடம்பைப் பாத்துக்கோன்னு கூடச் சொல்வே போல இருக்கே?"

"கரெக்டா சொன்னே. நாம இப்ப பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் போறோம்..."

"டேய்ய்ய்..." முகுந்தன் நிஜமாலுமே அதிர்கிறான்!

தாமுவைச் சுற்றி ஜவஹர் பாபுவிலிருந்து ஒரு கூட்டமே நிற்கிறது. கருகிப் பொசுங்கிப் போய் மேனி முழுக்க தீக்காயத்தோடு நீலத்தில் குளித்தது போல ஊதா நிற மருந்து பூசி உருத்தெரியாமல் கிடக்கிறான். அருகே கவலையோடு வந்து நிற்பவனைப் பார்க்கக் கூட அவனிடம் திடமில்லை. ஆனால் ஜவஹரிடம் அவனுக்கும் சேர்த்து இருக்கிறது.

"என்ன, எவ்வளவு எரிஞ்சிருக்குன்னு பாக்க வந்தியா?" எனும் கேள்வியில் அது தெரிகிறது. மோகன்ராம் அவனை கனிவாகப் பார்க்கிறான்.

"நீ பெரிய ஆளுடா. பிள்ளையையும் கிள்ளி விடுவே, தொட்டிலையும் ஆட்டி விடுவே. ஆனா நாங்க அப்படியில்லை. எங்களுக்கெல்லாம் உங்களை மாதிரி நடிக்கத் தெரியாது..." - ஜவஹரின் பேச்சு இந்த முறை மோகன்ராமைக் குழப்புகிறது.

"ஜவஹர் உனக்கும் எனக்கும் ஆயிரம் கொள்கை வேறுபாடு இருக்கு. அது வேற...: இப்ப நீ சம்பந்தமில்லாம ஏதேதோ பேசறே..." என்கிறான் அந்தக் குழப்பம் நீங்காமல்.

"யார் சம்மந்தமில்லாம பேசறது? நானா? நீதான் சம்மந்தமில்லாத மாதிரி நடிக்கிறே?"

"திரும்பவும் சொல்றேன். குழப்பாம நேரா பேசு."

"என்னடா நேரா? நாங்க நேராதான் உன் வீட்டுக்கு வந்தோம். நெருப்பும் வச்சோம். ஆனா உன்னை மாதிரி ஒரு பொட்டச்சிய ஏவி விடலை...!"

"யார் பொட்டச்சிய ஏவி விட்டது. என்ன சொல்றே நீ?"

"அப்ப கவிலாவை நீ அனுப்பலேங்கிறியா?"

"கவிலாவா.. அவளா...?"

அவன் மனதில் கவிலா எரிய ஆரம்பித்திருந்தான்!

(தொடரும்)



ஆச்சரியப்படுங்கள்!

1997ம் வருடத்தின் கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் ரிலீஸ் ஆகிவிட்டது. அதிலிருந்து சில சுவையான கொறிப்புகள்:

- ஜியோவன்னி ஓர்செனிகோ. ரோம் நாட்டு பல் டாக்டர். 1868 முதல் 1904 வரை, தான் பல்வேறு நோயாளிகளின் வாயிலிருந்தும் பிடுங்கிய பற்களை பத்திரமாக பாதுகாத்தவர் இவர். இந்தக் காலகட்டத்தில் சராசரியாக தினம் 185 பற்கள் பிடுங்கியவர் இவர்!

- மார்கரெட் மெக்நாட் என்ற பெண்மணிக்கு 22 குழந்தைகள் பிறந்தன. 12 பிள்ளை; 10 பெண். இதிலே ஒருதடவைகூட இரட்டையோ, மூன்றோ கிடையாது!

- 'பே வாட்ச்'- இதுதான் இன்று உலகில் மிக அதிகமான பேர் பார்க்கிற டீ.வி. தொடர். வாராவாரம் 102 நாடுகளில் 1.1.பில்லியன் பேர்கள் பார்க்கிறார்கள்.

- உலகின் மிகப் பெரிய குறுக்கெழுத்துப் புதிர் என்ற பெருமைக்குரியது கனடாவைச் சேர்ந்த ராபர்ட் டர்காட் என்பவர் அமைத்ததுதான். மேலிருந்து கீழாக 13,125 க்ளுக்களும், இடமிருந்து வலமாக 12,489 க்ளுக்களும் அதில் இடம் பெற்றிருந்தன.

- கிளியோ பாட்ரா படத்தில் எலிசபெத் டெய்லர் 65 விதமான உடைகளை அணிந்து தோன்றியது உலக சாதனை. அதே போல, இன்றைய விலைவாசி கணக்குப்படிப் பார்த்தால், மிக அதிக பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படமும் அதுவே. சுமார் 500 கோடி பட்ஜெட். வாட்டர் வோர்ல்டு படத்தைவிட சுமார் 90 கோடி ரூபாய் அதிகம்.

- மத்திய பிரதேசத்தில் ஒரு திருவிழா நடந்தபோது யோகேஷ் ஷர்மா என்பவர், 31,118 முறை பல்வேறு பேருடனும் கைகுலுக்கியது கூட ஒரு உலக சாதனைதான்.

- பிரிட்டனில் கிம்பர்வொர்த் என்ற இடத்தில் உள்ள விக் மற்றும் கிறிஸ்டியன் கெல்லி அதிர்ஷ்டமில்லாத வியாபாரிகள் என்ற முறையில் கின்னஸில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆம்! அவர்களது கடை 1984முதல் 94 வரையான பத்தாண்டுகளில் 72 முறை கொள்ளையடிக்கப்பட்டது. 94ல் நஷ்டம் தாங்காமல் கடையை மூடிவிட்டார்கள்.

- ஹாரி பிட்வெடல் தம் மனைவியை 1980 நவம்பர் 21ம் தேதி விவாகரத்து செய்தார். அப்போது கணவருக்கு வயது 101. மனைவிக்கு 65!

தொகுப்பு: **மானஸா**

அவர் ஓர் அதிசயப் பிறவி!

ஏழ்காத ஷிப்: ராதிகா

பொதுவாக திரையுலகைச் சேர்ந்தவர்கள் நெருங்கின நண்பர்களாக ஆவதில்லை. ஒரு சினிமா ஷூட்டிங் முடிஞ்சு போச்சுன்னா, அடுத்து வேற சினிமாவிலே சந்திச்சாத்தான் ஹலோ சொல்லிக்குவோம். சூழ்நிலை அப்படி. இந்த நிலையிலே ஸ்ரீபிரியாவும் நானும் தொடர்ந்து, உரசல் இல்லாமல் ரொம்ப நாளா பழகிட்டு இருப்பது சந்தோஷமான விஷயம்தான்.

ஆனா நட்புன்றது இதைவிடவும் கொஞ்சம் அதிகம். அந்தவிதத்தில் ரிச்சர்ட் ஹார்டிதான் எனது நெருங்கிய நண்பர். ஒருவரின் கம்பெனியை மற்றவர் தொடர்ந்து விரும்புகிறோம்.



ஏதோ என் கணவர் என்பதால், பிரச்னை இல்லாமல் இருக்க அவரையே என் சிறந்த நண்பர்னு சொல்லிக்கிறதா நினைக்கக்கூடாது. சொல்லப் போனா அவரும் நானும் ஒன்றரை வருடங்கள் நண்பர்களாக மட்டும்தான் பழகியிருக்கிறோம். புல்லரித்துப்போவது மாதிரியோ, புளகாங்கிதப்படும்படியோ அந்தக் காலகட்டத்தில் எங்களுக்கிடையே எந்த உணர்வும் ஏற்பட்டதில்லை.

என் சகோதரரின் மாமியார் இலங்கையிலே ஷிப்பிங் தொடர்பான வியாபாரம் செய்துகிட்டிருந்தாங்க. அந்த வியாபாரத்தில் பங்குதாரராக இருந்தவர் என்கிற வகையில்தான், கொழும்புவில் நடைபெற்ற பார்ட்டி ஒன்றில் அவர் எனக்கு அறிமுகமானார். முதல் சந்திப்பில் நாங்கள் பெரிதாக நட்பு என்ற கோணத்தில்கூட - ஈர்க்கப்பட்டுவிடவில்லை என்றாலும், அவரது நகைச்சுவை உணர்வு எனக்குப் பிடித்திருந்தது.

நகைச்சுவை என்றால் மற்றவர்களின் பலவீனங்களைப் பற்றியதாக இருக்கக்கூடாது என்ற அவரது கொள்கையையும், அவர் சொல்லாமலேயே என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

முதல் சந்திப்புக்குப் பிறகு, அவரவர் நாட்டுக்குத் திரும்பிவிட்டோம். எங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்தெல்லாம் கிடையாது. அடுத்தடுத்த - தற்செயலான - சந்திப்புகளில் எங்கள் நட்பு வலுப்பட்டது. என்னிடம் அவருக்குப் பிடித்த குணம் என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவரது பல நல்ல குணங்களை நாளடைவில் என்னால் உணர முடிந்தது.

ஒரு வருடத்தில் நாங்கள் நெருங்கிய நண்பர்கள் ஆனோம். உண்மையான நண்பனிடம் எந்தத் தயக்கமும் இல்லாமல் மனம் திறந்து எதையும் பேசலாம். "இதைச் சொன்னால் வருங்காலத்தில் நமக்கெதிராகவே இந்த

விஷயத்தைப் பயன்படுத்துவாரோ?'' என்றெல்லாம் சந்தேகம் கொள்ள விடாமல், நம்மை நாமாகவே இயல்பாக இருக்க வைப்பதுதான் நட்பு. எந்த 'நேரத்திலும் ஒருவரை ஒருவர் சந்திக்கச் செல்லலாம். "ஒரு வேளை நாம் அவரைச் சந்திப்பது அவருக்கு இடைஞ்சலாக இருக்குமோ?'' என்ற உறுத்தலின்றி. அதுதான் உண்மையான நட்பு.

நாளடைவில் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். எங்களிடையே காதலைவிட நட்பு இன்னமும்கூட ஒரு படி தூக்கலாகத் தான் இருக்கிறது.

எனக்கு கிரிக்கெட் என்றால் கொள்ளை ஆசை. அவருக்கோ ரக்பி என்றால் உயிர். கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லை. நான்கூட அடிக்கடி அவரைச் சீண்டுவதுண்டு. "இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவராக இருந்துகொண்டு, கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லை என்கிறீர்களே. நீங்கள் ஒரு அதிசயப் பிறவி'' என்று.

அவ்வப்போது திரைப்படங்களைப் பார்த்து மகிழ்வது என் வழக்கம். அந்த நேரத்தில் தூங்குவதையே அவர் விரும்புவார். ஏனோ இந்தியத் திரைப்படங்கள் அவருக்குப் பிடிப்பதில்லை - நான் நடித்தவை உட்படதான்!

சிறு வயதில் நண்பர்களிடையே சண்டை, வேகப் பேச்சு, தன் கட்சியை நிலைநாட்டுவதற்காகப் பல விதங்களில் முயற்சிப்பது இவை எல்லாமே இருக்கும். ஆனால் வளர வளர நண்பர்களிடையே இந்த வேகம் அடங்கி, ஒரு வித மனப்பக்குவம் வரும். வர வேண்டும். நல்ல நட்பு என்பது ஒரு மிகப் பெரிய முதலீடு. அந்த விதத்தில் இவர் ஓர் அற்புதமான நண்பர். என்னைப் பலவிதங்களில் ஊக்கப்படுத்துகிறார்.

கணவர் என்ற ஈகோ கிடையாது. மிகவும் தேவையென்றால் மட்டுமே தன் கருத்துக்களைக் கூறுவார். என்னிடம் உதவி கேட்டு சிலர் வருவதுண்டு. அவர்கள் கூறுவதை நம்பி நானும் உதவ முடிவெடுப்பேன். சிலரைப் பொறுத்தவரை என் முடிவுக்கு எதிராக இவர் அறிவுரை கூறியதுண்டு. அதை மீறி நான் நடந்தபோதெல்லாம், தவறான நபருக்கு, பொய்யான காரணத்துக்கு உதவியிருக்கிறேன் என்பது பின்னாளில் தெரியவரும். இது போன்ற சமயங்களில் என் அம்மாகூட, "நான் அப்பவே சொன்னேன், கேட்டாதானே?'' என்று குத்திக் காட்டியதுண்டு. ஆனால் இவரோ அப்படி எதுவும் செய்ததில்லை. ஏளனப் புன்னகைகூட செய்ததில்லை. இதுதானே நிஜ நட்பு?

பேட்டி : **அருண் சரண்யா**

கல்கி • பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு சவரன்!

போட்டி - 10

'வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை அனுபவிப்பதில் இருக்கிறது. ஒளிரும் புன்னகை, சிறகடிக்கும் பட்டுப்பூச்சி, கண் சிமிட்டும் நட்சத்திரங்கள், கைகுலுக்கும் தென்றல் - இதில் ஏதாவது ஒன்றை அரை நிமிடம் ஆழ்ந்து அனுபவித்திருக்கிறீர்களா? துக்கமும் சோகமும் விரக்தியும் வேதனையும் இருக்கவே இருக்கிறது. விட்டுத்தள்ளி, ஓர் அரை நிமிஷம் 'வாழ்ந்து' பாருங்கள்! வயது குறைந்து கொண்டே போவதை வியப்புடன் காண்பீர்கள்!'

அழகான கையெழுத்துக்குச் சொந்தக்காரரா நீங்கள்? உங்கள் கையெழுத்தை கௌரவிக்க, கல்கி காத்திருக்கிறது.

மேலே உள்ள செய்தியை அப்படியே ஒரு வெள்ளைக் காகிதத்தில் எழுதுங்கள். (கறுப்பு இங்க்கில் மட்டுமே எழுதவும்.)

எழுதிய தாளுடன் கூப்பனை இணைத்து அனுப்புங்கள்.

மணியான கையெழுத்தாளர்கள் தம் கையெழுத்தைக் கல்கியில் காணலாம். (சன்மானமும் உண்டு.) மிகச் சிறந்த கையெழுத்து என ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் ஒன்று, ஒரு சவரன் பரிசு பெறும். கூப்பன்கள் வந்து சேரக் கடைசி தேதி 24.3.97. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

சவரன் போட்டி - 10.

அழகான என் கையெழுத்தை, தனித்தாளில் இணைத்துள்ளேன்.

பெயர்:..

முகவரி:..

....

....

....

பாதியில் நின்ற மாதுரி ஆட்டம்!



• ஜோஷி



• மாதுரி தீட்சித்

வெற்றி இரகசியம்

“அரசியலே சூதாட்டம்தான்; இதில் வெற்றி தோல்விகள் சகஜம்” - உள்ளாட்சித் தேர்தலுக்கு ஒரு நாள் முன்பு இப்படித் தத்துவம் பேசினார் தாக்கரே. மறுநாள் அனாயாசமான வெற்றி கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் வார்த்தைகளை அனாவசியமாக விட்டிருக்க மாட்டார்! இவர்கள் நினைத்ததைவிட முப்பது இடங்கள் அதிகமாகவே கிடைத்துள்ளது! சிவசேனையின் இந்த எதிர்பாராத வெற்றிக்கு, மூன்று முக்கியக் காரணங்கள். (1) வேற்றுமைகள் இருந்தபோதும், எப்படியோ பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்தது; (வேறு எந்த இரண்டு கட்சிகளிடையேயும் கூட்டு இல்லை) (2) வோட்டுப் போட்ட 46 சதவிகிதம் பிரஜைகளுள் விஷயமறிந்தவர்கள் வீட்டில் உறங்க, விஷமிகளும் பாமரர்களுமே வாக்குச் சாவடிக்குச் சென்றது; (3) தக்க சமயத்தில் காவ்லியை உள்ளே தள்ளி, சிவசேனை பற்றிய உண்மைகளை வெளியே வராமல் தடுத்தது!

பாலைக் காத்த பூனை

மற்ற இடங்களைக் காட்டிலும், பெஹ்ரம்பாடா (பாந்த்ரா) பகுதியில் சிவசேனை பெற்றதுதான் உண்மையான வெற்றி! முஸ்லீம்கள் நிறைந்திருக்கும் பகுதி இது. பம்பாய் கலவரங்களின்போது சின்னாபின்னமாக்கப்பட்டது! பூனையையே பாலுக்கும் காவலாக்கும் முடிவை எப்படி இவர்கள் எடுத்தார்கள்?

“இறந்த மனத்துடனும், உள்ளார்ந்த நேயத்துடனும் சிவசேனைக்காரர்கள் எங்களை அணுகினார்கள். இவர்கள் ஆட்சியில் இதுவரை ஒரு கலவரமும் இங்கே நிகழவில்லை; மேலும் நாற்பது வருடங்களாக காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டு என்னத்தைக் கண்டோம்!” என்கிறார்கள் படித்த இளைஞர்கள்.


‘பர்மனன்ட் கடுப்பு’

காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததற்கு உட்கட்சிப் பூசலே முக்கிய காரணமென்றாலும், அதற்கு தார்மீகப் பொறுப்பேற்று, பம்பாய் காங்கிரஸ் கமிட்டி தலைவர் முரளிதேவ்ரா ராஜினாமா செய்துள்ளார். இப்படிப்பட்ட ராஜினாமா நாடகங்களைப் பலமுறை தேவ்ரா அரங்கேற்றியிருப்பதாலும், கேசரிக்கும் இவருக்குமுள்ள நெருக்கத்தாலும் இதை யாரும் ‘சீரியஸாக’ எடுத்துக் கொள்ளவில்லை!

முற்பகல் செய்யின்...

“பிரசாரத்துக்கு ஒரு ஈ, எறும்பு வரவில்லை; நான் ஒருவனே காகமாகக் கரைந்தேன்” எனத் தோல்வி அடைந்ததற்கு சஜன்புஜ்பல் ஏனைய தலைவர்களைச் சாடிக் கொண்டிருக்கிறார். மற்றவர்களோ, இவர் மீதே அட்சதையைத் தூவுகிறார்கள். “புஜ்பல் ஒரு காலத்தில் சிவசேனையில் இருந்தபோது ‘தலித்’துகளை எல்லாம் பகைத்துக் கொண்டார். அதனால் அவர்கள் வோட்டுக்களை நாம் ஒட்டுமொத்தமாக

'சுட்ட' பழம்:



'என் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்து தணிக்கை செய்யாமல் வெளியிட வேண்டும்.''

— சந்தனக் கடத்தல் வீரப்பன்.

கனிந்த சிந்தனை:

'என்னவொரு தெனாவட்டு!' என்று நெற்றி சுருங்கக் கோபப்படுவோர் தமிழ் விரோதிகள்! வடக்கை வாழவிட்டு இப்படி தெற்கை மட்டும் தேயவைக்க நினைப்பவர்கள்! பூலன் தேவியை வைத்து Bandit Queen எடுக்கப்பட்டதே! அப்போது எங்கே போனது இவர்களின் கோபம்!

'ஏற்கெனவே சினிமாவுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் புரியாமல் மக்கள் குழம்பிக் கிடக்கிறார்கள். அனுதாப அலை உதவியுடன் பூலன் தேவி எம்பியாகிவிட்டாரே... இதெல்லாம் நல்லதற்கல்லவே..'- சிலர் கண்டனக் குரல் எழுப்புகிறார்கள்.

உற்றுக் கேட்டால் இந்தக் கண்டனக் குரலுக்குப் பின்னுள்ள பொறாமைத்தொனி புலப்படும்- அரசியலுக்குள் நுழைவதற்கு முன்பே அதற்கான முழுப் பயிற்சி பெற்று வருபவர்களைக் கண்டு எழும் பொறாமை!

திரையுலகத் திலகங்கள் சிலர் வேறு டிராக்கில் யோசிக்கிறார்கள்: 'வீரப்பன் கதையை எடுத்தா கன்னியையும், மீசையையும் தானே காட்ட முடியும்.. போணியாகுமா...?'

கற்பனையைத் தட்டிவிடத் தெரியாத இந்த அற்பர்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம். வீரப்பன் டீவி. பேட்டியில் சொன்ன கதைகளையெல்லாம் ஃப்ளாஷ் பாக் ஆக்கிப் பின்னிட முடியாதா!

'ஐயோ! அப்படியெடுத்தா சென்ஸார் சாப்பிட்டது போக என்ன மிஞ்சும்?' என்று வாதாடும் நேர்மையாளர்களுக்கு வீரப்பனின் வார்த்தைகளையே நினைவூட்டுகிறோம்:

''என் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்து தணிக்கை செய்யாமலே வெளியிட வேண்டும்...''

''சென்ஸார் என்ன எடுப்பார் கைப்பிள்ளையா?'' - மீசை துடிக்கிறார்கள் தணிக்கை அதிகாரிகள்.

''அவசரப்படாதீங்க'' என்று சாவகாசமாய்த் தம் மீசையைத் தடவுகிறார் வீரப்பன்... ''பாண்டிட் குவீன் படத்தைப் பார்த்துட்டு பூலன் தேவி பெயரை நோபல் பரிசுக்குச் சிபாரிசு செய்யலியா...? Smuggler Samrat வெளியானதும் அது போல ஏதாவது நடந்தால் உங்களுக்கும்தானே பெருமை!''

- சில்மிஷா

இழக்க நேர்ந்தது... எனவே புஜ்பல் உடனடியாக நீக்கப்பட வேண்டும்'' என்று கூக்குரலிடுகிறார்கள்!

இங்கேயும் 'அம்மா' ஆட்சி

மும்பையில் அடுத்த மேயர் அனேகமாக ஒரு பெண்ணாகத்தான் இருப்பார். முனிசிபல் கார்ப்பரேஷன் இனி 'அட்வைசரி கவுன்சில்' என்றழைக்கப்பட்டு, மேயருக்கு அதிக அதிகாரங்கள் - கிட்டத்தட்ட ஒரு குட்டி முதல் மந்திரி அளவுக்கு - அளிக்கப்படும்! இனி முனிசிபல் கமிஷனரும், B.E.S.T ஜெனரல மானேஜரும் பல் பிடுங்கிய பாம்புகள்தாம்!

மேல் மட்ட நக்கல்!

நக்கலாகப் பேசுவதென்றால், அதுவும் மனோஹர் ஜோஷியின் காலை வாருவதென்றால், பாலா சாஹேப்புக்கு 'டபுள் ரொட்டி' சாப்பிடுவதுபோல!

மும்பையின் பொருளாதாரத்தை 'மேல் மட்டத்'திற்கு உயர்த்தி, அதை ஒரு 'ஹாங் காங்'காக மாற்ற வேண்டுமென்ற ஆசையில், அண்மையில், 'அட்வான்டேஜ் மஹாராஷ்ட்ரா' என ஓர் அகில உலக முதலீட்டாளர் கான்பரன்ஸைக் கூட்டியிருந்தார் மனோஹர் ஜோஷி! இதைக் குறித்துப் பேசுகையில் ''ஏர்-போர்ட்டுக்குப் போகிற வழியில் முதலில் காண்பது நம் 'கீழ் மட்டத்தை'த்தான். இது 'டிஸ்அட்வான்டேஜ்' மஹாராஷ்ட்ரா அல்லவா?'' என்றார் பாலா சாஹேப். கழிப்பறை வசதிகள் இல்லாத குடிசைப் பகுதிகளைக் கடந்து வரும் அயல்நாட்டு முதலீட்டாளர்கள் பெறக்கூடிய அதிர்ச்சி அனுபவத்தையே இப்படிக் குறிப்பிட்டார்.

இறங்கிய திரை!

ஏக்கச்சக்கமான 'ஸ்டார் பர்ஃபாமன்ஸ்'னால் இம்முறை ஃபிலிம்ஃபேர் அவார்டு இரவு ஜாஜ்வல்யமாயிருந்தது! ஏற்கனவே ஆடைப் பஞ்சத்துடன் ஆடிக் கொண்டிருந்த சொனாலி பேந்தரேவிடமிருந்து, இருந்த ஒன்றிரண்டு ஆடைகளும் விடைபெற யத்தனித்தபோது, நாம் திரை இறங்கிவிடுமென எதிர்பார்த்தோம். எப்படியோ நடால் என்று உள்ளே சென்று ஒரு 'கோட்'டைப் போட்டுக் கொண்டு சமாளித்து விட்டார் பேந்தரே! மாதுரி தீட்சித் ஆடும்போது பாதியிலேயே ஆட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது... ஊஹூம்... நாகரீக கலாசார பிரச்னை எதுவுமில்லை... நேரமாகிவிட்டது என்பதுதான் Official காரணம்! Unofficial காரணம், காவல்துறை அதிகாரிகளுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் விழாவைக் காண, போதுமான 'பாஸ்'கள் வழங்கப்படவில்லை என்பதே!

- ஜெயஸ்ரீ ராஜ்


தமது 'அவதாரம்' படத்தின் வியாபாரத் தோல்விக்குப் பிறகு சொந்த டைரக்‌ஷனில் படம் எடுக்கிற ஆசையைக் கொஞ்ச நாள் மூட்டை கட்டி வைத்திருந்த நாசர், தற்சமயம் மீண்டும் களம் காணப் புறப்பட்டிருக்கிறார். (வாழ்க, வெல்க.) படத்தின் பெயர் தேவதை.

துபாயில் படமாக்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் என்கிற பெருமை இந்தப் படத்துக்கு. ("ஒண்ணு, ரெண்டு பாட்டு மட்டும் இல்லீங்க. படத்துல பெரும் பகுதி அங்க எடுத்ததுதான்!" - நாசர்)

எனில் துபாய் வாழ் மக்கள் பற்றிய படமாவெனில், நோ!

கதைப்படி, ஹீரோயின் த.நாட்டிலிருந்து துபாய்க்குப் போய் செட்டில் ஆனவர்.





துபாய் தேவதை!

ஆகவே கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய தமிழ் சினிமா ஹீரோ அங்கு போய் துரத்திக் காதலிப்பதுதான் கதை என்கிறார் நாசர். (காதல் முக்கோணம் வேறு வருகிறதாம்.)

ஒட்டக சேஸிங் எல்லாம் இருக்கிறதோ என்று கேட்க நினைத்ததும் நாசரின் அவதார ஸ்டைல் ஞாபகம் வந்து, தடை போட்டது.

ஆனால் அவதாரம் அளவுக்கு அத்தனை ஸ்டாண்டர்ட் இதில் இருக்காது என்கிறார். அதாகப்பட்டது, ஜாலியான கமர்ஷியல் படம்தான் என்பதை போல்ட் லெட்டரில் படித்துக் கொள்க.

படத்தில் ஒரு வித்தியாசம். ஹீரோ, நாசர் இல்லை. வினித்தும் படத்தில் இருப்பதால், அவர்தான் ஹீரோவா என்று கேட்டால், "ஹீரோ என்பவர் யார்? டூயட் பாடுபவரா? ஒருவரைச் சுற்றியே கதை பின்னப்பட்டால் அவர்தான் ஹீரோவா? இந்தப் படம் ஷோ- கால்டு சினிமா ஃபார்முலாவைக் கொஞ்சம் மீறும். எனக்கு நல்ல கேரக்டர் ரோல். வினித்துக்கும் அங்ஙனமே!" என்று சஸ்பென்ஸ் போடுகிறார் நாசர்.

"அவதாரத்தின் தோல்வியால்தான் இதில் வினித்தை ஹீரோ - ஸாரி - கேரக்டர் ரோலில்..." என்று இழுத்தால் "எனக்கொண்ணும் ஹீரோவாகத்தான் நடிக்க வேண்டுமென்ற லட்சியமெல்லாம் இல்லையே?" என்று பதில் உடனே வருகிறது!

நாசர், உத்தரவாதமாகச் சில விஷயங்களைச் சொல்கிறார்.

"இது கமர்ஷியல் படம்தான். ஆனால் நிச்சயமாக இரட்டை அர்த்த வசனங்களோ, ஆபாச நடனமோ இருக்காது!"

அது சரி, யார் தேவதை?

யாரோ புதுமுகமாம். பெயர், கீர்த்தி. வந்த வேகத்திலேயே இன்னொரு படத்திலும் ('நந்தினி') இவர் புக்காகி இருக்கிறார் என்பதறிக.

— கிரிஜா ஜின்னா



ஆயிரமாயிரம் ஹிரண்ய கசிபுகளும் ராவணன்களும் இருந்தும் பகவான் ஏன் இன்று அவதாரம் பண்ணவில்லை...?

ஏனென்றால், ஒரு பிரஹலாதன் கூட இன்று இல்லை! அவன் அவதாரம் பண்ணி வந்தானானால் ஒரு பிரஹலாதனாவது கிடைப்பானா?!

இதன் தேரிய பொருள் என்னவென்றால், பகவான் அவதாரத்துக்கு சாது ரக்ஷணம்தான் முக்கிய குறிக்கோள்; துஷ்ட விநாசனம் என்பது அடுத்தபட்சம்தான். நெல் பயிரிட்டால் அங்கே புல் முளைக்குமா...? தானாகவே அழிந்து போகுமல்லவா? அது போல் சாது பரித்ராணம் தான் முக்கியம்; பகவானுக்கு. அதை நிகழ்த்தும்போது துஷ்ட நிக்ரஹம் தானாக நடைபெறுகிறது.

சாதுக்கள் ரக்ஷணத்தையும் வைகுண்டத்திலிருந்தபடியே அவனால் பண்ண முடியாதா என்ன? தாராளமாய் முடியும். ஆனால் அவர்கள் (சாதுக்கள்) அவனை அழைக்கிறார்கள். பரமாத்மாவும் இறங்கி வருகிறான்.

இதைத்தான் கிருஷ்ணாவதாரம் காட்டுகிறது. அதிலே அவன் பிறப்பு, லீலைகள் இரண்டுமே திவ்யம் என்று கொண்டாடுகிறான். 'அதை உள்ளபடி உணரக்கூடியவன் ஒருவன் இருந்தால், அவன் மறுபடி பிறக்க மாட்டான்; என்னையே வந்து அடைவான்' என்று பரமாத்மா தமது

குறையொன்

அவதார ரஹஸ்யத்தை வெளிப்படுத்துகிறார்.

அந்த அவதார ரகசிய சாரமானது ரொம்பவும் முக்கியம். அது இருந்தால் மோக்ஷத்தை வாங்கிக் கொடுக்கும். ஆகையினாலே,

- பகவான் அவதாரமானது இந்திர ஜாலமல்ல;
- பகவானுடைய அவதாரத்திலே அவன் ஞானத்துக்குக் குறைவில்லை.
- அவன் அவதாரம் புண்ணிய/பாவத்தினால் ஏற்படும்



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

மானுட அவதாரம் போலில்லை.

● சாது பரிபாலனம் பண்ணுவதற்காக ஏற்பட்டது.

● துஷ்ட நிக்ரஹத்துக்காக ஏற்பட்டது.

● தர்மம் வாட்டமுறும்போது, அதர்மம் தழைக்கும்போது, அவன் வந்து அவதரிக்கிறான்.

- இந்த ஆறு விஷயங்களையும் நாம் மறவாமல் இருக்க வேண்டும். இதை நினைத்தாலே பாவமெல்லாம் போய்விடும்.

அதனால்தான் பகவான், அர்ஜுனனிடத்திலே தன் அவதார மகிமையைத் தானே சொன்னான்.

'புத்திமான்களுள் முதலிடத்திலே வைக்கப்படக்கூடியவர்கள் பகவானுடைய பிறப்பின் ரகசியத்தை நன்கு உணர்கிறார்கள்' என்று வேதமும் சொல்கிறது.

அவர்கள் என்ன உணர்கிறார்கள்?

பிறப்பற்றவன் பலபடியாகப் பிறக்கிறான் என்று உணர்கிறார்கள்.

இப்படிச் சொன்னால் முரண்பாடாக இல்லையா? 'பிறப்பற்றவன்' என்றால் நம்மைப் போல் பிறப்பற்றவன் என்று அர்த்தம் - ஆனால்

பில்லை



அருள்வாக்கு



தேவலோகத்தில் வயல் கிடையாது. தேவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழி இல்லை! துர்பிக்ஷம் தேவலோகேஷு மநுநாம உதகம் க்ருஹே என்று வேதத்திலேயே (தைத்திரீய ஆரண்யக முதல் ப்ரசனத்தில்) சொல்லியிருக்கிறது. மேல் லோகத்தில் இருக்கிற மேகங்கள் மழையாக பூமியில் பெய்து, பூலோகத்தில்தான் ஜலம் ஆறு, ஏரி, கிணறு என்று எடுத்துப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி இருக்கிறது. உதகத்துக்காக (ஜலத்துக்காக) மநுஷ்யனின் கிருஹத்துக்குத்தான் வர வேண்டும். ஜலத்தைக் கொண்டு பயிர் பண்ணி ஸுபிக்ஷம் அடைவது பூலோகத்தில்தான். வயல் இல்லாத தேவலோகத்தில் துர்பிக்ஷம்தான். இப்படி அந்த வேதவாக்கியம் சொல்கிறது. ஆனால், மேலேயிருக்கிற மேகம் நமக்கு ஜலமாக வர வேண்டுமானால், அது தேவர்களின் அநுக்ரஹத்தாலேயே நடக்கும். நாம் யக்ஞம் செய்தால்தான் அவர்கள் அந்த அநுக்ரஹத்தைப் பண்ணுவார்கள். இல்லாவிட்டால் மழை பெய்யாது. பஞ்சம்தான் வரும். பூமியில் பெய்யாமல் ஸமுத்திரத்திலேயே எல்லா மழையும் பெய்துவிடும். அல்லது, பயிரெல்லாம் அழுகி அடித்துக் கொண்டு போகும்படி பேய் மழையாகப் பெய்யும். ஒன்று அதிவ்ருஷ்டி – அளவுக்கு மீறிப் பெய்து வெள்ளத்தில் பயிர் நாசமாவது; இன்னொன்று அநாவ்ருஷ்டி – மழையே பெய்யாமல் பஞ்சம் ஏற்படுவது; இந்த இரண்டும் ஏற்படாமல், ஸுபிக்ஷத்துக்கு உரிய மழையை அளவாக அனுப்பி வைக்கிற சக்தி தேவலோகவாஸிகளுக்கே இருக்கிறது. இங்கிலீஷ் தேசத்தில், வயல் இல்லாவிட்டாலும் நிலக்கரி

அவனே தன்னுடைய சங்கல்பத்தினால் பல படியாக வந்து பிறக்கிறான்.

அவன் பிறந்தால் அது அவனுக்குப் பெருமை; நாம் பிறந்தால் நமக்குச் சிறுமை, இழுக்கு!

பிறவியே அற்றவன் பிறக்கிறான் என்றால் பெருமைதானே.

'எங்கள் பிறப்பை அறுக்க, எங்கள் அஞ்ஞானத்தைப் போக்க, பிறவியே இல்லாத நீ அவதரித்தாயே!' என்று பேசினார் நம்மாழ்வார்.

பகவானுடைய இந்த அவதார சரித்திரம், லீலைகள் எல்லாமே பாவத்தைப் போக்கடிக்கக்கூடியவை.

கிருஷ்ணாவதாரத்தில் பல இடங்களில் நவநீத சௌர்யம் (வெண்ணெய் திருடுதல்) என்கிற பெரிய விருத்தாந்தம் சொல்லப் பட்டிருக்கிறது.

வெண்ணெய்யிலே பகவானுக்கு விருப்பம் அதிகம் – வெண்தயிர் தோய்ந்த செவ்வாயன் அவன்!

வெண்ணெய்யை அவன் விழுங்கிவிட்டு வெறுங்கலத்தை நடுக்கூடத்திலே வைத்துத் தட்டுவானாம். அதன் ஓசை ஓம்! ஓம்! என்று பிரணவம் போல் ஒலிக்கிறதாம் – பெரியாழ்வார் பாடுகிறார்!

நம் கிரஹத்திலே குழந்தை அப்படி அடித்தால் வெறும் ஒலிதான் கேட்கும்; ஆனால் தெய்வக் குழந்தை பிரணவத்தைக் கேட்டு ஆனந்தப்படுகிறது.

இப்படிப்பட்ட குழந்தையைப் பார்க்க பூதனை வருகிறாள். அவித்யையின் உருவமாக, மாயையின் ஸ்வரூபமாக வருகிறாள். குழந்தைக்கு ஸ்தன்யபானம் பண்ணி வைக்க வருகிறாள். அது தொட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறது.

எப்படிப்பட்ட தொட்டில்...? மாணிக்கம் கட்டி, வைரம் இடைகட்டி, ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில் – அதனருகே பூதனை வந்து யசோதை வடிவத்தில் நிற்கிறாள். அதைப் பார்த்து விட்டது குழந்தை... துளிக்கூட அவளைப் பார்த்து பயப்படவில்லை. கண்ணை மூடித் தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்கிறது.

நிஜ யசோதை வெளியே புறப்பட்டுப் போய் விட்டாள். குழந்தை தூங்குகிறதே என்று. இது (குழந்தை) வேகமாக அழ ஆரம்பிக்கிறது. அழுகை ஓசையிலே சாம வேதம் கேட்கிறது! தெய்வக் குழந்தையல்லவா... நடந்தால் வேதம்; நின்றால் வேதம்; சிரித்தால் வேதம்; அது அழுதாலும் வேதம்தான்.

எல்லா மஹரிஷிகளும் அக்னிஹோத்திரத்துடன் நந்தகோபன் வீட்டு மாட்டுக் கொட்டகையில் வந்து நிற்கிறார்களாம், அந்த அழுகை ஒலி கேட்டு! அப்படி அதிசயமாக சாம வேதத்தில் அழுகிறது அந்தக் குழந்தை! கையைக் காலை உதைத்துக் கொண்டு அழுகிறது.

பூதனை ஏமாந்து போகிறாள். அது தன்னை நிஜமான தாயென்று எண்ணிக் கொண்டதாக நம்பி வருகிறாள். பாலோடு சேர்த்து அவள் பிராணனையும் இழுத்துக் கொண்டு விடுகிறது குழந்தை.

– இங்கே உட்கார்ந்து இந்தக் கதையைச் சொல்வதாலும் கேட்பதாலும் என்ன லாபம்...?

இதை யார் சொல்கிறார்களோ, யார் யார் கேட்கிறார்களோ, அவர்களெல்லாம் மறுபடியும் தாயிடம் பால் பருக மாட்டார்கள். – அதாவது இனி அவர்களுக்குப் பிறப்பு இல்லை!

அப்படி பரமாத்மா பூதனையை சம்ஹாரம் பண்ணினான். நம் பிறப்பை அறுக்கக்

இருப்பதுபோல, தேவர்களிடம் தாங்களே பயிர் பண்ணிக் கொள்ள முடியாவிட்டாலும், அநுக்ரஹ சக்தி என்ற சரக்கு இருக்கிறது. அந்த அநுக்ரஹ சக்தியை வைத்துக் கொண்டு, அவர்கள் சாப்பிட்டுக் கொள்ள முடியாது. ஆனால், நம் சாப்பாட்டுக்கு வேண்டிய மழையை அனுப்ப முடியும். அவர்களுக்கு இப்படிப்பட்ட அநுக்ரஹ சக்தியை நாமே வேத மந்திரங்களால் விருத்தி பண்ணுகிறோம். அந்த மந்திரங்களோடு செய்கிற ஹோமம், அவர்களுக்கு ஆஹாரமாகிறது.

நம்மூரில் பருத்தி விளைகிறது. இங்கே நூற்பு ஆலைகள் விருத்தியாகாதபோது நம்மூர்ப் பருத்தியை வெள்ளைக்காரன் லங்காஷயருக்கு எடுத்துக் கொண்டு போய், 'நைஸ்' துணியாக ஆக்கி, நம் தலையிலேயே நாலு மடங்கு விலை வைத்துக் கட்டினான். தேவர்கள் நம் லோகத்து ஸமுத்திரத்திலிருந்து ஆவியாகி மேலே போகிற மேகத்தையேதான் நமக்கு மழையாகத் திருப்பி அனுப்புகிறார்கள். ஆனால், வெள்ளைக்காரன் செய்த மாதிரிக் கொள்ளை லாபம் அடிக்காமல், நாம் செய்வதற்கு அதிகமாகவே திருப்பி அநுக்ரஹம் பண்ணுவார்கள். ஆனாலும், நாம் அவர்களுக்குக் கொடுத்தால்தான், திரும்ப நாலு மடங்காக நமக்கு நல்லது செய்வார்கள். நம்மை விட அவர்களுக்குச் சக்தி அதிகம். ஆனாலும் பகவான் யக்ஞ கர்மாநுஷ்டானத்தை நமக்கே கொடுத்து, நாம் செய்கிற கர்மாநுஷ்டானத்தாலேயே அவர்கள் திருப்திப்படும்படியாக வைத்து, நம்மையும் அவர்களுடைய ஸ்தானத்துக்கே உயர்த்திவிட்டது போல வைத்திருக்கிறார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கூடியவன் அவன் என்பதை எந்தவொரு லீலையும் காட்டி நிற்கிறது.

இதன் பிற்பாடு பரமாத்மா பல இடங்களில் வெண்ணெய்யைத் திருடுகிறான்.

உலகத்திலே ஒரு திருட்டு - ஒருத்தர் ஒரு கிரஹத்திலிருந்து வெள்ளி சொம்பைத் திருடுகிறார். அதை இன்னொருத்தர் அவரிடமிருந்து திருடி விடுகிறார்! ஆனால் திருட்டுத்தனம் என்பதே திருடுமா...? பகவானின் அவதார விசேஷத்தில் அது நடக்கிறது.... அவன் வெண்ணெய் திருடுகிறான் - அந்தத் திருட்டுத் தன்மை நம் பாவம் மொத்தத்தையும் திருடிக் கொள்கிறது!

அவன் காராகிரஹத்திலே (சிறை) பிறந்தான் என்றால், நமது சிறைவாசம் விடுபடுகிறது. அவன் அர்த்த ராத்திரியில் பிறந்தான் என்றால் நம் அஞ்ஞான இருள் நீங்கி விடுகிறது! இப்படி கிருஷ்ண சரித்திரத்தை நினைக்க நினைக்க நமக்கு எதிர்த்தட்டான பலன்கள் கிடைக்கின்றன. நமது சர்வ பாவங்களையும் போக்கடித்து விடுகிறான் எம்பெருமான்.

ஒரு பெரிய பானை. அதிலே பெரிய மத்தைப் போட்டுக் கடைகிறாள் யசோதை. 'டர்! டர்!' என்று ஒலி - புலி உறுமுகிற மாதிரி சப்தம் வருகிறது! வைகுண்ட லோகத்தில் போய் எதிரொலிக்கிறதாம் அது!

எங்கோ போய்க் கொண்டிருந்த குழந்தை கிருஷ்ணன், அவள் கடைகிறதைப் பார்க்கிறான். மத்து, பானைக்குள்ளே போவதும் வருவதுமாக 'குங் குங் குங்' என்று ஓசை! வேதத்தில் கனம் சொல்கிறபோது எழுகிற மாதிரியான ஓசை கேட்கிறது.

ஓடி வந்து அம்மாவின் முதுகிலே கை வைத்தது குழந்தை.

"பானை நடுவிலே 'குங் குங்'ன்னு ஓசை வருகிறதே, அது என்ன அம்மா?" என்று கேட்டது.

நடுங்கிப் போய் விட்டாள் யசோதை; ஏனென்றால் மொத்தத்தையும் துவம்சம் பண்ணிவிடும் குழந்தை! வெண்ணெய்யை வைத்திருந்து மெதுவாகக் கொடுக்க வேண்டும் என்பது அவளுக்கு ஆசை. குழந்தையை வெளியே துரத்த வேண்டும் என்பதற்காக "அதுக்குள்ளே பூதம் இருக்கு... உன்னைப் பிடிச்சுக்கும். வெளியிலே ஓடிப் போய்விடு!" என்று மிரட்டினாள்.

குழந்தையோ, வெளியிலே ஓடாமல், பானை பக்கத்திலே போய் அதைப் பிடித்துக் கொண்டு நிற்கிறது. உலகத்தையே விழுங்கக் கூடிய 'பூதம்' இந்த பூதத்துக்குப் போய் பயப்படுமா?

"அம்மா! என்கிட்டே பொய் சொல்லலாமா? இதுக்குள்ளே நிஜமாகவே பூதம் இருக்கா...?"

"சத்யமாகச் சொல்றேன்டா! பூதமிருக்கு.... அது உன்னைப் பிடிச்சுக்கும்..."

"ஏன்மா! பூதம் உன்னைப் பிடிச்சுக்காதா?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவேயில்லை யசோதைக்கு.... சமாளித்துக் கொண்டு பேசுகிறாள் : "நீ சின்னக் குழந்தையல்லவா? உன்னைப் பிடித்துக் கொள்ளும்; நான் பெரியவள் என்பதால் என்னைப் பிடிச்சாலும் தாங்கிக் கொள்வேன்..."

பிற்காலத்தில் உலகுக்கே கீதையைச் சொல்லவிருந்த குழந்தை, இந்த நேரத்திலே அம்மாவுக்கு ஒரு குட்டி கீதை சொல்கிறது :

"அம்மா! நீ சொல்வது நன்றாயிருக்கா! என்னை வெளியே போகச் சொல்றியே. நான் போன பிற்பாடு அந்த பூதம் உன்னைப் பிடித்துக் கொண்டால்... உலகத்திலே உள்ளவர்

களெல்லாம், என்னை என்ன சொல்லுவார்கள்? 'அம்மாவை பூதத்திடம் காட்டிக் கொடுத்த அல்பமான பிள்ளை!' என்று அல்லவா என்னைச் சொல்லுவார்கள்! அம்மாவை ரக்ஷிக்க முடியாதவன் இருந்து என்ன பயன்?''

உடனே அவன் கண்களிலே தாரை தாரையாக நீர்! என்ன பேசுவதென்று தெரியவில்லை யசோதைக்கு. தழுதழுத்து... ''குழந்தாய்! என்னை என்னவடா செய்யச் சொல்கிறாய்...?'' என்று கேட்கிறாள்.

''முதலிலேயே என் யோசனையைக் கேட்டிருக்கலாமில்லையா... சொல்லியிருப்பேனே! யோசனை சொல்வதற்காகப் பிறந்தவன்தானே நான்...''

''இப்போதுதான் சொல்லேன் உன் யோசனையை!''

''அம்மா! உன் இரண்டு கைகளையும் பூரணமாக பானைக்குள் விடு. அதற்குள் பூதம் இருக்கு என்றாயே, அதை எடுத்து என் கையிலே கொடு... அதை நான் விழுங்கி விடுகிறேன்...'' - தாயாரிடம் சொல்லி, சிரித்தபடி பானையை எட்டி உதைத்து விட்டது குழந்தை! வெண்ணெய்யை எடுத்து விழுங்கி விட்டு மோரை அலட்சியப்படுத்திவிட்டு குடுகுடு வென்று ஓடுகிறது!

எல்லோரும் குழந்தையைத் துரத்திக் கொண்டு ஓடுகிறார்கள். ஒரு கோபிகாஸ்த்ரீ கிரஹத்திலே நுழைந்தது அது. இந்தக் கருங் குழந்தை நுழைந்ததும் அந்த இடம் மேலும் இருட்டாகி விட்டது.

கறுப்புப் பானையிலே கறுப்பு தடுக்கு போட்டு வெண்ணெய்யை மூடி வைத்திருக்கிறார்கள். பானையைத் திறந்து வெண்ணெய்யை எடுத்து வாயிலே போட்டுக் கொள்கிறது. அந்த நேரத்திலே அந்த கோபிகாஸ்த்ரீ வந்து விட்டாள். நடுங்கிப் போய் விட்டது குழந்தை. இரண்டு பானைகளுக்கு நடுவிலே போய் உட்கார்ந்து கொண்டது!

உட்கார்ந்தால்... தலையில் இருக்கிற ஆபரணம் 'கிணி கிணி' என்று ஆடி, ஒலி எழுப்புகிறது. கழுத்து ஆபரணம் 'கண கண' வென்கிறது! இடையிலே உள்ள ஆபரணம் கலகலவென்கிறது... திருவடி ஆபரணமோ 'ஜில்ஜில்' என்று ஒலிக்கிறது. ஒடுக்கி உட்கார உட்கார, ஒலி அதிகமாகிறது!

குழந்தை அந்த ஆபரணங்களைப் பார்த்துக் கேட்கிறது : ''நான் உங்களைத் தாங்குகிறேனே.. இப்படி நீங்கள் ஒலிக்கலாமா? அவள் கண்டு பிடித்தால் என் அப்பாவிடம் போய்ச் சொல்வாளே... அப்புறம் அவர் என் முதுகில் ஒலிக்கச் செய்து விடுவாரே!'' - எல்லா ஆபரணங்களையும் பார்த்துக் கைகூப்பிக் கேட்கிறதாம் குழந்தை!

அசித் விஷயங்களை, ஆபரணங்களையெல்லாம் வந்தனம் பண்ணுகிறானே பகவான்... நாம் அவனை வந்தனம் செய்ய வேண்டாமா! ரிக் வேதம் சிரஸிலே ஒலிக்கிறது; விசேஷ சக்தியுடன் இருக்கும்படியான யஜுர் வேதம் கண்டத்தில்; அதர்வண வேதம் இடையிலே ஒலிக்கிறது... சாமம் திருவடியில் ஒலிக்கிறது.

ஒலிக்காமல் இருங்கள் என்று பகவான் கைகூப்புகிற அழகே அழகு!

இன்னொரு கிரஹத்திலே போய் உரியைத் தொடுகிறது குழந்தை. தொட்ட கணத்திலே கணகணவென்று மணி அடிக்க ஆரம்பித்து விடுகிறது!

''ஏ மணியே! நீ இப்படி அடித்து என்னைக் காட்டிக் கொடுக்கிறாயே...?'' என்கிறது குழந்தை.

''அடியேன், அடியேன்!'' என்று நயமாய் பதில் சொல்கிறது மணி.

குழந்தை, பானையை எடுத்து வைத்துக் கொண்டு வாயிலே வெண்ணெய்யைப் போட்டுக் கொள்ளும் கணத்தில் மணி திரும்பவும் அடிக்க ஆரம்பித்தது.

''அடிக்க மாட்டேன் என்று சொன்னதால் தானே வாயில் போட்டுக் கொண்டேன்... இப்படி நீ அடிக்கறியே, இது ந்யாயமா!'' - குழந்தை கேட்டது. மணியோ, மணியான வார்த்தையால் பதில் சொன்னது!

(தொடரும்)



ஆங்கில நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய அறிக்கையைத் தோல் பெட்டியொன்றில் வைத்தே அந்நாட்டு நிதி அமைச்சர்கள் எடுத்துச் செல்வது வழக்கம். அந்தத் தோல் பெட்டிக்குத்தான் பட்ஜெட் என்று பெயர். அப்பெயரே நாளடைவில் அதனுள் இருக்கும் அறிக்கைக்கும் பெயராக அமைந்து விட்டது.

—ஆர். முரளி

தில்லி நியூஸ் :


• சரத்பவார்


• கேசரி


• இப்ராகிம்

கவிழமாட்டார் கௌடா!

ஒவ்வொரு முறை தமிழ்நாட்டு முதலமைச்சர் மாறும்போதும், தில்லி தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் அடிக்கல் மாற்றப்படும் என்பது நியதி ஆகிவிட்டது. 72-ல் முதலமைச்சராக கலைஞர் இருந்தபோது நிதியுதவி செய்த உடன் அவர் பெயர் பொறித்த அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு எம்.ஜி.ஆர்; பிறகு ஜெயலலிதா என்று மாறி ஒரு சக்கரம் சுழன்று, மறுபடி கலைஞர் பெயர் பொறித்த அடிக்கல் சமீபத்தில் மறுபடி வைக்கப்பட்டிருக்கிறது. தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு நிதி அளிக்கும் தமிழக முதலமைச்சரைக் கவுரவிப்பது அவசியம்தான். ஆனால் அதில் அரசியல் அதிகமாக விளையாடுவதுதான் வேடிக்கை. (அதைவிட வேடிக்கை- பழைய அடிக்கல்கள் எங்கே இருக்கின்றன என்று யாருக்குமே தெரியாதாம்!) முதல்வர் கலைஞர் தில்லி தமிழ்ச் சங்கத்தில் பேசிய அன்றைக்கு, மத்திய அமைச்சர் எஸ்.ஆர்.பி. மட்டுமே வந்திருந்தார். மற்ற த.மா.கா. உறுப்பினர் யாரையும் காணவில்லை!

● நாடாளுமன்றத்தில் பிரதமரின் அறைக்கு அடுத்த அறை காலியாகி இருக்கிறது. பிரதமரின் செயலர்களில் ஒருவரான பி.என். நாகேஷுக்கு அதை விட்டு விடுவதில் விருப்பமில்லை. அந்த அறை வழியாகவே பிரதமரின் அறைக்குள்ளும் நுழையும் வசதி வேறு இருக்கிறது. ஆனால் டி.ஆர். பாலு, பீரேந்திர பிரசாத் பைஷ்யா, ரமாகாந்த் கலாப் ஆகிய அமைச்சர்களுக்கு இடையேயும் அந்த அறையைப் பிடித்து விடுவதில் போட்டி. கடைசியில் சட்ட அமைச்சர் ரமாகாந்த் கலாப்புக்கு ஒதுக்கி விட்டார் பிரதமர். உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவுக்கு, நாடாளுமன்றத்தில் இருக்கிற அறையை அவர் எப்போதாவது ஒருநாள்தான் உபயோகிக்கிறாராம்!

● சிமெண்ட் கார்ப்பரேஷன் தலைவர் ஆனந்த் தர்பாரியை நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி தலைவராக உத்தரவு போட்டு விட்டார்கள். ஆனால் விமானப் போக்குவரத்து அமைச்சர் இப்ராகிமுக்கு இதில் விருப்பமில்லை. 'அவர் குலாம்நபி ஆசாதின் ஆள். அவருக்கு இந்தப் பதவியைக் கொடுக்க மாட்டேன்' என்று பிடிவாதமாயிருக்கிறார் சி.எம். இப்ராகிம்.

● அரசாங்கம் எப்படி நடக்கிறது என்று மக்களுக்குத் தெரியவேண்டும் என்று கோரி நிறைய வேண்டுகோள்கள் வருகின்றன. ஹெச்.டி. ஷௌரி தலைமையில் இதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். ஆனால் பொது விநியோகத் துறைச் செயலர் ஏ.ஆர். வெங்கடேசுவரன் ஓர் ஐடியா கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அலுவலக வாசலிலும் கம்ப்யூட்டரோடு ஒரு நபரை அமர்த்தி விட வேண்டும். தகவல் வேண்டுவோர் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி விட்டால், அவர்கள் கேட்கிற விவரம் கம்ப்யூட்டரிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்டு, அவர்கள் கையிலேயே கொடுத்து விடலாம் என்பதுதான் அந்த யோசனை!

● தில்லியிலிருந்து ரிஷிகேசுக்கு இரவில் பஸ் பயணம் செய்வது என்பது பயங்கர அனுபவமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்கிறார்கள். வழிப்பறிக் கொள்ளை சர்வ சாதாரணமாக இருக்கிறதாம்!

● கவிழ்த்து விடுவோம், கவிழ்த்து விடுவோம் என்று காங்கிரஸ் அவ்வப்போது பயமுறுத்துவதில் இனி அர்த்தம் இருக்காது. பவார் பிரதமருடன் வெகு நெருக்கமாக இருக்கிறார். அவருடன் பயணம் செய்கிறபோது எல்லாம் அரசியல் பிரச்னைகள் வெகு அந்தரங்கமாக அலசப்படுகின்றன. சமீபத்தில் ஒரிசாவுக்கும், குஜராத்துக்கும், கல்கத்தாவுக்கும் பிரதமர் போனபோது எல்லாம், கூடவே சரத் பவாரும் போயிருக்கிறார். கேசரிக்கு இது எரிச்சலை ஊட்டி, கொதிப்படையச் செய்திருக்கிறது என்கிறார்கள். ஆனால் பவார் இதுபற்றிக் கவலைப்படவில்லை!

- நியூஸ்வாலா



இதுவா ஸ்டுடியோ?

புகழ்பெற்ற கதை, வசனகர்த்தாவாகவும் இயக்குநராகவும் பின்னாளில் கொடி கட்டிப் பறந்த ப. நீலகண்டன், அன்று என்.எஸ்.கே. நாடக சபாவுக்குக் கையில் நாடக ஸ்கிரிப்டுடன் வந்தபோது, நாங்கள் அங்கே மீண்டும் இணைந்து சில நாட்கள்தாம் ஆகியிருந்தன.

குறுகிய காலத்திலேயே குழுவோடு ஐக்கியமாகி, பல வெற்றிகரமான நாடகங்களை அரங்கேற்றி, மக்களிடையே நல்ல மதிப்பும் வரவேற்பும் பெற்றிருந்த சமயம் அது.

அந்நாளில் புகழ்பெற்ற நாடக ஆசிரியராக இருந்த பழனியாப்பிள்ளை என்பவரின் பேரன் தான் ப. நீலகண்டன். அந்த அறிமுகத்துடனேயே என்னைச் சந்தித்தவர், தாம் எழுதியிருந்த அந்த 'தியாக உள்ளம்' நாடகத்தை என். எஸ். கே. சபா மூலம் அரங்கேற்ற முடியுமா? என்று என்னிடம் கேட்டார்.

முதலில் எனக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. "நிறைய நாடகங்கள் கை வசம் இருக்கிறதே. நீங்கள் பிறகு வாருங்கள்" என்று சொல்லி அனுப்பப் பார்த்தேன்.

அவர் விடவில்லை.

''எப்படியாவது நான் சகஸ்ரநாமத்தை சந்திக்க வேண்டும்; நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்" என்று விடாப்பிடியாகக் கேட்டார்.

பல முறை மறுத்துப் பார்த்து, முடியாமல், இறுதியில் வேறு வழியில்லாமல் நான் அவரை எஸ்.வி.எஸ்ஸிடம் கூட்டிப் போனேன்.

நீலகண்டனை ஏற இறங்கப் பார்த்த சகஸ்ரநாமம், "உங்கள் ஸ்கிரிப்டைக் கொடுத்து விட்டுப் போங்கள். படித்துப் பார்த்து, நன்றாக இருந்தால் சொல்லி அனுப்புகிறேன்" என்று ஸ்கிரிப்டை வாங்கி வைத்துக் கொண்டார்.

இடையில் தொடர்ந்து பல நாடகங்கள் போடவேண்டி இருந்ததால் நீலகண்டன் கொடுத்துவிட்டுப் போன ஸ்கிரிப்ட் அப்படியே தூங்கிக் கொண்டிருந்தது.

தற்செயலாக நாடகம் இல்லாத ஒரு தினத்தில் அந்த ஸ்கிரிப்ட் கண்ணில் பட, எடுத்துப் படிக்க ஆரம்பித்தார் சகஸ்ரநாமம். கொஞ்ச நேரம்தான்... உடனே எங்கள் அத்தனை பேரையும் கூப்பிட்டு வைத்துக் கொண்டு மொத்தமாகப் படிக்கச் சொன்னார்.

படிக்கப் படிக்க, பிரமிப்பானது! 'பிரிவினை என்பது வீட்டிலிருந்தாலும் சரி; நாட்டில் இருந்தாலும் சரி; உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியது' என்பதுதான் அந்த நாடகத்தின் மையக் கருத்து. ஓரிடம் கூட அலுப்புத் தட்டாமல் அத்தனை சுவாரஸ்யமாக ஓடியது அந்தக் கதை.

உடனே அந்த நாடகத்தைப் போட்டு விடுவது என்று முடிவு செய்து நீலகண்டனுக்குத் தகவல் அனுப்பினோம்.

மளமளவென்று வேலைகள் தொடங்கினோம். கதாநாயகன் குமாரனாக சகஸ்ரநாமமே நடிப்பதாக முடிவானது. பேங்கர் சண்முகம்பிள்ளை என்கிற வயதான ரோல் எனக்கு. இப்படி ஒவ்வொருவருக்கும் பாத்திரங்களை நிர்ணயித்து, ரிகர்ஸல் தொடங்கி, வெகு விரைவில் நாடக அரங்கேற்றத்துக்குத் தேதி குறித்தாகி விட்டது.



நாடகம் அரங்கேறிய போது அதுவரை காணாத அத்தனை பெயரும் புகழும் தேடி ஓடி வந்தன. ஊரெங்கும் அதே பேச்சு. கூட்டம்



அலை மோதி, வசூலில் சரித்திரம் படைத்தது அந்த 'தியாக உள்ளம்' நாடகம்.

மக்களால் சிலாகிக்கப்படும் நாடகங்களையே அந்நாளில் திரைப்படமாக எடுத்து வந்தார்கள். அந்த வகையில் பல திரைப்படத் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் எங்கள் நாடகத்தைப் பார்க்க வரத் தொடங்கினர்.

பார்த்த அத்தனை பேரும் 'இதை நான் சினிமாவாக எடுக்கிறேன்' என்று சொன்னார்கள்.

ஆனால் சொன்னதோடு மட்டுமின்றி செயலளவிலும் முந்திக் கொண்டவர், மெய்யப்பச் செட்டியார்.

நாடகத்தைப் பார்க்க வந்த ஏவிஎம் அவர்கள், அதைப் படமாக எடுக்க முடிவு செய்தவுடன் என்.எஸ்.கே. சபா நிர்வாகிகளுடன் பேசினார்.

"இந்த நாடகத்தை நான் படமாக்க விரும்புகிறேன். அந்த வகையில் மூன்று விஷயங்களை உங்களிடமிருந்து 'வாங்க' விரும்புகிறேன். 1. கதை. 2. எஸ்.வி. சகஸ்ரநாமம். 3. பேங்கர் சண்முகம் பிள்ளையாக நடித்த ராமசாமி. சரியா?" என்று கேட்டார் ஏவிஎம் அவர்கள்.

எனக்கு பகீரென்றது. கதையை வாங்குவார்கள்; சரி. நடிகர்களையுமா? அதுவும் என்னை? எனில் நானும் ஒரு சினிமா நடிகனா?

என்னால் நம்பமுடியவில்லை. காரணம்,- ஒரு நாடகக்காரனாக மட்டுமே என்னை நான் நினைத்துக் கொண்டிருந்தேன். சினிமா நடிகனாக வேண்டுமென்றோ, சினிமாவுக்குள் நுழைவது பற்றியோ நான் அப்போது யோசித்தது கூட இல்லை. அந்த ஆசையும் அப்போது அறவே இல்லை.

ஆனால் ஏவிஎம் அவர்கள் கேட்ட பின்தான் எனக்கு 'நாமும் ஏன் ஒரு சினிமா நடிகனாகக் கூடாது?' என்கிற எண்ணமே வந்தது. அப்போது கூட, நாடகத்தில் நடித்துக் கொண்டே ஆசைக்கு, சினிமாவிலும் தலை காட்டலாம் என்றுதான் நினைத்தேன்.

இதற்கிடையில் அன்று ஏவிஎம் படங்களில் ஹீரோவாக நடித்து வந்த டி.ஆர். மகாலிங்கம், கே. சாரங்கபாணி, டி.ஆர். ராமச்சந்





திரன், எடிட்டர் எம்.வி. ராமன் போன்றோரும் வந்து எங்கள் நாடகத்தை ஒரு முறை பார்த்துப் போனார்கள்.

'சரி; இது சினிமாவாகி விடும்' என்று முடிவுக்கு வந்தோம். அதை உறுதி செய்யும் விதமான நாளும் வந்தது.

என்னையும் நீலகண்டனையும் அழைத்துக் கொண்டு எம்.வி. ராமன் புறப்பட்டார்.

பிரிவுச் சோகம் தாங்க முடியவில்லை. குழுவிலிருந்த அத்தனை நண்பர்களும் கண்ணீர் விட்டனர். ரயில் நிலையம் வரை வந்து, கட்டித் தழுவி வழியனுப்பினர்.

சினிமா. அது எப்படி உருவாகிறது? எங்கே எடுக்கிறார்கள்? எப்படி நடிக்கிறார்கள்? எத்தனை பேர் அந்த கம்பெனியில் வேலை செய்வார்கள்? - எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால் நாடக கம்பெனி போலல்லாமல், சினிமா எடுக்கிற இடம் மிகப் பெரிய அரண்மனை போல் பிரும்மாண்டமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

நினைப்பு எல்லாம் தேவகோட்டை ரஸ்தாவில் இறங்கி ஏவிஎம் ஸ்டுடியோ அப்போது இயங்கி வந்த இடத்துக்குப் (15 மைல்கள், அங்கிருந்து) போய்ச் சேருகிற வரைதான்.

'ஸ்டுடியோ' என்று சொல்லப்பட்ட அந்த இடத்தைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட உணர்வை வியப்பா, அதிர்ச்சியா, ஏமாற்றமா, சந்தோஷமா, எல்லாம் கலந்த ஒன்றா என்று இனம் பிரித்துச் சொல்ல முடியவில்லை.

எங்கள் ராமாயண நாடகத்தில், ஆரண்ய காண்டத்தில் நிறைய முனிவர்கள் தங்கியிருந்த பர்ணசாலைகளின் செட் ஒன்று உண்டு. ராமர் கூட, பஞ்சவடியில் அப்படியொரு பர்ண சாலையில்தான் தங்கியிருந்தாராம்!

ஏவிஎம் ஸ்டுடியோவைப் பார்த்ததும் எனக்குப் பஞ்சவடி ஞாபகம் வந்து விட்டது. வரிசை வரிசையாக ஓலைக் குடிசைகள். தென்னை மரங்களும் நிழலும் அமைதியுமான அந்தப் பிரதேசத்தைப் பார்த்து, 'இங்கிருந்தா பிரும்மாண்டமான படங்கள் வெளிவருகின்றன?' என்று வியந்தேன்.

ஆளாளுக்கு ஒரு குடிசை ஒதுக்கித் தந்திருந்தார்கள். நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள், அலுவலக ஊழியர்கள், விளம்பரப் பிரிவினர் எல்லோருக்கும் குடிசைதான். சாப்பாடு, உறக்கம், ஓய்வு - சகலமும் அங்கேயே! இந்த ஏற்பாடு முதலில் தமாஷாக இருந்தாலும் மனதுக்கு மிக ரம்யமாகவும் இருந்தது.

படப்பிடிப்புக்கான முன் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. 'தியாக உள்ளம்' என்கிற தலைப்பு, 'நாம் இருவரா'க மாறியது. இரண்டாவது மாற்றம் நாடகமாக இருந்தபோது அதில் ஹீரோ எஸ்.வி.எஸ். சினிமாவில் டி.ஆர். மகாலிங்கம். மகாலிங்கம்தான் ஹீரோ என்பது செட்டியார் ஏற்கெனவே முடிவு செய்த விஷ



'நாம் இருவரி'ல் குமாரி கமலா

யம். எனில் எஸ்.வி.எஸ்ஸுக்கு என்ன வேலை? வில்லனாகத்தான் நடிக்க வேண்டும்.

அது அவருக்குச் சரிப்பட்டு வராததால் டி.கே. ராமச்சந்திரன் வில்லன் ஆனார்.

ஏவிஎம்மின் அந்த 'பஞ்சவடி'க்கு எதிரே அந்நாளில் நிரந்தர நாடகக் கொட்டகை ஒன்று இருந்தது. தேவக்கோட்டை ஜமீந்தாரால் கட்டப்பட்ட அந்த நாடகக் கொட்டகை, நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகங்களுக்காகவே உருவான ஒன்று.

செல்வந்தர்களான நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்காக ஒரு காலத்தில் நாடகம் போட்டு அவர்களை மகிழ்விக்க அங்கே தம் குழுவினருடன் வந்திருக்கிறார் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை.

அவர் நாடகம் போட்ட அந்த தியேட்டரே பின்னால் ஏவிஎம் நிறுவனத்துக்கு படப்பிடிப்பு



தளமாகிவிட்டது. அவர்களின் வேதாள உலகம், ஸ்ரீவள்ளி போன்ற படங்களெல்லாம் அங்கே உருவானவைதான்.

அதே இடத்தில்தான் 'நாம் இருவர்' ஷூட்டிங்கும் ஆரம்பமானது.

பிரமிப்பு, பயம், ஆர்வம். சினிமா பற்றிய பிரும்மாண்டக் கனவுகள். என்னால் சரியாகச் செய்ய முடியுமா என்கிற சந்தேகம்.

சரி; மற்றவர்களெல்லாம் எப்படி நடிக்கிறார்கள் என்று பார்ப்போம்; நாமும் அப்படியே செய்து விடலாம் என்று சமாதானம் கொண்டேன். படப்பிடிப்பின் முதல்நாள். தளத்தில் குழுமியிருந்தோம். எது முதல் காட்சி?

பாங்கர் சண்முகம்பிள்ளை சம்பந்தப்பட்ட காட்சிகள்தான் முதலில் எடுக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு உதறலெடுத்தது. நானல்லவா பேங்கர் சண்முகம்பிள்ளை?

(தொடரும்)



"தண்ணி போட்டுட்டா அந்தாளு என்ன பேசறார்னே புரியாது"

"ஓ! அதனாலதான் கடவுளை தெய்வ்மா நினைக்கிறேன்னு சொல்லிட்டுப் போறானா!"

— சீர்காழி வி. ரேவதி



"ஆட்சியில் இல்லாவிடினும் தினமும் பேப்பர்... ரேடியோ... டி.வி என அனைத்திலும், தினமும், இப்போதும் இடம் பெறும் எங்கள் தலைவியை... புரட்சித்தலைவி என ஏன் அழைத்தோம் என்பது இப்போதாவது புரிகிறதா?"



"சர்க்கரை விலை உயர்வைக் கண்டித்து அரசுக்கு கடிதம் எழுதலாம்னு நினைச்சேன்."

"பிறகு ஏன் எழுதலே...?"

"கார்டு, கவர் விலையையும் உயர்த்திட்டாங்களே... அதற்கு எதிர்ப்பு தெரிவிச்சு எழுதாம இருந்துட்டேன்..."

— ராஜி ராதா

காலேஜ் ஸ்டார்:



• பத்மப்ரியா

• தோழிகளுடன்...

"செமஸ்டர் வருதுங்க... படிக்கணும்!"

'சாமியார் காலேஜ்' என சேலத்தில் பரவலாகப் பேசப்படும் கல்லூரி. நெற்றி முடி விலக்கி பட்டை போட்டு விடுவார்களோ! நெரிசல் மிகுந்த மெயின் ரோட்டை ஒட்டி, உள்ளே விஸ்தாரமான பரப்பளவில் இயங்கி வரும் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி வளாகத்தில் நுழையும் முன்பு இலேசாகப் படபடக்கிறோம்.

எல்லா கல்லூரி முதல்வர்களுக்குமே முகத்தில் தீவிர பாவம் இருக்கும். இது மகளிர் கல்லூரி என்பதால் முதல்வர் லக்ஷ்மி முகத்தில் அந்தத் தீவிர பாவம் அதிகமாகவே இருந்தது. இரண்டாயிரத்து நூறு இளம் மாணவிகளைக் கட்டி மேய்ப்பது என்றால் சும்மாவா?

ஆனால், தம் மாணவியைப் பற்றிக் கூறும்பொழுது அந்த முகத்தில் தோன்றும் புன்னகை; சரேல் என பிரகாசிக்கும் பெருமை... இவையெல்லாம் பார்க்கும்பொழுது பாரதிராஜாவின் நான்காவது பட டைட்டில்தான் நினைவுக்கு வருகிறது (கல்லுக்குள் ஈரம்).

குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்த எல்லா பெண்களும் (மாணவிகள் + ஆசிரியைகள்) சுட்டிய மாணவியின் பெயர், பத்மப்ரியா.

சராசரியை விடச் சற்றுக் கூடுதலான உயரம். தெளிவான சிந்தனை. சொல்லும், செயலும் ஒன்றுபோல் தோன்றும் பேச்சு. பயமும் குழப்பமும் இல்லாத கண்கள். பாரதியார் பார்த்தால் சந்தோஷப்படும்படியான தோற்றம்.

கல்லூரி மாணவிகளின் பேரவைத் தலைவி.

(ஓர் உபரித் தகவல். சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் சேர்மன் தேர்தல் வருஷம் ஒருமுறை சட்டசபை தேர்தல் மாதிரி, ஆளுயர கட்-அவுட்களும், போஸ்டர்களுமாக அமர்க்களப்படும்).

இங்கே, சாரதாவில் தேர்தலே கிடையாது! (எல்லாருமே கட்டுப்பாடா இருக்கறதுக்கு எதுக்கு தேர்தல் என்கிறீர்களா? அது வேறு விஷயம்.) இரண்டாமாண்டு மாணவிகள், மூன்றாமாண்டு மாணவிகளுக்கு கைகளில் கர்சீஃபும் கண்களில் கண்ணீருமாய் பிரிவு உபசார விழா கொடுக்கும்பொழுது, (பசுமை நிறைந்த நினைவுகளே டைப்பில் பாட்டெல்லாம் பாடி) அந்த விழாவை சிறந்த முறையில் ஒருங்கமைக்கும் மாணவியை, பிற மாணவிகள், ஆசிரியைகள் எல்லாம் 'கப்'பென்று பிடித்து சேர்-பெர்ஸனாக ஆக்கி விடுகிறார்கள்!

பத்மப்ரியா இலேசுப்பட்ட மாணவியாகத் தெரியவில்லை. போன வருஷம் செப்டம்பரில் ஒரு பத்து, ஐம்பது மாணவிகளை (பாடறது, ஆடறது, பேசுறது, நடிக்கிறது, எழுதுறது இந்த மாதிரி) திருச்சி எஸ்.ஆர்.வி கல்லூரியில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி கலாசார போட்டிகளில் பங்கெடுக்கச் செய்து, அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பாக, முன்னணியில் நிறுத்தி, ஓவர்-ஆல் சுழற்கேடயம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்!

கேள்வி :- என்ன மாதிரி நிகழ்ச்சி?

பத்மபிரியா: சிறுகதை விமர்சனம்

கேள்வி :- யாருடைய சிறுகதைகள்?

ப.பிரியா: ஜெயகாந்தன் சிறுகதைகள்

கேள்வி :- வேற என்ன நிகழ்ச்சிகள்?

ப.பிரியா: தமிழ்த் திரைப்படங்களில் பெண்களின் நிலை என்பது பற்றிய விவாதம்.

கேள்வி :- அதல பாதாளம்னுதானே விவாதம் பண்ணியிருப்பீங்க?

பளீர் என்று ஒரு புன்னகை. பற்பசை விளம்பர மாடல் போல. விவாதம், பேச்சுப் போட்டி (தமிழ், ஆங்கிலம் இரண்டிலும்) பத்மபிரியாவே முதலிடம். கர்நாடக இசையில் இதே கல்லூரியின் மாணவியர் பேரவை நிர்வாகி சங்கீதாவுக்கு முதல் பரிசு. (பெயருக்கும், பரிசுக்கும் என்ன ஒரு ஒற்றுமை!)

இது இல்லாமல் சுழற் சங்கமும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியும் இணைந்து நடத்திய ROTO-VET அனைத்துக் கல்லூரி கலைவிழா போட்டிகளிலும் ஒரு சுழற் கேடயம் கிடைத்துள்ளது.

போதாதற்கு NCC யில் பத்மபிரியாவுக்கு Corporal Rank!

பத்மப்ரியாவின் சொந்த ஊர் திருவையாறு.(அப்படிப் போடு!). அப்பா ஹைஸ் கூல் குமாஸ்தா. அம்மா டீச்சர். ஆசாரமான குடும்பம்.

"ஆன்மீகமும், கட்டுப்பாடும் கொண்ட கல்லூரி இது. (நோ கடிதார்) பழமைவாதம் நிறைந்ததா தோன்றினாலும் தற்கால விஞ்ஞான யுகத்துக்கு ஈடு கொடுக்கும் கல்லூரி. 1963ல் ஆரம்பிக்கப்பட்டு தனித்து இயங்கும் கல்லூரி" என்று கல்லூரி புகழ் பாடுகிறார்.

"ஒருங்கமைப்புத் திறன் என்கிறார்களே, இவ்வளவு கட்டுப்பாடான கல்லூரியில் மாணவிகளை வரிசையில் போகச் செய்ததற்கு என்ன பெரிய ஒருங்கிணைப்புத் திறமை வேண்டியிருக்கும்?" கோபப்படும்படி கேட்கிறோம். கோபப்பட மறுக்கிறார் பத்மப்ரியா! "காலை பிரார்த்தனையிலிருந்தே மாணவிகளை ஒழுங்கமைக்கும் வேலை துவங்கி விடும். 9.20லிருந்து 10 மணி வரைதான் பிரார்த்தனை. எல்லா மதங்களையும் ஒருங்கிணைத்து (ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியது போல் என்ற வரியை பிரின்ஸிபால் சேர்த்துக் கொண்டார்) பத்து நிமிடப் பாட்டு; இரண்டு, இரண்டு நிமிட ஆழ்நிலைத் தியானம், பத்து நிமிடம் உடற்பயிற்சி என பிரார்த்தனை நேரத்தில் மாணவிகளைச் சரியாகக் கண்காணிக்க வேண்டி வரும்." (ஆழ்நிலை தியானத்தில் தூங்கிப் போய்ட்டால் என்ன பண்ணுவது?)

"உங்களது உடனடி aim என்ன?" என்ற கேட்டபோது

"செமஸ்டர் வருதுங்க. படிக்கணும்" (அய்யோ கடி!)

"அது இல்லீங்க. பிற்காலத்தில் என்னவாகணும்னு விரும்பறீங்க?"

"எம்.எஸ்ஸி நியூட்ரிஷன் கோர்ஸ் படிக்க ஆசை."

உடல் வளப் பயிற்சிக்கு அஸ்திவாரமாக, 'சாரதா'வில் முதலில் மனவளப் பயிற்சி!

சேலத்திலிருந்து
சத்யப்ரியன்

"உங்களோட பொன்னான நேரத்தை எங்க டி.வி.க்காக ஒதுக்கி நிறைய கருத்துக்களைத் தெரிவித்ததற்காக நன்றி."

"உங்களுக்கே நீங்க நன்றி சொல்லிக்குங்க. என்னை எங்க பேசவிட்டீங்க?"

என் வி.ராமணி



வாழ்வெல்லாம் போராட்டம்

"அதாங்க, படத்துக்குப் பேரு! சேம்பர்ல பதிவுசெஞ்சு ரம்பா கால்ஷீட் கெடைச்சதும் துவங்கறாங்க. ஏப்ரலுக்கு ரிலீஸ்'' என்று போனில் விஜயன் சொன்னான். குழந்தை விடாமல் அழுது கொண்டிருந்ததை இடுப்பில் வைத்துக் கொண்டே சரளா அடுப்பில் வாணலியைக் கிண்டிக் கொண்டிருந்தாள். நேரம் காலை 6:30. இடம்- பழைய மாம்பலத்தில் 'அனுக்ரஹா' ஃப்ளாட்களில் பதினொன்றில் ஒன்று.

"இப்பவா? வரதன் சார் படத்துக்கு ப்ரொடக்ஷன் பாத்துக்கிட்டு இருக்கேன், மும்முரமா. தயாராயிட்டு இருக்குது. ஸ்டில்ஸ் கூட பாத்திருப்பீங்களே'' விஜயன் சட்டை மாட்டிக் கொண்டான்.

"புறப்பட்டுட்டீங்களா? குழந்தையை டாக்டர்கிட்ட எப்ப அழைச்சுட்டுப் போறது?''

"என்ன அவனுக்கு?''

''கைல நிக்காம அழுவறது. சொல்லத் தெரிஞ்சா ரெண்டு பேத்தையும் பத்தி ஒரு பாட்டம் புகார் சொல்லிருக்கும். அதுக்குத் தெரிஞ்சது அழுகை ஒண்ணுதான்.''

"சேம்பர் போயிட்டு அப்படியே ஏ.வி.எம். போய்ட்டு சரியா பத்தரைக்கு வந்துருவேன். ராஜு வந்தா துணைக்கு இருக்கச் சொல்லு.''

"நீங்க பத்தரைன்னா நாலரைன்னு அர்த்தம்.''

"வாராதே. பாரு சரளா! பத்தரை வரைக்கும் வெய்ட் பண்ணு. வரலை? ஆட்டோ புடிச்சுப் போயிரு.''

''அதான சொல்லப் போறீங்க? எப்பனாச்சும் சொன்ன டயத்துக்கு வீட்டுக்கு வந்திருக்கீங்களா?''

"ஆரம்பிக்காதே!''

"எல்லாரையும் போல நீங்களும் ஆபீசுக்கு ஒரு நேரத்துல புறப்பட்டு, ஒரு நேரத்தில வீட்டுக்கு வரணும்னு ஆசையா இருக்குது. ஞாத்திக்கிழமை பீச்சுக்குப் போய் பேல்பூரி, சோளக்கொண்டை... எங்க புறப்பட்டுட்டீங்க? உப்புமா சாப்பிட்டுட்டுப் போங்க.''

"டயம் இல்லை''

அவன் வாணலியிலிருந்தே ஒரு கரண்டி அள்ளி உப்புமாவை சுடச்சுட கையில் வைத்து ஊதி, ஆற்றி லபக்கென்று விழுங்கினான்.

"வெரி குட்: படம் ஹிட் ஆனதும் பாரு! நாம எங்கயோ போய்ருவோம். வரதன் சார் மதுரை எனக்குத்தான்னு சொல்லிருக்கார். நான் என்எஸ்ஸி கேட்டிருக்கேன். இது மட்டும் தப்பு பண்ணாம ஓடட்டும், நாயர் ரோடில, ப்ளாட்டு, சியலோ காரு... நம்ம தசையே மாறிடும் பாரு! ஜோசியர் சொல்லிருக்கார். குரு தனுசிலருந்து மகர ராசிக்குப் போறார். மகரத்தில் நீசமா இருந்தாலும் குருவும் சனியும் பரிவர்த்தனைன்னால நீச பலம் போய்டும்னு சொல்லிருக்கார். உடம்புதான் கொஞ்சம் பாதிக்குமாம். அதுக்கெல்லாம் மருந்து மாயம் சாப்டுக்கலாம். தொழில்ல அமோகமா முன்னேற்றம்னு சொல்லிருக்கார். இந்த வருஷம் தான் சரளா, நம்ம வருஷம்! எப்பவுமே மிடில் க்ளாஸ் இல்லை நாம. வரட்டுமா?''

"இருங்க கோலம் போட்டுர்றேன்.''

கணவன் வாயில் படியை கடப்பதற்கு முன் அவசரமாக ஒரு தம்ளரில் ஜலம் தெளித்து சிக்கனமாக ஒரு நாலு புள்ளிக் கோலம் போட்டாள்.

"இதுக்கெல்லாம் ஸ்டிக்கர் இருக்குதே? டாட்டா, கக''

"கக்ன்னு கூப்பிடாதீங்க.''

கக என்கிற கஷ்மிதா இந்த உரையாடலின் போது விடாமல் அழுது கொண்டிருந்தது. பால் மறக்க விரல் போட்டு பழக்கம் பண்ணியிருந்தது. கன்னங்களில் பொறிப் பொறியாக சிவப்புப் புள்ளிகள் தெரிந்தன.

கீழே கார் பொறுமையின்றி ஆரன் அடித்தது.

"வரேம்பா வரேம்பா. பைபை! கவிட்டி என்ன அதுக்கு வேர்க்கூரா'' என்று அவசரமாக தாய்க்கும் சேய்க்கும் முத்தமிட்டுப் புறப்பட்டான்.

மாடியிலிருந்து எட்டிப் பார்த்தான். காரில் இடமில்லாமல் மூன்று பரட்டைத்



மீண்டும் மத்யமர் கதைகள் — 10

சுஜாதா

தலையார்களும் ஒரு பெரிய டிபன் பாக்சும் அடைத்திருந்தது.

விஜயன் உள்ளே தன்னைத் திணித்துக் கொண்டு கதவை மூடுவதற்குள் கார் புறப் பட்டது.

சரளா குழந்தையை கீழே விட்டுப் பார்த் தாள். அழுகை அதிகரித்தது. கழுத்தைத் தொட் டுப் பார்த்தாள். நல்ல ஜுரம். குழந்தை கழுத் தைத் திருப்ப சிரமப்பட்டது போலத் தோன்றி யது.

அவசரத்தில் அலமாரியில் செய்தித்தாள் அடியில் பார்த்தாள். கணவனின் தொங்கும் சட்டைகளை ஆராய்ந்ததில், எதிலும் காசில்லை.

கீழே போய் பங்கஜம் மாமியிடம் அம்பது ரூபாய் கேட்டாள்.

''கொடுக்கறேம்மா! நீ இதுவரைக்கும் வாங்கினது ஞாபகம் இருந்தா சரி.''

எல்லாத்தையும் கணக்கு வெச்சிட்டி ருக்கேன் மாமி.

முன்னூத்தி எண்பது ரூபாய். குடுத் துர்றோம் மாமி! வாடகையோட சேர்த்து''

''காப்பிப் பொடியும் இதுவரை ஒரு கிலோ கடன் வாங்கியாச்சு.''

''இந்தப் படம் முடிஞ்சதும் எங்களுக்கு நிறைய பணம் வரும்னு சொல்லிருக்கார்.''

''என்ன படம்?''

''வாழ்வெனும் போராட்டம். அடுத்தது டிஸ்ட்ரிபுஷன் எடுக்கப் போறார். தினகரன்ல கூட விளம்பரம் வந்ததே, இன்று பாடல் பதிவுடன் துவக்கம்னு.''

''உங்க லக்ஷ்மிதாக்கு ஒரு பார்ட் கொடுத் துடச் சொல்லு.''

''அதெல்லாம் வேண்டாம் மாமி. இவளைப் படிக்க வெக்க அமெரிக்கா அனுப்பப்

போறேன். இவரோட ஒயட்டும் இந்த சினிமா சமாசாரமெல்லாம். ஸ்டுடியோ பக்கம் கூட தலை வெச்சுப் படுத்ததில்லை. ப்ரீமியர் ஷோ, ப்ரஸ் ஷோ எதுக்கும் போறதில்லை."

"குழந்தை கன்னம் என்ன இப்படி சிவந் திருக்கு? எனக்கு என்னவோ மீசில்ஸ் தட் டம்மை மாதிரி தோணுது."

''தெரியலை மாமி. ரெண்டு நாளா புகைஞ்சு புகைஞ்சு இருமறா. இவர்கிட்டே சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சுது."

''நீயே ஆனந்த ராவ்கிட்ட கொண்டு காட்டிடேன். இந்த விபூதியை நெத்தியில் இடு. எல்லா வியாதியும் பறந்து போகும்."

படப்பிடிப்புத் தளத்தில் டான்ஸ் டைரக்டர் சபரிமலைக்கு மாலை போட்டிருந் தார். விசில் அடித்து கைதட்டி சில பெண் களை அதட்டிக் கொண்டிருந்தார். அவர்கள் குறைந்த வெட்டு ரவிக்கை அணிந்து எல் லாரும் மார்பின் பிளவில் கைக்குட்டை செருகியிருந்தார்கள்.

விஜயன் ஓரத்தில் டெலிபோன் பேசிக் கொண்டிருந்தான்.

"சுமோல வரமாட்டாங்களாம்! முப்பத்தாறு முப்பத்தாறை அனுப்பிருக்கேன். மேக்-அப் மேனை பிக்-அப் பண்ண தனி வண்டி போயிருக்கு. பதினெட்டு எழுவத்திரண்டு. அப் புறம் ஒரு நூறு முழம் மல்லிப்பூ வேணும்டா, சரவணால போய் நாலு வெள்ளி கூஜா... ஆமா நாலு முதல் இரவு. பெரிய பட்ஜெட் படம் இல்லையா!"

நாலு வெள்ளை பாண்ட் வெள்ளை காலணி, மஞ்சள் சில்க் சட்டை, முழுக்கை மேல் கட்டிய தங்க கடிகாரம், செல்போனுடன் வரதராசன் வர, விஜயன் எழுந்து நின்றான்.

"என்ன விஜி, ஏன் அமல்ராஜுக்கு கார் போகலை?"

"எல்லாம் போய்ருக்கு. கேட்ல மாட்டிக் கிட்டிருப்பான்."

***

''என்னய்யா இது. நம்ம ஊர்வலத்துல வர்றவங்க கோஷம் எதுவும் போடாம அமைதியா வர்றாங்க?''

''கூலி குறைவா இருக்குதேனு இறுதி ஊர்வலத்துக்கு வாடகைக்குப் போறவங்களை கூட்டியாந்தேன்!''

—அம்பை தேவா



"விஜி உனக்கு என்எஸ்சி வேண்டுமோ?"

"நிச்சயம் முதலாளி" என்றான் ஆர்வத்து டன்.

'என்எஸ்சி கொடுத்துட்டேன். மதுரை அம்பதுக்கு தரேன். ஒரு மாசத்தில் எம்பது எடுத்துரலாம். பெரிய பட்ஜெட்."

"தெரியும் முதலாளி."

''பார்ட்டி ரொம்ப தொந்தரவு பண்றது. எதுக்கும் ஒரு நாலு ரூபா அட்வான்ஸ கொடுத்து ஒரு அக்ரிமெண்ட்ல கையெழுத்து போட்டுறேன்."

"நிச்சயம் முதலாளி. எங்கிட்ட நாலு ரூபா இல்லையே?"

"எவ்வளவு இருக்கு? ஒரு டோக்கன் அட் வான்ஸ கொடுத்துடு! அப்புறம்..."

"ஒன்னரை லட்சம் புரட்ட முடியும். அதும் கடன் வாங்கணும்."

''உனக்கெல்லாம் டிஸ்ட்ரிப்யூஷன் லாயக்கில்லையா? ஜுனியர் ஆர்ட்டிஸ்டுங் களுக்கு ப்ரா பாத்துட்டு, ஆயுசு பூரா ப்ரொடக் ஷன் பாத்து போன்லையே சாவணுமா? வாழ்க்கைல பால்கனி க்ளாஸுக்கு வரணும்னா ரிஸ்க் எடு."

"சொல்றது புரியறது முதலாளி. ஒரு வட்டி, ஒன்னரை வட்டிக்கு எடுக்கவும் பயமாக இருக்கு. வர்ற லாபம் வட்டிக்கே தீர்ந்துரும்னு."

"அதனால என்ன? பேர் வரும் இல்லையா? அடுத்தப் படத்தில எடுத்துரலாம். நான்லாம் அப்படித்தான் வந்தேன்."

"முதலாளி பத்து நாள் பொறுத்துக்கங்க. எப்படியாவது புரட்டி அட்வான்சை கொடுத் துர்றேன்."

''பத்து நாள்ல போண்டியாய்டுவேன்! போனாப்-போவுது. நாளை வரைக்கும் டயம் கொடுக்கறேன். ஒரு லட்ச ரூபாயாவது புரட் டிரு. ஷூட்டிங் செலவு ஒரு நாளைக்கு எவ் வளவு தெரியுமா?"

"ஒரு லட்சம். நான்தானே பட்டுவாடா பண்றேன்."

"பின்ன... நாளைக்கு சாயங்காலத்துக்குள்ள கொண்டாந்துரு."

அந்தப் பெண்கள் விசிலடித்த மாத்திரத் தில் "வசந்தம் தரும் யோகம் நீதானோ" என்கிற பாட்டுக்கு பதினாறாவது தடவையாக இடுப்பை அசைத்தார்கள்.

டாக்டர் ஆனந்தராவ் கவலையுடன் சரளாவைப் பார்த்தார். ஏம்மா குழந்தை கழுத்தைத் திருப்பாம இருக்குதே கவனிச்சியா"

"ஒருவேளை சுளுக்கிட்டு இருக்கோன்னு நீலகிரி தைலம் தடவினேன் டாக்டர்."

"இந்த மாதிரி ராஷஸ் எத்தனி நாளா இருக்குது?"

"ரெண்டு நாளாத்தான் கவனிச்சேன்."



''பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு ஏண்டா என்கிட்ட சண்டைக்கு வர்றே?''

''இல்லாட்டி அவளே உன்கிட்ட நேரடியா மோதுவா; இதைவிட அது பயங்கரமா இருக்கும்மா..!''

– சீர்காழி வி. ரேவதி

"வாந்தி எடுத்துதா?"

"ஆமா டாக்டர். சாப்பிட்டது எதும் நிக்கலை. சாதாரணமாவே சாப்டாப் படுத்தும்."

"ஃபிட்ஸ் இருந்ததா? வலிப்பு மாதிரி."

''அப்பப்ப கொஞ்சம் தூக்கித் தூக்கி போட்டுச்சு ராத்திரி."

"என்னம்மா இப்பப் போய்க் கொண்டு வரியே குழந்தையை?"

"இவளுக்கு என்ன டாக்டர்?"

"மெனின்ஜைட்டிஸ் மாதிரி இருக்கு. இந்த மாதிரி புள்ளி புள்ளியா ஸ்கின் ராஷஸ் வந்தப்பவே கொண்டு வந்திருக்கணும். குழந்தையை முதல்ல சில்ட்ரன்ஸ் ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணணும். எங்க உன் அஸ்பண்டு?"

"அவர் வந்து, வேலைக்குப் போயிருக்கார்."

"என்ன வேலை?"

"சினிமா கம்பெனில ப்ரொடக்ஷன் பார்த்துக்கறார்."

"போன் நம்பர் சொல்லு."

"ஒரொரு மணி ஒரோரு இடத்தில இருப்பார்."

"எதாவது காண்டாக்ட் போன் நம்பர் உண்டா?"

"அப்பப்ப வீட்டுக்கு போன் பண்ணுவார். செகண்ட் ப்ளோர்ல எப்பவாவது கூப்பிடுவாங்க."

"இனிமே தாமதிக்காதே! நேரா அட்மிட் பண்ணிரு. எக்மோர் ஆம்புலன்சுக்கு சொல்லட்டுமா?"

"எவ்வளவு பணம் ஆகும்?"

"பணத்தைப் பத்தி கவலைப்பட வேண்டிய நேரமில்லைம்மா இது. இட்ஸ் என் எமர்ஜென்ஸி."

''டாக்டர் இவளுக்கு ஒண்ணுமில்லை தானே? சரியாப் போய்டும்தானே?"

"என்ன பேரு...?"

"கஷ்மிதா. கஷ்மிதா... கண்ணு முழிச்சுக்கோம்மா. என்ன பண்றது உனக்கு. டாக்டர் இப்படித்தான் கண்ணு சொருகி சொருகி..." வாக்கியத்தை முடிக்காமல் அவள் கண்களில் கண்ணீர் நிரம்பியது. உதட்டை இறுக்கி அடக்கிக் கொண்டாள்.

"சரியாப் போய்டும்தானே?"

"இப்படி அழுதுகிட்டே இருந்தா சரியாகாது" ஆனந்த ராவ் டெலிபோன் எண்களைச் சுழற்றினார்.

"ஹலோ டாக்டர் மால்தி. ஆனந்தராவ் பேசறேன். எங்க உங்களை கான்பரன்ஸ்ல காணமே.. ஐம் செண்டிங் எ கேஸ் ஆஃப் சஸ்பெக்டட் மெனின்ஜைட்டிஸ்... எல்லா சிம்ப்டமும் இருக்கு. பேஷண்ட் நேம் பேபி கஷ்மிதா... ஆமாம்... எனக்கே எட்டு கஷ்மிதா இருக்கா... மதர் பேரு சரளா. கொண்டு வருவாங்க. உடனே அட்மிட் பண்ணி ப்ராபப்ளி யு கன் ஸ்டார்ட் வித் அண்டிப்பையாட்டிக்ஸ் ஆர் சல்ஃபா...யு நோ பெஸ்ட்."

"ஆர்ட்டிஸ்ட் காத்திருக்கா. மேக்-அப் மேன் வரலைன்னா என்னப்பா டென்சன் பண்றீங்க?"

விஜயன் முதலாளியின் செல்போனில் பல எண்களை முயன்று கொண்டிருந்தான்.

''யோவ், சோனாக்கு போன் பண்ணி அந்தம்மா கூட இந்தில பேசி சொல்லுய்யா. ஃப்ளைட்டை வேணா நாளைக்கு காலைக்கு மாத்திக்கலாம்னு."

"நைட் சூட்டிங் அவங்க ஒத்துக்க மாட்டாங்கய்யா, கூட வந்திருக்காங்களே அம்மா, அவங்க அடிச்சுச் சொல்றாங்க."

"விஜி என்னப்பா பண்றே? எங்கப்பா மேக்-அப் மேன்?"

"சார் ட்ராபிக்ல மாட்டிக்கிட்டு இருக்கார் போல. எதோ மாபெரும் ஊர்வலமாம். ஈழத்தமிழர்களோ, பெட்ரோல் விலையோ, இல்லை யாரோ தலைவருக்கு அறுபது வயசா தெரியலை."

''மந்திரமூர்த்தி மேக்-அப் போட ஒப்புக்குவாங்களா கேளு"

"பேச்சே இல்லை. பெத்த தாயைக் கூட மாத்திருவாங்க. மேக்-அப் மேனை மாத்த மாட்டாங்க."

"அப்புறம் குழந்தை ஒண்ணு வரணும்."

"குழந்தை வந்துருச்சுங்க! ரெடியா இருக்கு. ஏசி ரூம்ல."

குழந்தை என்றதும் ஞாபகம் வந்தது. வீட்டுக்கு ஒரு போன் ஒத்திப் பார்த்தான்.

கிடைக்கவில்லை.

"எங்க போய்த் தொலைஞ்சா?"

படுக்கையைச் சுற்றிலும் பல டாக்டர்கள் சூழ்ந்திருந்தார்கள். சரளா ஓர் ஓரத்தில் நின்று கொண்டு கவலையுடன் முகத்தை தலைப்பால் மூடி அவர்கள் புரியாத ஆங்கிலத்தில் பேசிக் கொள்வதை கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்

தான்.

"இந்தக் குழந்தைக்குத் தாய், தகப்பன் வந்திருக்காங்களா?"

"இந்தம்மாதான் வந்திருக்காங்க."

"ஏம்மா இதுக்கு முன்னாடி ஊசி போட்டு அலர்ஜி ஏதாவது வந்திருக்கா? இந்தக் குழந்தைக்கு ஊசி போட்டிருக்கா?"

"இல்லை டாக்டர். கிரோசின்தான் அடிக்கடி குடுப்பார். அப்புறம் மைல்டா காஃப் சிரப்."

"கக்குவான் இருமல் வந்திருக்காம்மா இதுக்கு?"

"ஒருமுறை வந்திருக்கு."

"ட்ரிப்பிள் ஆண்ட்டிஜென் போட்டீங்களா?"

"அப்படின்னா?"

"கர்ப்பக்காலத்தில, அப்புறம் குழந்தை பிறந்தப்புறம் ஏதாவது ஊசி போட்டிருப்பாங்களே?"

"போட்டதாத்தான ஞாபகம்."

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "சரியா பதில் சொல்லும்மா. ட்ரிப்பிள் ஆண்டிஜென் போட்டுதா இல்லையா? ஊப்பிங் காப் வந்திருக்கா?"

"இப்ப இதுக்கு கக்குவான் இருமலா?"

"இல்லை. அதனால ஏற்பட்ட ஒரு காம்ப்ளிகேஷன்."

"எல்லாம் அவர்தான் ஊசி போட அழைச்சுட்டுப் போனதா ஞாபகம்."

"ஞாபகம்! எங்க அவரு?"

"படப்பிடிப்பில இருக்கார்."

"ஆக்டரா?"

"இல்லை. ப்ரொடக்ஷன் பார்க்கறவரு. லொகேஷன் மூணு மாசம் போயிருந்தார். இவ பிறந்த போது வந்து பார்த்துட்டு போனது. எப்ப பார்த்தாலும் ட்யூட்டிதான். தனியா என்ன செய்வேன் சொல்லுங்க! காதல் கல்யாணம்னு பொறந்த வீட்டி..."

"என் கணவர் தூக்கத்துல நடப்பார்! அதனால நான் ராத்திரி சமையல் செய்யறதே இல்லை!"

"ஏன்?"

"அவர் கையில் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து அனுப்பிடுவேன். பார்க்கிறவங்க ராப்பிச்சைன்னு நினைச்சு சாதம் போட்டுடுவாங்க!"

— பாலு



"லெட்ஸ் டேக் எ சான்ஸ். அலர்ஜிக் ரியாக்ஷன் பாக்கறதுக்கு சமயமில்லை இப்ப"

"விஜி ஒரு காரியம் பண்ணு! சுமோவை எடுத்துக்கிட்டு, ஊர்வலத்தில்தான் மாட்டிக்கிட்டு இருப்பாங்க. போய் இந்தப் பக்கம் நின்னு ரோடு குறுக்க க்ராஸ் பண்ணி அவளை அழைச்சுக்கிட்டு வந்துரு! இனிமே இந்த நகரத்தில் எலிகாப்டர் வாங்கணும் போல இருக்கு. செல்போனை எடுத்துக்கிட்டு போ."

விஜயன் ட்ராபிக் லைட்டில் நிறுத்திய போது பாதையோரம் ஒரு சிறுமி கைக்குழந்தையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டே பிச்சை எடுத்தாள். செல்போனில் மறுபடி வீட்டை முயன்றான்.

"ரிங்கிங்" என்று சொல்லி "டயம் அவுட்" என்று செய்தி காட்டியது.

"கூட யாரும் வந்திருக்காங்களாம்மா?"

"இல்லை டாக்டர்."

"உங்க ஹஸ்பண்டு போன் நம்பர் சொல்லு."

"இவர் எங்கருப்பார்னு சொல்ல முடியாது டாக்டர். ஏதாவதுன்னா செகண்ட் ப்ளோர்க்கு போன் பண்ணுவேன்!"

"பண்ணுங்க, இது அவசரம்."

அடித்துக் கொண்டே இருந்தபின் யாரோ தாமதமாக எடுக்க, "அலோ ப்ரொடக்ஷன் மானேஜர் விஜயன் சார் இருக்காருங்களா?"

அந்தப் பக்கம் "இருங்க, பார்க்கறேன்" பலவீனமான குரல்கள் போனுக்கு உயிரிருப்பதை அறிவித்தன.

"யாருப்பா போனு? அல்லோ யாரு வேணும்" என்றது புதிய குரல்.

"விஜயன்."

"அவர் இல்லைங்களே... நீங்க?"

"அவரை அழைச்சுட்டு வரதா ஒருத்தர் போயிருக்காங்க."

"எடிட்டர் விஜயனா?"

"இல்லை சார். ப்ரொடக்ஷன் மானேஜர்."

"கம்பெனி பேரு?"

"தெரியலை சார்."

"ஒரு காரியம் பண்ணுங்க. இது ப்ளோர்ல உள்ள போனு. தேவையா இருக்குது. பத்து நிமிசம் விட்டு போன் பண்றீங்களா? விஜயனையே பேசச் சொல்றேன். நீங்க அவர் மனைவியா?"

"ஆமாம். பாழாப் போன மனைவி!"

"வரச் சொல்றேன்."

"யாரோ விஜயனாம்பா. யாருன்னே தெரியலை" என்பது தெளிவாகக் கேட்டது.

போனை வைத்தான். "சரளா யாருங்க?"

"நான்தாங்க."

"அவசரமா எமர்ஜென்சி வார்டில கூப்பி டறாங்க."

"ஏங்க?"

"அந்தக் குழந்தை செத்துருச்சு."

"அறுபது அகவை கண்ட அய்யா அருள்மொழி அவர்களே, வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம்" என்று துணியில் எழுதிப் பிடித்துக் கொண்டு கையை கையை உயர்த்தி கூவிக் கொண்டு ஒரு ஒல்லியான ஊர்வலம் கடக்க, வாகனங்கள் பிரதான சாலையில் அடைபட்ட குழப்பத்தின் உச்சகட்டத்தில் எல்லாரும் எல்லா திசைகளையும் ஆக்கிரமித் தனர்.

"இதில நம்ம பதினெட்டு எழுவத் திரண்டை எங்கங்க தேடறது?"

எல்லா வாகனங்களும் ஆரன் அடிக்க, விஜயன் மீண்டும் ஒருமுறை வீட்டு நம்பரை முயன்றான்.

செல்போனில் செய்தி வந்தது. "ரிங்கிங்"

"எங்க போய்த் தொலைஞ்சா?"

"யாருங்க?"

"எம் பெண்டாட்டி... பக்கத்து வீட்ல சன் டீ.வி. பார்க்க போயிருப்பா."

"கேபிள் வெச்சக்கலையா?"

"இல்லைப்பா. எங்க டயம் இருக்கு?"

"இதுல ஒரு கையெழுத்து போடும்மா. டாக்டர் ஆனந்த ராவ்க்கு போன் பண்ணிருக் கேன். அவரே காரை எடுத்துக்கிட்டு வராரு. புருசன் வரலியா?"

கஷ்மிதா அவன் தாயின் எதிர்பார்ப்பு களை நிறைவேற்றாமல் வெளிநாட்டுக்கு போய்ப் படிக்க இயலாமல்... சி எச் என்று பெரிதாக வண்ணான் கரை போட்ட வெண் துணியால் மூடி சின்ன பொட்டலமாகக் கிடந் தாள். நெற்றியில் பயனில்லாத விபூதி தீற்றி யிருந்தது. சரளா மௌனமாக அழ, பங்கஜம் மாமி அவளை அணைத்துக் கொண்டு வர, வேலைக்காரி சரசுவதி "பிள்ளை சிரிக்கலையே பொன்னு மினுக்கலியே" என்று ராகம் பாடிக் கொண்டிருந்தாள்.

"அமல்ராஜ், இவங்களையெல்லாம் கடனும்யா! ஒரு மணி நேரம் அடைச்சுட் டாங்க" முன்னால் தடைப்பட்டிருந்த ஃபியட்டை தள்ளி வழி பண்ணிவிட்டு மீண்டும் ஏறிக் கொண்டார்கள். "என்ன விஜி வரது படத்தை எடுக்கறியாமே."

"உங்களுக்குத் தெரிஞ்சுப் போச்சா?"

"அட்வான்ஸ கொடுத்துட்டியா?"

"இல்லை, புரட்டணும்."

ஃப்ளோருக்கு வந்ததும் காத்திருந்தவர்கள் நிதானம் அடைந்து வாங்க வாங்க என்று



அந்த தம்பதிகள் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு நாள் கணவன் "கடவுளே! என்னை எப்பொழுது உன்னிடம் அழைத்துக் கொள்ளப் போகிறாய்?" என்றான். மனைவி "கடவுளே முதலில் என்னை அழைத்துக் கொள்" என்றாள். உடனே கணவன் "கடவுளே என் பேச்சைக் கேட்காதே, என் மனைவி சொல்வதையே கேள்!" என்றான்.

"கொஞ்சம் சிரியுங்களேன்!" என்ற நூலிலிருந்து : எஸ். எஸ். பூங்கதிர்

வரவேற்க, வரது, "விஜி நீ நேராப் போய் இந்தக் காஷை அந்தப் பொம்பளை பி.ஏ.கிட்ட கொடுத்து கையெழுத்து வாங்கிட்டு வந்துரு! அப்புறம் இந்த கண்டின்யுட்டி டிரஸ்ஸை சோளால அவகிட்ட கொடுத்துட்டு உடனே வரச் சொல்லு. மேக்-அப் மேன் வந்தாச்சன்னு சொல்லிரு. அப்புறம் மாரிஸ்ல ஒரு கனறி மாஸ்டர் தங்கிருக்கான். அவனையும் இட்டாந் துரு."

"சரி சார்! ஒரு போன் பண்ணிக்கறேன்."

இப்போது போன் கிடைத்தது.

"யாரு சரளாவா? எங்க போய்த் தொலைஞ்சே? ஏன் போன் அடிச்சுக்கிட்டே இருந்தது. யாரும் எடுக்காம?"

"சரளா இல்லை. நான் பங்கஜம் பேசறேன். யார் பேசறது விஜியா?"

"மாமி நீங்களா? சரளா எங்கே?"

"உனக்குத் தெரியாதாப்பா?"

"என்ன?"

"சீக்கிரம் வீட்டுக்கு வந்துரு."

"குழந்தைக்கு என்ன ஆச்சுன்னு கேட்டுச் சொல்லுங்க."

"குழந்தைதான்.. ."

திடீர் என்று அழுகுரல் கேட்க,

"மாமி?"

"குழந்தை போயிடுத்துப்பா!"

"என்ன விஜி?"

ஒரு நிமிஷம் கையில் இருந்த செல்போனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"ராமு! அவசரமா வீட்டுக்குப் போகணும். இந்த காஷை கொண்டு போய் அவ பி.ஏட்ட கொடுத்துட்டு..."

"காஷ் விவகாரம் நமக்கு வேண்டாம். அடிபட்டவன்பா."

விஜி யோசித்தான். "சரி நான் போறப்ப குடுத்துட்டு போயிர்றேன். எங்கய்யா கண்டின் யுட்டி டிரஸ்ஸு?"

● கே. கணேசன், சென்னை – 58.

? *மத்திய பட்ஜெட், பணக்காரர்களுக்காக ஒரு பணக்கார நிதியமைச்சரால் தயாரிக்கப் பட்ட பணக்கார பட்ஜெட் என்கிறாரே ஜெயலலிதா?*

! ஒரு பண முதலை வடிக்கிற முதலைக் கண்ணீர்!

● எஸ். குமரன், மதுரை.

? *தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கலைக்கப் பட்டு, குமரிஅனந்தனைத் தலைவர் பதவியிலிருந்து தூக்கியது பற்றி...?*

! தூக்கிட்டா ஆச்சுதுங்களா? அடுத்தது யாரைப் போடுவது என்பதைத் தாமதமின்றி முடிவு செய்ய இயலாத குழப்பம் நிலவுகிறதே..! உட்கட்சி ஜனநாயகமின்றி தில்லி தர்பார் நடத்துகிற இந்தச் சர்வாதிகாரப் போக்கு மாறும் வரை அந்தக் கட்சி உருப்படவே செய்யாது.



• வழிபாடு அரசியல்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி.


? *'சினிமாவில் நடிகைகளைக் கட்டிப் பிடித்தே என் கை ரேகைகள் அழிந்து விட்டன' என்று வினுச்சக்கரவர்த்தி கூறியிருக்கிறாரே?*

! ரசனைக்குறைவான படங்களில் நடிப்பது

ரோமியோக்களைப்

போதாதென்று இப்படி ரசனைக்குறைவாகப் பேச வேறு வேண்டுமா?!

• அடுத்தது யார்!



• விபரீத விமர்சனம்!

● சூர்யநிலா, சேலம் – 2.

? *மத்தியில் பி.ஜே.பி. ஆட்சி அமைந்தால் காவிரி பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்கிறாரே முரளி மனோகர் ஜோஷி?*

! அதற்கு பி.ஜே.பி. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் மட்டும் போதாது; கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் கூட அக்கட்சியே ஆட்சிக்கு வர வேண்டும். நடக்கிற காரியமா! நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்பதுதான் அனைவருக்கும் நல்லது. பி.ஜே.பிகாரர்கள் அதை எடுத்துச் சொல்லலாமே...

● மல்லிகை மன்னன், மதுரை – 14.

? *சமையல் காஸ், தொலைபேசி இணைப்பு ஆகியன வழங்குவதில் மக்களவை உறுப்பினர்கள் இதுவரை அனுபவித்த ஒதுக்கீடு சலுகை ரத்து செய்யப் பட்டுள்ளதே – இது ஐக்கிய முன்னணி அரசின் மகத்தான சாதனை அல்லவா?*




• [illegible]
வேதனை!

! இதொன்றும் ஐக்கிய முன்னணியின் சாதனை அல்ல. அரசுக்கு (அமைச்சகத்துக்கு) இருந்த இந்தச் சலுகைகளை நீதிமன்றம் 'சட்ட விரோதம்' என்று கூறி ரத்து செய்து விட்டது. அமைச்சகத்துக்கு அதிகாரம் இருந்தால் தானே எம்.பி.க்களுக்கு அதை அமைச்சர்கள் வழங்க முடியும்...? இப்போது எல்லாமே கோவிந்தா!

● த. சங்கர், திண்டுக்கல்.

? *ஜெ–48, ஜெ–49 –*



❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
நீடா சி. இளஞ்செழியன்,
3/256, வாணியத் தெரு,
சாலியமங்கலம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம் – 613 504.


• புதிய கண்டுபிடிப்பு!


• ஆட்சி ஆசையில்...


• கல்யாணக் கதை!

பிடிக்க தனி போலீஸ் அவசியமா?

பிறந்த நாள் ஒப்பிடுக...?

! அதெல்லாம் பழங்கதை; இப்ப லேட்டஸ்ட் ஸ்டாலின் பிறந்த நாள்தான்! நாளிதழ்களில் பக்கம் பக்கமாக வரும் விளம்பரங்களைப் பார்த்தால், 'வழிபாடு அரசியலின்' அறிகுறிகள் தெரிகின்றன. மீண்டும் பழைய கதையே அரங்கேறுமா என்று கவலையாக இருக்கிறது.

● **ஜி. செல்லத்துரை, எஸ். ஆலங்குளம்.**

? எத்தனையோ பிரச்னைகள் இருக்கும் போது ரோமியோக்களைப் பிடிக்க தனி பெண் போலீஸ் படை அமைத்துச் செயல்படுத்துவது தேவையில்லாத காரியம்தானே?

! தேவையில்லாத முடிவு என்று ஒதுக்கிவிட முடியாது. பிரச்னையின் மையத்தில் சிக்கி அனுபவித்தவர்களிடம் கேளுங்கள். அந்தத் துன்பத்தைச் சொல்வார்கள். ஒரு வாரத்தில் 350 'ரோமியோ'க்கள் பிடிபட்டிருப்பதே இந்த ஏற்பாடுக்கான அவசியத்தை உணர்த்துகிறது.

● **கே. சங்கர், திருச்சி – 8.**

? சினிமா தயாரிப்பாளர் – விநியோகஸ்தர் கணவன் – மனைவிபோல் இல்லாமல், அடிக்கடி சண்டையிடுவது பற்றி...?

! கணவன் – மனைவி உதாரணமெல்லாம் இதற்குப் பொருந்தாது. இது வியாபாரம்! ஆனால் இந்த வியாபாரத்தில் ஒரு விநோதம் – மற்ற உற்பத்திப் பொருள்களெல்லாம் தயாரான பிறகே விலை பேசப்படுகின்றன; சினிமாவோ, தயாரிக்க திட்டமிடுகையிலேயே விநியோகஸ்தர்களால் விலை கேட்கப்படுகிறது. இந்த சூதாட்ட மனப்பான்மையினால் சினிமா சந்தை ஆரோக்கியம் இழக்கிறது; சண்டை சச்சரவுகள் தோன்றுவது இயல்புதான். எனவே, இத்துறையில் நம்பகமான வியாபார நடைமுறை உருவாக்கப்படல் வேண்டும்.

● **சுகி சிவகுமார், சென்னை – 39.**

? இந்த வாரத்தின் ஜீ(ஹீ)ரோவாக யாரைக் கருதுகிறீர்கள் தராசு சார்?

! பீஹார் தீவன ஊழலுக்கு CAG (பிரதம கணக்காயர்)தான் காரணம் என்று 'கண்டுபிடித்து'க் கூறியுள்ள, அபார மூளை படைத்த லல்லு பிரசாத் யாதவ் தான்!

● **எஸ். ஈச்வரன், திருச்சி – 5.**

? 'திருமணத்தில், மாப்பிள்ளை வரதட்சணை கேட்டதால் வெறுப்படைந்து, வேலைக்காரனைக் கூப்பிட்டுத் தாலிகட்ட வைத்த கதையாகத்தான் தி.மு.க. வெற்றி பெற்றது' என்று நெடுஞ்செழியன் புதுக்கோட்டை இடைத்தேர்தல் முடிவு குறித்துப் பேசியிருக்கிறாரே...?

! ஆக, தாங்கள் வரதட்சணை கேட்ட குற்றவாளிகள் என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். அதற்குச் சட்டப்படி தண்டனை உண்டு! மேலும், ஆட்சி என்பது மக்களுக்குப் பணி செய்வதுதான் – ஒரு நல்ல வேலைக்காரன்தான் மக்களுக்குத் தேவை.

● **எல்.எம். அபிநாட்சயா, மதுரை – 10.**

? 'போஃபர்ஸ் ஆவணங்களைத் தகுந்த நேரத்தில் வெளியிடுவோம்' என்று மத்திய அரசு சொல்கிறதே...?

! 'தகுந்த நேரம்' என்பதற்கு, காங்கிரஸ், ஐக்கிய முன்னணியைக் கவிழ்க்க முற்படும் நேரம்' என்று பொருள் கொள்க.

● **நீடா சி. இளஞ்செழியன், காரியமங்கலம்.** ❑

? ஒரு பத்திரிகை, ஒரு நடிகைக்கு எய்ட்ஸ் என்றும் மற்றொரு பத்திரிகை அச்செய்தி வதந்தி என்றும் கூறுகிறதே...? இப்படி முரண்பாடாக எழுதினால் மக்களுக்குப் பத்திரிகைகள் மீது நம்பிக்கை போய் விடாதா?

! 'பத்திரிகை சுதந்தரம் என்பது முட்கள் நிறைந்த பழமரம் போன்றது. முட்கள் குத்துகிறதே என்பதால் கிளைகளை வெட்டப் போனால், மரம் பட்டுப் போகும்; பழங்கள் கிடைக்காது' – சொன்னவர் மாடிஸன் என்கிற அறிஞர். முட்களைத் தவிர்த்து, பழங்களை மட்டும் பறித்து உண்பது மக்களின் சாமர்த்தியம். பழம் வேண்டாம்; முள்தான் வேண்டும் என்றால் அந்த வாசகரை யார் தடுக்க முடியும்?!

இன்னும் சிறகு முளைக்கவில்லை!

●● தூர்தர்ஷன் எதிரொலி நிகழ்ச்சிகளில் மகத்தான மாற்றம். கேமராவையும் கடித வாசிப்பாளரையும் ஸ்டோர் ரூமில் உட்கார வைக்காமல் வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். இயற்கைப் பின்னணியில் இனிய ஆகவாசம். தவிரவும் அவ்வப்போது ஒரு 'நேயரை' வேறு நேரடி பேட்டி காண்பதன் மூலம் வித்தியாசத்துக்கு மெனக்கெடுவது புரிகிறது. இந்த வார நேயரிடம் யு.எம். கண்ணன் : "உங்களுக்கு எந்தெந்த நிகழ்ச்சிகள் பிடிச்சிருக்கு?"


"மனைமாட்சி நல்லா இருக்குங்க. ஆம்பளைங்களும் பார்க்கறாப்பல இருக்குங்க."

"அப்புறம்?"

"வயலும் வாழ்வும் நல்லா இருக்குங்க. விவசாயிங்களுக்கு உபயோகமா இருக்கும். மத்தவங்களாலும் ரசிக்க முடியுதுங்க."

தனியார் தொலைக்காட்சிகளும் இந்தப் பாணியைப் பின்பற்றலாம். விஜய் டீ.வி.யில் கோபியும் இன்னொரு அம்மணியும் ஒரு பூச்சட்டியை முன்னால் வைத்துக் கொண்டு நீளநீளமாக அறுப்பதை முதலில் நிறுத்தினால் கோடி புண்ணியம்.

●● ராத்திரி பத்து மணிக்கு, குழந்தைகள் தூங்கிய பிறகுதான் என்றாலும் விஜய் டீ.வி.யில் டாக்டர் மாத்ருபூதம் வழங்கும் செக்ஸ் கல்வி இத்தனை வெளிப்படையாகத் தோலுரித்து வழங்கப்பட வேண்டுமா என்று கேட்கத் தோன்றுகிறது. இன்னும் சிறகு முளைக்காத சமூகத்தில் இருக்கிற நாம், அப்பாவோ, அம்மாவோ, அண்ணனோ தம்பியோ தற்செயலாக நிகழ்ச்சி நடக்கிறபோது எழுந்து வந்து விட்டால், பாய்ந்து சானல் மாற்ற வேண்டியதாயிருக்கிறது. நிகழ்ச்சி தயாரிப்பாளருக்கு ஒரே ஒரு வேண்டுகோள். ரிப்பீட்டட் கேள்விகளைத் தவிர்த்து விடுங்கள்.



●● ஈயெஸ்பியென்னில் கார் ரேஸ் பார்ப்பது ஒரு தியானம் மாதிரி. உர்ராங் உர்ராங் என்று ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு புயல் வேகத்தில் சீற்றம் காண்பிக்கும்போது கண்கள் இமைக்க மறந்து விடுகின்றன. எப்போதாவது மோதல், கவிழல் நடந்தால் ஹெலிகாப்டர் ஷாட்டில் குரூரத்தை குளோஸப் ஆக்கி, நெஞ்சு பதைக்கச் செய்வதை மட்டும் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். சென்ற புதனன்று ஒரு பந்தயம். சிவப்புக் கலர் குட்டைக்கார் ஒன்று திடீரென்று கவிழ்ந்தடித்து, ஒரு பக்கமாகப் பற்றிக் கொள்ள, பதைத்து விட்டது. பத்து விநாடிகள் கழித்து, ஓட்டி வந்த ஆசாமி, அடியிலிருந்து தவழ்ந்து எழுந்து வந்து ஹெல்மெட்டைக் கழற்றி, வழுக்கைத் தலையைத் துடைத்துக் கொண்டு, கூலாக நடந்து போனார். ஒரு பாட்டில் ஜில்வாட்டர் விழுங்கின பிறகுதான் நம்மால் சமநிலைக்கு வரமுடிந்தது!


●● வி. சானலின் விஸிட்டிங் கார்டு, அதன் அறிவிப்பாளர் ரூபி. அந்தத் துள்ளலும் குறும்பும் கல்லாப்பெட்டி கவிழ்த்தாற்போன்ற சிரிப்பும் ஒயிலும்... காணுகிறபோதெல்லாம் கவிதை எழுதச் சொல்லித் தூண்டுகின்றன. ஒரு சாம்பிள் :

கால் மேலே கால்போட்டு, கையாட்டி,
மெய்யாட்டி
பாலொழுகப் பேசியதை யார்கேட்டார்
– மாலையிலே
காப்பி, டீ குடித்து, களைப்பாறத்
தேவையில்லை
ஸ்வீட்டி உன் ஸ்மைலேபோ தும்.

●● சன் மியூஸிக்கில் சூப்பர்ஹிட்-95, சூப்பர்ஹிட்-96 என்று கொத்துக் கொத்தாக ஐம்பது ஐம்பது பாடல்கள் கொண்ட கேஸட்டைப் போட்டு விட்டு, டீ சாப்பிடப் போய் விடுகிறார்கள். செம்பூவே என்று ஆரம்பித்து, தில்ரூபா வாசித்து, காதலீசா என்று ஆப்பிரிக்கக் கடற்கரையில் கமலஹாஸன் தொண்டை கிழியக் கத்துவதைக் கண்டு முடிப்பதற்குள் கொட்டாவி வந்து விடுகிறது. தொகுப்பாளர்கள் வந்து ஏதாவது கடி ஜோக்காவது சொல்லிக் கொண்டிருந்தார்கள், முன்பெல்லாம். இப்போது? நான் ஸ்டாப் நான்ஸென்ஸ்.

– 'டிஷ்'

பாலம்



●● C.A. இறுதிப் பரீட்சை எழுதவுள்ள என் மகனுக்கு COLIN DRURY எழுதிய Management and Cost Accounting - மூன்றாவது பதிப்பு தேவைப்படுகிறது. வாங்கவோ அல்லது படித்து விட்டுத் திருப்பித் தரவோ சித்தமாக இருக்கிறான். அவசரம்.

– வி. என். சஞ்சீவி,
13, கோபாலபுரம்
இரண்டாவது தெரு,
சென்னை – 86.

●● வீட்டிலிருந்தபடியே மெழுகுவர்த்திகள், ஊதுபத்திகள், ஸ்டிக்கர் பொட்டுக்கள், கிளீனிங் பவுடர் தயாரித்து சம்பாதிக்க ஆலோசனை தரப்படும்.

– ஜி. ஆர். மோகன்,
25, வள்ளுவர் தெரு,
வெங்கமேடு, கரூர் – 639 006.

●● சுமார் இருபத்தைந்து வருஷங்களாக வியாபாரத்தில் தேங்கிப் போன பழைய, புதிய சினிமா பாட்டுப் புத்தகங்கள் சுமார் 5000 இருக்கும். கணிசமாக வாங்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும்.

– பாய் பெட்டிக்கடை,
கல்தானியா ஹோட்டல் எதிர்புறம்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

●● எல்லா நாட்டுத் தபால் தலைகளும் நிறைய கைவசம் உள்ளன. தேவைப்படுவோர் தொடர்பு கொள்க.

– இராம. இராமநாதன்,
AP 1347, 7வது செக்டர்,
33வது தெரு, கே.கே. நகர்,
சென்னை – 600 078.

●● ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதிய "கிட்டப்பாவின் கதை" புத்தக வடிவிலோ அல்லது பைண்ட் செய்த தொடராகவோ தேவை.

– உமா மகேசுவரன்,
"அன்னப்பூரணி"
வி.வி. ராமன் பிள்ளை சாலை,
தைகாடு, திருவனந்தபுரம் - 695 014.

●● லேடீஸ் கைக்கடிகாரம் 19.2.97 நண்பகல் 12 மணிக்கு சென்ட்ரலில் 'சபர்பன்' வாசலில் கிடந்தது. அதை இழந்த நபர் சரியான அடையாளம் கூறி என்னிடம் பெற்றுக் கொள்ளலாம்.

– ஆர். துரை,
அறை 17, குருவாயூர்
ஐயப்பன் மேன்ஷன்,
9, கானா பாக் மூன்றாம் சந்து,
திருவல்லிக்கேணி,
சென்னை – 5.

●● டாக்டர் கேஸி. பஞ்சா எழுதியுள்ள "ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிகா மாஸ்டர் கீ" – மூன்று பாகங்கள் – தமிழ்ப் பதிப்பு உள்ளன. தேவைப்படுவோர் எழுதலாம்.

– கே. காமராஜ்,
101, வீரபாண்டியன் தெரு,
விருத்தாசலம் – 606 001.

●● ஸ்கூட்டர் விபத்தில் தலையில் அடிபட்டு ஆபரேஷனுக்குப் பிறகும் இடது கை – கால் செயலற்று விட்டது. தற்போது இலேசான அசைவுதான். இது போன்ற விபத்தில் சிக்கி குணமானவர்கள் சிகிச்சை விவரங்கள் எழுதினால் நன்றியுடையவனாக இருப்பேன். விலாசம் குறிப்பிடவும்.

– பி. ராகவன்,
76/4 பாலாஜி நகர்,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.

●● எம்.எஸ்ஸி (கணிதம்) முதுகலை படிப்புக்கு An Introduction to Differential Geometry புத்தகம் தேவை. Dr. Kallah Sinha, Jagadish Prasad என்று இருவரும் சேர்ந்து எழுதியது.

– க. ரங்கநாயகி,
த/பெ. எஸ். கே. கண்ணபிரான்,
11/24, காளியம்மன் கோயில் தெரு,
போடிநாயக்கனூர்.

●● திருக்குறளை ஆங்கிலக் கவிதைகளாக எழுதித் தரக்கூடியவர்கள், எதிர்பார்க்கும் சன்மானத்துடன் அணுகவும்.

– டி. என். சீனிவாசன்,
பிளாட் 32, 2வது மெயின் சாலை,
டாக்டர் ராமமூர்த்தி நகர்,
கீழ்க்கட்டளை, சென்னை – 43.

●● TIME வார இதழ் ஒரு வாரம் சென்று பாதி விலைக்குக் கொடுக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் அணுகவும்.

– வி. பாலாஜி,
24, சவுத் கெனால் பாங்க் சாலை,
சென்னை – 28.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது – ஆர்.)



காந்தியின் நண்பர்; கீதையின் அன்பர்!

அதன்பின் காந்திஜிக்கு நெருக்கமாகி விட்டார் என். எஸ்.வி. ஒருமுறை "மை டியர் மகாத்மாஜி" என்று விளித்து காந்திஜிக்குக் கடிதம் எழுதிய போது, சில நாட்களில் அந்தக் கடிதம் காந்திஜியின் செயலாள ரிடமிருந்து ஒரு குறிப்புடன் திரும்பி வந்தது.

"பாபுஜிக்கு மிக நெருக்க மானவரான நீங்கள், அவரை 'மை டியர் மகாத்மாஜி' என்று விளிப்பதில் அன்னி யத்தன்மை இருப்பதாய் பாபுஜி கருதுவதால் கடிதம் திருப்பியனுப்பப்படுகிறது. இனி, 'மை டியர் பாபுஜி' என்றே குறிப்பிடவும்" – இப்படி அந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருந்தது!

என்.எஸ். வரதாச்சாரி, பகவத்கீதையை கரைத்துக் குடித்தவர். தினமும் பல மணி நேரங்கள் அவரது வாய் பகவத் கீதையையும், விஷ்ணு சகஸ்ரநாமத் தையும் முணுமுணுத்த படியே இருக்கும். அதன் நினைவாகத் தான் அவரது நூற் றாண்டினை ஒட்டி, என்.எஸ்.வி.யின் மகன், பகவத் கீதை பற்றி போட்டி நடத்தி, சிறந்தவர்களுக்குப் பரிசு தரும் திட் டத்துக்காக இருபத்தையாயிரம் ரூபாய் நன் கொடை வழங்கியுள்ளார்!

மிகவும் எளிமையான வாழ்க்கையை மேற் கொண்ட என்.எஸ்.வியின் வீட்டில், சென்னை கல்லூரிகளில் படிக்கிற வெளியூர் மாணவர்கள் பத்து, பன்னிரண்டு பேர் எப்போதும் இலவசமாய் தங்கி, சாப்பிட்டு, படித்துக் கொண்டிருப்பார்கள். நானும், என் சகோதரரும் கூட அப்படித் தங்கிப் படித்தவர்கள்தாம்.

சுதந்தரப் போராட்ட வீரரான காந்தியவாதி என். எஸ். வரதாச்சாரிக்கு இது நூற்றாண்டு. அவரைப் பற்றி நினைவுகூர்கிறார் அவருடைய நெருங்கிய உறவினரான டி.கே. செல்லப்பா.

1920-ம் வருடம் ராஜாஜியின் அழைப்பின் பேரில் சென்னைக்கு வந்திருந்தார் காந்திஜி. திருவல்லிக்கேணியில் மகுதி வளாகத்தில் திரளான கூட்டம். காந்திஜி பேசும்போது, அன்னியத் துணிமணி, பட்டங்கள், பள்ளிகள், கோர்ட்கள் அனைத்தையும் பகிஷ்காரம் செய்யும்படிக் கோரினார். கூட்டத்திலிருந்த இளைஞர் ஒருவர், அந்தக்கணமே, வக்கீல் தொழிலுக்கு முழுக்குப் போட்டார். அது மட்டுமில்லை; தம் சட்டையை யும், கால் செருப்புகளையும் கூடக் கழற்றி எறிந்தார்!


என்.எஸ். வரதாச்சாரி என்ற அந்த இளைஞர் தான் பின்னாளில், சட்டையணியாத பழக்கத்துக் காக 'நோ ஷர்ட் வரதாச்சாரி' என்றே குறிப்பிடப் பட்டார்.

காந்திஜியைப் பின்பற்றி, என்.எஸ்.வி. பல் வேறு சத்தியாகிரகப் போராட்டங்களிலும் ஈடுபட்டு சிறைசென்றிருக்கிறார். மொத்தம் எட்டு ஆண்டுகள்!

டி.யு.சி.எஸ். நிர்வாகக் குழுவில் அவர் இடம் பெற்றிருந்தபோது, தாமே நேரடியாய் ரேஷன் கடைகளுக்குப் போய், விற்பனையில் தில்லுமுல்லு நடக்கிறதா, வாடிக்கையாளர்களுக்கு என்ன குறை என்றெல்லாம் விசாரித்து, அவற்றை நீக்க நடவடிக்கை எடுப்பார்.

இரண்டு முறை திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து, மக்கள் பணியாற்றி இருக்கிறார், இந்த காந்தி பக்தர்.

சந்திப்பு : **மௌலி**



தேசம் காத்தல் செய்

தங்கத்தைத் தின்று
தவிட்டுமுட்டை இடுகின்ற
அரசியல் வாத்துக்கள்
அதிகரித்து விட்டன

ஒரு "மாதிரி" தலைவனைத்
தேடினால்
"ஒருமாதிரி" தலைவர்களையே
தரிசிக்க முடிகிறது.

விலைவாசி உயர்வால்
விழிகள் பிதுங்குகின்றன
அரிசி வாங்குவது கூட
ஆடம்பரச் செலவாகிவிட்டது.

ஆடை விசயத்தில்
பழனி முருகனைப்
பின்பற்றினால் மட்டுமே
பிழைக்க முடியும்.

இந்த தேசத்தில்
வீடுகட்ட முடியாதவர்கள்
ஜன்னலையும் கதவையும்
ஜாக்கெட்டில் தைத்துச்
சந்தோஷப்படுகிறார்கள்.

பள்ளிக் கூடங்களில்
படித்துப் படித்துச்
சிறக்க வேண்டிய சிறுவர்கள்
பட்டாசுக் கூடங்களில்
வெடித்து வெடித்துச் சிதறுகிறார்கள்.

வீதியெங்கும்
சாதிமதப் பேய்கள்
சலங்கை கட்டி ஆடுகின்றன.

தேர்தல்களில் அதற்குத்
தீபாராதனையுடன்
திருப்பலி நடக்கிறது.

இது கலியுகமல்ல.
கிலியுகம்.

வாலிப வசந்தமே!
மறுபடியும் மகத்துவம்
இந்த மண்ணில்
உன்னால்தான் மலர வேண்டும்.

வானம்
மந்தமாயிருந்தால்
மழை வரும்.

மனிதர்கள்
மந்தமாயிருந்தால்
பிழை வரும்.

தேசம் தப்புப் பாதையில்
தவழ்கிறது
உப்புப் போட்டுத் தின்பவனால்
இதை
ஒப்புக் கொள்ள முடியாது.

உயிரில் உணர்ச்சி
உள்ளவர்க்கு
ஓர் அழைப்பு :

காட்டில் களையகற்றக்
குனியுங்கள்
நாட்டின் கறையகற்ற
நிமிருங்கள்.

சூரியதாஸ்



கலா - உலா

கோட் போட்ட ஆழ்வார்!



ஆழ்வார்

ஓவியர்களில் ஏ.வி. இளங்கோ கொஞ்சம் வித்தியாசமானவர். மெட்ராஸ் மெடிகல் காலேஜில் கணிதப் பேராசிரியராக இருந்து கொண்டே ஓவிய உலகிலும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர். அருமையான பேச்சாளர் கூட!

செவ்வாய்க்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் மாலையில் மூன்று மணி நேரத்துக்கு பெயிண்டிங் பயிற்சி அளிக்க இவர் ஒப்புக் கொண்டபோது, அவரிடம் நிறையவே பெண்கள் கற்றுக் கொள்ள வந்தார்கள்.

அவர்களில் சிலர் குறிப்பிடும்படி தேர்ச்சி பெற்றதும், "உங்கள் ஓவியங்களை எல்லாம் இனி ஒரு கண்காட்சியில் நீங்கள் வைக்கலாம்!" என்று பச்சை விளக்கு காட்டினார் இளங்கோ.

மயிலாப்பூர் லஸ் முனையில், பழைய புத்தகக் கடை வைத்திருக்கும் தாடிக்கார ஆழ்வாரை யாராவது மறக்க முடியுமா? சீதாவின் ஆழ்வார் போர்ட்ரெய்ட் தத்ரூபம். "செபியா வண்ணத்தில் வரையப் போகிறேன்" என்றதும் தலையில் எண்ணெய் போட்டு ஒதுக்கி, பழைய கோட்டையும் மாட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாராம் ஆழ்வார்! வரைய ஒரு மணி நேரம் ஆகியிருக்கிறது சீதாவுக்கு.

ஸ்வப்னாவின் ஓவியங்களில் வண்ணக் களியாட்டம். அதுவும் பளீர் பளீர் என்று. "எனக்கு வாட்டர் கலர் ஓவியங்கள்தாம் விருப்பம்!" என்கிறார் ஸ்வப்னா.

வசந்தி ராஜீவ்வின் ஓவியங்களிலும் வண்ணங்களின் வீச்சு இருக்கிறது. ஆனால் மிருதுவாக. இயற்கையின் துடிப்பு மிகுந்த. செடி கொடிகளின் ஒயிலாட்டம், ஓவியத்தில் துல்லியமாய்த் தெரிகிறது. வனத்தின் ஒரு கூறுதான் என்றாலும் கான்வாஸ் முழுக்க அதன் இருளும் ஒளியும் தெரிகின்றன.

இஷாவின் ஓவியங்கள், வேறு மாதிரி. என் மனசும் மூடும் எப்படி இருக்கிறதோ அதைப் பிரதிபலிக்கிற மாதிரி இருக்கும்!' என்கிறார். பனியாய் வெள்ளையும், மிருதுவான நீலமும் பெரும்பங்கு ஆக்ரமிக்க, கண்ணாடியில் வரைந்த மாதிரி ஒரு கிறிஸ்டல் போர்வை போர்த்திக் கொண்டிருக்கின்றன. சிவப்பு, சீறிப் பாயாமல் வெள்ளைக்கும் நீலத்துக்கும் ஒட்டியே தெரிகிறது. இவை எல்லாமே இணைந்திருப்பதில் தெரியும் மொத்த அழகே தனி.

தேஜோவின் வண்ணங்களில் பூவாணம் வெடித்துச் சிதறுகிற மாதிரி பூக்கள். மங்கலான பின்னணியில் இருந்தாலும் ஓவியத்தைப் பார்க்கிற போது ஓர் உற்சாகம் பீறிட்டு எழுகிற மாதிரி இருக்கிறது.

லட்சுமி ஸ்ரீநாத் அக்ரிலிக்கில் வரைகிறார். சற்றே தூக்கலாக, 3-டி மாதிரி. தொட்டு விடலாம் போல் தூண்டுகிற ஓவியங்கள்.

உமா தயாநிதியின் இலைகளும் மலர்களும், அசைந்தும் அசையாமல், உயிர்த் துடிப்போடு, சட்டங்களுக்குள் தெரிகின்றன. அவற்றின் வண்ணங்களோ வாட்டர் கலர். "எனக்கு இயற்கை மட்டுமல்ல, இலக்கியமும் தோழன்!" என்கிறார், இந்த முன்னாள் ஸ்டெல்லா மாரிஸ் மாணவி.

இந்த ஏழு பேரின் ஓவியங்களோடு, ரஜினி கிருஷ்ணனின் டெர்ரகோட்டா சிற்பங்களும் கவனத்தை ஈர்க்கின்றன. ரஜினி கலாட்சேத்திரா மாணவி. கலாசாகரம் ராஜகோபாலின் சிடர். குருவைப் போலவே, தமக்கும் அருணாசல மலையும், ஆன்மீகமும் தாக்கம் உண்டாக்கியிருப்பதைச் சொல்லுகிறார் ரஜினி.

சென்னை வெல்லூஸ் ஆர்ட் ஃபவுண்டேஷனில், இந்த எட்டுப் பெண்களின் கலைப் படைப்புகள் முதலில் ஈர்த்து, பிறகு யோசிக்க வைக்கின்றன - இந்தப் பெண்களின் மனசும் இவற்றில் வெளிப்பட்டிருக்கிறதோ என்று.

- சாருகேசி



"இந்த முறை பரீட்சையில் பாஸ் பண்ணினால் சைக்கிள் வாங்கித் தரேன்னு சொல்லியிருந்தேனே. ஏண்டா பாஸ் பண்ணலை?"

"உங்ககிட்டே சைக்கிள் வாங்க இப்ப பணம் இல்லைன்னு எனக்குத் தெரியும்பா."



"ஒரு பேனா வாங்கினா, ஒரு கர்சீப் இலவசம்னு சொன்னபோதே நினைச்சேன்."

"ஏன், என்ன ஆச்சு?"

"ஒழுகிற பேனாவை துடைக்க அந்த ஒரு கர்சீப் போதலை."



"என்ன இருந்தாலும் தலைவர் இப்படிப் பேசி இருக்கக் கூடாது."

"என்ன பேசினார்?"

"நம் தலைவர் மழைக்காக ஒதுங்கக் கூட ஸ்கூல் பக்கம் போனதில்லைன்னு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுக்கு, என்ன செய்யறது ஸ்கூலில் கூரை கிடையாதேன்னு பேசியிருக்கார்."

வெ. ராஜாராமன்

பிரபஞ்சன்

தொட்டிலில் இருந்த குழந்தை சிணுங்கியது.

அடுப்படியில் அம்மாவுக்கு உதவியாக கைவேலை பார்த்துக் கொண்டிருந்த அனு, குழந்தை விழித்துக் கொண்டதை அறிந்து கொண்டாள். எத்தவத்தைச் செய்தாலும், எந்த அவஸ்தைப்பட்டாலும் முத்தர் மனம் மோனத்தில் இருக்கும் என்பது மாதிரி, பெற்றவளின் மனமும் போலும். சரட்டென்று எழுந்து அறைக்குத் திரும்பினாள். மிதமான ஃபேன் காற்றுக்குக் கீழே, போட்டிருந்த தொட்டிலில், குழந்தை விழித்துக் கொண்டு, கொட்டக் கொட்ட, கிளிப் பொம்மையைப் பார்த்தபடி இருந்தது.

"என்னடா உறக்கம் கலைஞ்சுடுத்தா? பாப் பாவுக்குப் பசிக்குதா?" என்றபடி குழந்தையை எடுத்துக்கொண்டு தோள் மேல் சார்த்திக் கொண்டாள் அனு. அது 'ஈஈ' என்றது. குழந்தை சமர்த்துதான். சீக்கிரமே, முகம் அடையாளம் கண்டுபிடித்து விட்டது. நனைந்த தொட்டித் துணியை மாற்றினாள்.

அறைக் கதவைச் சாத்திக் கொண்டு, சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். குழந்தை பால் உண்ணத் தொடங்கியது. சுருள் சுருளாக நெற்றியில் வந்து விழும் தலைமுடியைக் கோதிவிட்டு ஒழுங்கு செய்தாள். குழந்தை, ஒரு கையை அவளை நோக்கி உயர்த்தியது. நீட்டிய அந்தக் கைக்கு முத்தம் தந்தாள், அனு. குழந்தை சிரித்தது. வாயில் இருந்த பால், கன்னம், கழுத்து என்று வழிந்தது.

"பா... பார்... ரொம்பவும் படுத்தறே, என்னை" என்று செல்லமாகக் கடித்து கொண்டாள் அனு. பேச்சு சப்தம் கேட்டு, கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள், அனுவின் அம்மா.

"என்ன முழிச்சுக்கிட்டாளா?" என்றபடி, குழந்தை நனைத்த துணியை எடுத்துக் கொண்டு திரும்பினாள். குழந்தை, திரும்பி பாட்டியைப் பார்த்துச் சிரித்தது.

"சிரிப்பைப் பாரேன், சிரிப்பை. சதா சிரிச்சுட்டு... உன்னையே உரிச்சு வச்சிருக்கடி... நீயும் பொறந்தப்போ, இப்படித்தான் இருந்தே. ராத்திரியில நான் நல்லா உறங்கிடுவேன். நீ பாட்டுக்கு முழிச்சுக்கிட்டு விளையாடிட்டு இருப்பே... உன் அப்பா பார்த்தார்னா, என்னை எழுப்புவார். சில குழந்தைகள் மாதிரி, பகல் முழுக்கத் தூங்கி, ராத்திரி முழுக்க முழிச்சுட்டு தொந்தரை படுத்தலை, நீ..."

குழந்தை சிவந்த வாயால் சிரித்துக் கொண்டு, இரண்டு கைகளையும் அவளை நோக்கி உயர்த்தியது.

"கார்த்தி... நீயாவது இப்படி சிரிச்சுட்டு, கலகலன்னு இரு. உன் அப்பன் மாதிரி, உம்மணாமூஞ்சியாக இருந்துராதே...'

குழந்தை அதற்கும் சிரித்தது.

கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த காரணத்தால், கார்த்திகா என்று பெயர் சூட்டினார்கள். கார்த்தி, அனுவின் பாட்டி மாதிரி இருக்கிறதாக, அவள் அம்மாவுக்கு அபிப்பிராயம். தன்னைப் போல இருப்பதாக அனு மட்டும்



திடமாக நம்பினாள்.

'கார்த்தி யாரைப் போல் இருக்கிறான்' என்று சபேசனைக் கேட்டாள் அனு.

''யாரைப் போல இருந்தால் என்ன? குழந்தை ஆரோக்கியமாக இருக்கணும். அவ்வளவுதான்'' என்றான் அவன் வழக்கம் போல. இந்த விட்டேத்தியான பதில், அனுவுக்கு எரிச்சல் தந்தது.

அவன் பக்கத்தில் இல்லாதபோது, அனு அம்மாவிடம் சொன்னாள்.

''பார்த்தியாமா... எப்படிப் பேசறார்னு?''

''அந்த ஆளு கிடக்கார். அது சுபாவமே

பூக்கள் நாளையும் மலரும் 20



இப்படித்தானே?''

குழந்தை பிறந்த மறு மாதமே, அனு தன் அம்மா வீட்டுக்கு வந்து விட்டாள். ஆறு மாசம், அம்மா வீட்டில் தங்கி இருந்து, உடம்பைத் தேற்றிக் கொண்டு திரும்புவது என்று அவள் திட்டமிட்டு இருந்தாள். சபேசனைக் கேட்டாள்.

''என்ன அவசரம், இருந்து விட்டு வாயேன்'' என்றான் அவன்.

குழந்தை, அவனை மிகவும் கிளர்த்தி விட்டது. அற்புதம் என்பதும், அதிசயம் என்பதும் ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் குழந்தைகள் உருவத்தில் இருப்பதை மனிதகுலம் அவதானித்து இருக்கிறதா என்று அவனுக்குத் தோன்றியது. மனிதர்களால், மிகச் சுலபமாக வருவித்துக் கொள்ள முடிவதாலும், அது அவர்கள் அருகிலேயே கிடப்பதாலும், குழந்தையைப் பற்றி ஆச்சர்யம் கொள்வார் இல்லாமல்தான் போய்க் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் விட குழந்தைக்கு முகம் அமைகிற விந்தை. அம்மாவை, அப்பனை உரித்து வைத்திருக்கிறது என்கிறார்கள். பெண்ணின் கருப்பைக்குள் இருந்து கொண்டு, குழந்தைக்கு முகமும் அகமும் தருகிற அந்தச் சிற்பி யார்?

சபேசன் சொல்வதைக் கேட்டு பிந்து சிரித்தான். அவர்கள் எப்படி இருக்கிறார்

கள் என்று கேட்டுப் போக வந்திருந்தான்.

"அனுவும் குழந்தை கார்த்திகாவும் நலம்" என்றான் சபேசன்.

"சாப்பாடு எல்லாம் எப்படி நடக்கிறது, சார்!"

"ஓட்டல். சமயங்களில் நானே சமைத்துக் கொள்கிறேன். எனக்கு இது பழக்கம்தானே?"

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா, எப்போ வேணாலும் என் வீட்டுக்கு வரலாம். சாப்பிடலாம்."

"ரொம்ப நன்றிங்க. பொதுவா சாப்பாட்டுக்கு நான் ரொம்ப முக்கியத்துவம் தர்றது இல்லை."

"சாப்பாட்டுக்கு மட்டும்தானா? பொதுவாக மனுஷர்கள், எதிலெல்லாம் தீவிரமாக இருப்பார்களோ, அதிலெல்லாம் நீங்கள் மிதமாகவே இருக்கிறீர்கள். உதாரணத்துக்கு, பணம் சேர்க்கிற காரியத்தில்..."

சபேசன் சிரித்தான்.

"இந்த விஷயத்தில், எனக்கும் அனுவுக்கும் கருத்து வித்தியாசமே கூட உண்டு."

"தெரியும். அனுவே சொல்லி இருக்கு. எனக்கு உங்க மேல, அதனால்தான் மரியாதை. எனக்கு மட்டுமல்ல, வள்ளிக்கும்."

அவன் அமைதியாக இருந்துவிட்டுச் சொன்னான்.

"எனக்கும் பணத் தேவை இருக்கு. ஆனா, அது என் உழைப்பாலும், சிக்கனத்தாலும் வரணும்னு நினைக்கிறேன்."

"ஆனா, பணம் உழைப்பாலே வர்றது இல்லைன்னு மக்கள் நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க. முறை இல்லாத வழியில வர்றதுதான் பணம்னு ஆயிடுச்சு. சமூகத்துல பெரியவங்கன்னு சொல்லப்படற எல்லோர்கிட்டேயும் கள்ளப் பணம் இருக்கு. கள்ளப் பணம், குற்றம்னு சட்டம் சொல்லுது. கள்ளப்பணம் வச்சிருக்கிறவர்கள், இந்த அரசுகளை இயக்குகிறவர்களாகவும் இருக்காங்க. மக்களுக்கு, திருட்டு, ஊழல், எல்லாம் பெரிய விஷயமாவே படலை. சமூகத்துல, 'அறம்' மதிக்கப்படாமே போறதுதான் பெரிய ஆபத்து. இதை யாரும் உணர்றதா எனக்குத் தெரியலை."

சபேசன், அவளை அமரவைத்து விட்டு, சமையல் அறைக்குள் சென்று, சில நிமிடங்களில் தேநீரோடு திரும்பினான்.

"டீ அருமையா இருக்கு" என்றாள் பிந்து.

"நான் ரொம்ப நல்லா சமைப்பேன். அது கிடக்கட்டும். நீங்க சொன்னது போல, சமூக ஒழுக்கம் கெட்டுப் போயிருக்கு. அதுதான் ரொம்ப ஆபத்து. எங்க ஆபீஸ்லே, என்னைப் போன்ற ஒன்றிரண்டு ஆபீசர்களை, 'மிஸ் ஃபிட்'டுன்னு சொல்லி ஒதுக்கி வச்சிருக்காங்க. நாங்க லஞ்சம் வாங்கலை. அதுதான் நாங்க செய்த குற்றம்."

"இது எப்படி மாறும், சபேசன் சார்?"

"வாழ்க்கை, பணபயம் இல்லாமே இருக்கணும். வயசான காலத்துல, என்ன பண்றதுன்னு பயம். நோய் நொடி வந்தா என்ன பண்றதுன்னு பயம். புதுசு புதுசா வர்ற ஆடம்பரப் பொருளையெல்லாம் வாங்க முடியல்லேங்கற பயம். புதுசு புதுசா நகைகளும், புடைவைகளும் கொடுக்கலைன்னா மனைவி, மனசு மாறிடுமோன்னு பயம். எத்தனை பயங்களோட வாழ வேண்டி இருக்கு. இந்த பயம் தான், தப்பு வழியைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுது."

"ஒரு விஷயம் தெரியுமா, சபேசன் சார்... அர்த்தநாரியோட மனைவி வள்ளிக்கு இந்தப் பிரச்னை இருக்கு. வள்ளிக்கு, அவள் கணவரோட அந்தப் போக்கு பிடிக்கலை."

"ஆனா சமூகம், அர்த்தநாரியைப் போன்றவர்களைத்தான், வெற்றி பெற்றவர்கள்னு நினைக்குது."

"ஆனா, அவர் மனைவி நினைக்கலையே."

"அது பெரிய விஷயம். எனக்கும் அனுவுக்கும் உள்ள பிரச்னையே பேராசைக்கும், ஆசைக்கும் உள்ள பிரச்னை. அர்த்தநாரிக்கும் வள்ளிக்கும் உள்ள பிரச்னை, நியாயத்துக்கும் அநியாயத்துக்குமான பிரச்னை."

"கார்த்திகா வந்திருக்கா. உங்க ரெண்டு பேர் பிரச்னைக்கும் ஒரு தீர்வு கிடைக்கும்."

சபேசன், மகிழ்ச்சியுடன் சிரித்தான்.

"அப்படியே ஆகட்டும்" என்றான். தொடர்ந்து, "நாளை இரவு அனுவைப் பார்க்கப் போகிறேன். வாருங்களேன். போய் வருவோம். வருவதாக இருந்தால், உங்களுக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கிடுறேன்."

பிந்து யோசித்துவிட்டுச் சொன்னாள்.

"வள்ளியும், ஜானு மாமியும் கூட பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள்."

ஜெர்மன் நாடகாசிரியரும் கவிஞருமான கெதே, காதலிப்பதைக் கலையாகப் பயின்றிருந்தார். எந்தப் பெண்ணையும் கவரக்கூடியதாக அவருடைய கம்பீரமான தோற்றம் இருந்தது. சுமார் 200 பெண்களை அவர் காதலித்திருக்கிறார்.

– ஆதாரம்: 'சுவையான செய்திகள்'

தகவல்: செ. மலர்விழி



"அவங்களுக்கும் சேர்த்தே வாங்கிடுறேன்."

வள்ளி எதற்காகத் தன்னைப் பார்க்க வரவேண்டும்? ஜனனிக்குத் திகைப்பாக இருந்தது. கோண்டு விஷயத்தைச் சொன்னதும், ஆல்பர்ட்டோடு வள்ளியின் ஃபிளாட்டுக்குப் புறப்பட்டாள்.

மாலைக் காற்று வந்து விட்டிருந்தது. உலகம் சந்தோஷமாக இருக்கிறதாக அவளுக்குத் தோன்றியது. ஏனெனில், அவள் சந்தோஷமாக இருந்தாள். அனுமார் கோவிலுக்கு முன் சிறு கூட்டம். சாத்துபடி நடக்கிறது போலும். அனுமார், சாத்துகிறதையெல்லாம் தின்கிறவர். என்றால், கண்டிப்பாக அவருக்கு அஜீரணக் கோளாறே ஏற்படும். ஜனங்களுக்கு பிரச்னைகள் கூடக் கூடச் சமயம், சடங்குகள், வழிபாடுகள் கூடும் போலும்.

ராஜி, பிரசாதத் தட்டத்தோடு அவர்களை எதிர்ப்பட்டாள்.

"என்னக்கா. வேண்டுதலையா?" என்றாள் ஜனனி.

"ஆமாம். இவர், அந்தப் பீடையின் விடேகதின்னு இடக்கிறாரே. தெய்வமாவது கேட்கட்டும்னுதான்..." என்று கவலையோடு சொல்லிவிட்டு நகர்ந்தாள், ராஜி.

ஆல்பர்ட் மெதுவாக, "என்ன பிரச்னை?" என்றான்.

"ராஜிக்கா புருஷன், வேறு ஒருத்தியோட வாழ்ந்துகிட்டு இருக்கார். இவங்ககிட்டே கொண்டாந்து சேர்க்கணும்னு, அனுமாரைக் கேட்டுக்கிறாங்க."

"பாவம், அனுமார். இராமாயண காலத்திலேந்து அவருக்கு இதே வேலை."

"உஸ். இது மாதிரியெல்லாம் பேசக் கூடாது."

அவர்கள், வள்ளியின் வீட்டுக்கு முன்வந்து நின்றார்கள்.

"ஆல்பர்ட்... வள்ளியக்கா ஏதானும் அந்தரங்கமா பேசக்கூடும். நீ இருக்கிறது, நாகரீகமா இருக்காது. அப்புறமா சந்திக்கலாம்."

ஆல்பர்ட்டை அனுப்பி வைத்துவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தாள் ஜனனி.

ஹாலில், எழுதி முடிக்கப்படாத சித்திரமாக அமர்ந்திருந்தாள் வள்ளி. அவள் அருகில் சென்று, அவள் தோளைத் தொட்டு, 'என்னக்கா' என்றாள் ஜனனி. வள்ளி, இவளைப் பார்த்ததும் உடைந்து போனாள். உடனடியாக, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"சாரி, ஜனனி. உன்னைத் தொந்தரவு பண்ணிட்டேன்."

ஜனனி, வள்ளியின் பக்கத்தில் அமர்ந்தாள்.

"என்னக்கா... என்ன நடந்துச்சி?"

வள்ளி, கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்.



இலங்கையில் ஆயிர வைசியர் எனும் தமிழ் சமூகத்தினர் வாழ்கின்றனர். இவர்களது வம்சத்தில் பிறந்தவள்தான் கண்ணகி. இவர்கள் கொழும்பு நகர் மருதானை பகுதியில் கண்ணகிக்கு தனிக் கோயில் கட்டியுள்ளனர். இக் கோயில் தேர் வடிவில் சென்னை வள்ளுவர் கோட்ட அமைப்பில் உள்ளது.

கண்ணகி அபயகரத்துடன் அருள்பாலிக்கும் வடிவில் நிற்கிறாள். சிலையின் பின்புறம் சிலம்பு வடிவ திருவாட்சி. தீ ஜுவாலையில் நிற்பது போல் பீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சிலை எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் சுவாமிமலை சிற்பி தேவ சேனாபதி உருவாக்கியது.

— பிரசன்னகுமார்

"ஒன்றுமில்லை, ஜனனி. எங்க ஆபீஸ் முதலாளி சண்முகம் என்னைப் பார்க்க வந்திருந்தார். வேலைக்கு வரச் சொல்லி கேட்கத்தான் வந்திருந்தார். யோசிக்கிறேன்னு சொன்னேன். அந்த நேரத்துல அர்த்தநாரி வந்துட்டார். சண்முகத்தோட நல்லாத்தான் பேசி அனுப்பினார். பின்னால்தான், என்னமோ தத்துப் பித்துன்னு பேசினார். எனக்கு மனசு தாங்கலை. யாரையாவது பார்த்துப் பேசணும்னு தோணிச்சு. யாரும் கிடைக்கலை. பிந்துக்காவும் இல்லை. மாமியும் இல்லை. நீயாவது கிடைப்பியோன்னு பார்த்தேன். சும்மாத்தான். யார்கிட்டையாவது சொல்லி அழணும்னு தோணிச்சி, ஜனனி. சாரி. உணர்ச்சிவசப்பட்டு உனக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன்."

"இல்லைக்கா. இல்லவே இல்லை. நீங்களே ரொம்ப 'டிக்னிட்டி' பார்க்கிறவங்க. நீங்களே தளர்ந்தீங்கன்னா, விஷயம் எவ்வளவு கடுமைன்னு எனக்குப் புரியுது..."

"எதை, நாம் ரொம்ப உசந்த விஷயம்னு நினைக்கிறோமோ, அதையே கேள்விக்குறியாக்கினா? அதுதான் தாங்கலை."

"மிஸ்டர் அர்த்தநாரி என்னதான் சொல்

றார்?"

"வேலை வேணாம். சும்மா வீட்டுல கிடங்கறார்."

"என்ன செய்யப் போறீங்க?"

"நான் போகத்தான் போறேன்."

"சபாஷ். இந்த சுதந்திரம் கூட இல்லைன்னா, அப்புறம் என்னக்கா இருக்கு?"

"மரியாதை வேறே. இழிவு செய்யறது வேறே. மரியாதை இல்லாமே இருந்திடலாம். இழிவைத் தாங்கிட்டு எப்படி இருக்க முடியும். அது கிடக்கட்டும். ஆல்பர்ட் அக்கா என்ன சொன்னாங்க?"

"பதிவுத் திருமணம் பண்ணிக்கலாம்னு முடிவெடுத்து இருக்கிறோம். வரவேற்புக்கும் நாள் குறிச்சாச்சு."

"ரொம்ப சந்தோஷம்."

"அர்த்தநாரி எங்கே?"

"நேற்று இரவு வீடு திரும்பலை. எங்க தங்கி இருக்காருன்னு தெரியலை."

"அந்த அளவுக்குச் சண்டை முத்திடுச்சா?"

"வார்த்தை கடுமையா பிரயோகம் ஆயி டுச்சு. அது அவருக்கே உறுத்துது. அதனாலே, விலகி இருக்காரு..."

"நீங்க அழைக்கணும்னு நினைக்கலையா?"

"இல்லை, ஜனனி. நாங்க கொஞ்ச நாள் இப்படி இருக்கிறது நல்லது. எங்கள் இரண்டு பேருக்கும் இடையிலும் கண்ணுக்குத் தெரியாத திரை விழுந்துடுச்சு. அவரது வாழ்க்கை முறை, பணம் சம்பாதிக்கும் முறை, ரொம்ப இழிவானதுன்னு அவருக்கே தெரியுது. அதை. நான் அங்கீகரிச்சா, அவருக்கு அது பாரமா இருந்திருக்காது. அதை நான் அங்கீகரிக்கலை. அதனாலே, அவர் மேலேயே அவருக்குத் தன்னிரக்கம். இந்தக் குணம் உள்ள ஆம்பிளைகள் தங்கள் கோபத்தை அடங்கிப் போகிறவர்கள்கிட்டேதானே காண்பிக்க முடியும்? மனைவிகள் கிட்டேதான், பொதுவா தங்கள் அதிகாரங்களை அமல்படுத்துவாங்க. தேமேன்னு அடங்கிப் போகிற அப்பாவிப் பெண், நான் இல்லை. அந்த எரிச்சல். இந்த மாதிரி எரிச்சல், ரொம்பவும் பழசைத் துருவித் துருவித் தேடி பழிசுமத்தும். எங்களுக்குக் குழந்தை இல்லை, அல்லவா? இப்போ, அது பிரச்னை ஆகி இருக்கு. உண்மையில, குடும்பம்னா, கட்டாயமா குழந்தை இருக்கணும்கிற விதி இல்லை. ஒரு ஆணும் பெண்ணும் இணையறதுதான் குடும்பம். அதன் பின்விளைவுதான் குழந்தை. அது ஒரு குறைன்னா, ஏதாவது ஒரு அனாதை மடத்திலேந்து, ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்க முடியும். யோசிச்சா, எந்தப் பிரச்னைக்கும் அழகான தீர்வை நமக்கு வழங்கிக்கலாம். அது, 'பாசிட்டிவ்' அணுகு முறை. ஆனா, மூர்க்கமும் கோபமும் அந்த இடத்துக்கே போறது இல்லையே! என்னை அவர் சகிச்சுக்கிட்டு இருக்கிறதா, சொல்றார். ஒரு கூரைக்குக் கீழே வாழ நேர்கிற எந்த இரண்டு பேரும், ஒருத்தரை ஒருத்தர் சகிச்சுக்கிட்டுதான் வாழ வேண்டி இருக்கு. மொத்தமா, ஒரு செடியை எங்கேயோ பிடுங்கி, புதுசா ஒரு மண்ணுல வாழச் சொல்றதுதானே, குடும்பம்! இதுல, சகிப்புத்தன்மை இல்லாமே எதுதான் சாத்தியம்? கொஞ்ச நாள் பிரிஞ்சு இருக்கலாம்னு நினைக்கிறேன். யோசிப்போம். ஏதாவது ஒரு ஹாஸ்டல்லே தங்கி இருக்கப் போறேன். ஆறு மாசம் இப்படி இருப்போம். அதுக்கும் மேலே முடியும்னா, காதல் மிச்சம் இருந்தா, சேர்ந்து வாழலாம். இல்லைன்னா, கௌரவமா பிரிஞ்சுடலாம். இதுதான் என் முடிவு."

"என்னக்கா இது?"

ஜனனி வருந்தினாள்.

"சின்னப் பெண் நீ. உன்கிட்டே இத்தனை பேசணுமான்னு இருந்துச்சு. ஆனாலும், யார்தான் பெரியவங்க? யார் சின்னவங்க? நெருப்புல சின்னது, பெரிசு இருக்கா. இல்லையே. அதனால, கொட்டிட்டேன்."

ஜனனி அமைதியாக இருந்தாள்.

"பிந்துக்கா என்ன சொன்னாங்க?"

"கொஞ்சம் ஆறப் போடச் சொன்னாங்க. கோபத்துல எடுக்கிற முடிவு சரி இல்லேன்னாங்க."

"தள்ளிப் போடுங்கக்கா."

"இல்லே, ஜனனி. நாளைக்கு இந்தக் காலனியிலே நான் இருக்கிறதா இல்லை. உன்கிட்டே விடைபெறணும்னுதான் வரச் சொன்னேன்..."


ஜனனி, ஒன்றும் பேசத் தோன்றாமல் அமர்ந்திருந்தாள்.


(தொடரும்)

"ஏன்யா லாரியை காம்பவுண்டு சுவர் மேலே இடிச்சே?"

"உங்க போர்டை பார்த்துட்டுத் தான்...!"

–கே. அனிதா





குடவாசல் வட்டம் சற்குணேஸ்வரம் என்கிற கருவேலி அருள்மிகு சர்வாங்க நாயகி உடனாய அருள்மிகு சற்குணேஸ்வர சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட குழலார் சுழலில்வலைப்
பட்டிட்டு மயங்கிப் பிரியாது நீர்
கட்டிட்ட வினைபோகக் கருவிலி
கொட்டிட்டை யுறைவான் கழல்கூடுமே

— அப்பர்

அன்புடையீர்!

ஆன்மீகத்தின் விளைவிடமாகிய சோழ வள நாட்டின் காவிரியின் தென் கரையில் பாடல் பெற்ற ஸ்தலமாகும் கருவிலி கொட்டிட்டை என்ற கருவேலி. இத்தலம் வடகிழக்கே திருநல்லம் எனும் கோனேரி ராஜபுரமும் கிழக்கில் திருவீழிமிழலையும் தெற்கில் திருவாஞ்சியமும் மேற்கில் திருநறையூர் சித்தீச்சரமும் கொண்ட தலங்களில் மையமாக அமைந்து வினைகளை அறுக்கும் தலமாக அரசலாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. நீர்வளமும் நிலவளமும் கொண்ட கருவேலியின் மேற்கு எல்லையில் அமைந்து அருள்பாலித்து வருகிறது. இப் புண்ணியதலத்தினை சற்குண ராஜனால் திருப்பணி செய்விக்கப்பட்டதால் சற்குணேஸ்வரம் என்றும் பெயர் பெற்ற பழம்பதி. இந்திரன் பூஜித்து பேறு பெற்ற ஸ்தலம். உருத்திர கணங்கள் பூஜித்ததாக தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது.

இம்மாபெரும் ஆலயம் காலவெள்ளத்தினால் சிதலமுற்று இருந்ததை கருவேலி பிரபல மிராசுதாரர் குழந்தை அய்யர் என அழைக்கப்படும் ராமய்யர் அவர்கள் சந்ததியினரின் பெரும் முயற்சியால் செப்பமுற திருப்பணி செய்து அனைத்து மடாதிபதிகளின் ஆசியுடன் நாளது தாது வருஷ பங்குனி மாதம் 14ம் தேதி (27.3.97) வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் காலை 9.15 மணிக்கு மேல் 10.45 மணிக்குள் ரிஷப லக்னத்தில் ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும். அனைவரும் வந்து தரிசித்து பேறனைத்தும் பெற்றுய்ய பெரிதும் பிரார்த்திக்கிறோம்.

அவ்வண்ணம் கோரும்
K. இராஜகோபால், B.Sc.
செயல் அலுவலர்

இவ்வண்ணம்
தெய்வத் திருப்பணியில்
கிராமவாசிகள்

குறிப்பு : **கருவேலி, கும்பகோணம் - பூந்தோட்டம் பேருந்து சாலையில் கூந்தலூருக்கு வடக்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது.**

பல்லாவரத்தில் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு ரவி தன் மனைவியுடன் ஹீரோ ஹோண்டாவில் கிண்டி நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"என்னங்க...?" என்று இழுத் தாள் நிர்மலா.

"என்ன?" என்று சற்று கடுகடுப்பாய்க் கேட்டான் ரவி.

"வந்து.... இங்க போயிட்டு வரலாமா?"

"இங்கன்னா, எங்க? ஒரு விஷயத்தை உனக்கு ஒழுங்கா சொல்லத் தெரியாது" அலுத்துக் கொண்டான்.

"வந்து... எங்க அண்ணி ஆபீஸ், போற வழியில்தானே இருக்கு. அப்படியே தலையை காட்டிட்டுப் போலாமா?"

"உங்க அண்ணியைத்தான் வாரா வாரம் அவங்க வீட்டில் பார்க்கறயே. இங்க வேற ஆபீஸ்ல ஸ்பெஷலா பார்க் கணுமா?"

"அதில்லீங்க. அண்ணி ஆபீஸ்ல வேலை செய்யறவங்க எல்லாம் எனக்குத் தெரிஞ்சவங்க. கல்யாணத்துக்கு அப்புறம் அவங்களை எல்லாம் பாக்கவே இல்லீங்க. இப்பப் போனா சந்தோஷப்படுவாங்க."

ஆமாம், இந்த மௌடீகத்தைப் பார்க்கவில்லை என்று யார்தான் தவிப்பார்கள்? மனசுக்குள் பொரு மிக் கொண்டான் ரவி.

ரவிக்கும் நிர்மலாவுக்கும் திருமணமாகி ஒரு மாதம் தான் ஆகிறது.

ரவி ஓரளவு விஷய ஞானம் உள்ளவன். ஏராளமான பத்திரிகைகள், புத்தகங்கள் ஊன்றிப் படிப்பவன். அவ்வப் போது கதை, கவிதைகள் எழுதுபவன். இதற்கு நேர்மாறாய் இருப்பவள் நிர்மலா. பத்திரிகைகளை தொட்டுக் கூடப் பார்க்கமாட்டாள்.

விஷயஞானம் உள்ளவர்களைப் பார்த்தால் மணிக் கணக்கில் பேசுவான் ரவி.

நிர்மலாவோ, 'சாப்பிடறீங்களா...?' போன்ற ஓரிரு அத் தியாவசியமான வார்த்தைகளைத் தவிர வேறொன்றும் இந்த ஒரு மாதத்தில் அவனிடத்தில் பேசியதில்லை.

ரவியே இவளை மாற்ற வேண்டுமென்று மிகுந்த பிரயாசையுடன் அரசியல், இலக்கியம் ஏதாவது பேசத் தொடங்கினால், அடுப்பில் வாணலியைப் போட்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு சமை யலறையில் புகுந்து விடுவாள்.



இப்படிப்பட்டவள் அவள் அண்ணி விமலா வேலை செய்யும் இந்தியன் ஏர்லைன்ஸ் பெர்சனல் டிபார்ட் மென்டில் நுழைந்து எல்லா ஆபீசர்களை யும் பார்க்க வேண்டு மென்று ஆசைப்பட் டது ரவிக்கு மகா வினோதமாக இருந் தது.

இருந்தாலும் புது மனைவியின் ஆசையை நிறை வேற்றுவது தனது கடமை என்று

இவளா இப்படி!

பாரதி சந்திரன்

எண்ணி ஒப்புக் கொண்டான்.

செக்யூரிடியிடம் சொல்லிவிட்டு இருவரும் பெர்சனல் டிபார்ட்மென்டில் நுழைந்தார்கள்.

நிர்மலாவின் அண்ணி விமலா ஓடிவந்து வரவேற்றாள். எல்லோரிடமும் ரவியை அறிமுகம் செய்து வைத்தாள். முக்கால்வாசி பெண்கள்தான் அந்தத் துறையில் இருந்தார்கள்.

'இவர்தான் அஸிஸ்டெண்ட் மானேஜர் இந்திரா, இவர்கள் சீனியர் ஆபீசர் புவனா, இவர்கள் இந்தி மேடம் உமா, இவர்கள் ஜெனரல் மானேஜரின் பி.ஏ. கரோலின்' என்று பலரும் அவனிடம் அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்கள்.

இப்போதுதான் முதன் முறையாய் அவர்களைப் பார்க்கிறான் ரவி. ஆனால் அவர்களோ, பலநாள் பழகிய குடும்ப நண்பனைப் போல் எடுத்துக் கொண்டு விசாரித்தார்கள்.

ஏறக்குறைய ஒரு பிரபல எழுத்தாளரை மதிப்பது போலத் தன்னைப் பாவித்து அவர்கள் பேசியது அவனுக்கு மகா ஆச்சரியமாக இருந்தது.

இத்தனைக்கும் அவன் எழுதி ஏதோ ஓரிரு கதைகளும், சில கவிதைகளும்தான் வெளிவந்துள்ளன. ஆனால் அத்தனையையும் தன் மனைவியின் அண்ணி அவர்களிடம் காட்டி, தன்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான்.

இதையெல்லாம் விட ரவிக்கு மிகுந்த ஆச்சரியம் அளித்த விஷயம், அவன் மனைவி நிர்மலா அந்தச் சூழ்நிலையில் அடியோடு மாறிப் போயிருந்ததுதான்.

நிர்மலா அவர்களிடம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தாள். பெரிய ஆபீசர்களிடம் எல்லாம் சர்வசகஜமாக கிண்டலடித்துப் பேசினாள்.

அவர்களும் தம் சொந்தத் தங்கையே தன்னைத் தேடி வந்து விட்டதைப் போல் அவளைக் குசலம் விசாரித்துக் கொண்டு நிர்மலாவிடம் வெகு இனிமையாகப் பேசினார்கள்.

வீட்டில் எதுவும் பேசத் தெரியாதவள் போல் இருக்கும் இந்த நிர்மலா இங்கே மட்டும் இவர்களிடம் எப்படி இந்தப் போடு போடுகிறாள்? இவ்வளவு பெரிய ஆபீசர்கள் இந்த ஒன்றும் தெரியாத நிர்மலாவிடம் எப்படி இவ்வளவு சகஜமாகப் பேசுகிறார்கள்?

ரவி வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தான்

கடைசியாக அவர்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது, நிர்மலாவின் மீது உயிரையே வைத்துக் கொண்டிருக்கும் அவள் அண்ணி விமலா வாயில் வரை வந்து வழியனுப்ப வந்தாள்.

ரவியால் சும்மா இருக்க முடியவில்லை. வாய் விட்டு அவள் அண்ணியிடம் கேட்டு விட்டான்.

''என்னங்க, எனக்கு ஒரே ஆச்சரியமா இருக்கு. வீட்டில் என்கிட்ட நிர்மலா ஒண்ணும் பேச மாட்டேங்கறா! இங்க வந்தா இவ்வளவு பேசறாளே!''

விமலா நிதானமாய் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா சில விஷயங்களை நான் ஓபனா பேசறேன். நிர்மலா அன்புக்காக ஏங்கற பொண்ணு. அவளுக்குப் பல உலக விஷயங்கள் தெரியாதுங்கறது நிஜம்தான். ஆனா, அதுக்காக அவளைப் புறக்கணிக்காம அவளையும் மனுஷியா மதிச்சு அன்பா பேசறவங்ககிட்ட அவ நல்லா கலகலப்பா பேசுவா.''

ரவிக்கு மனத்தில் என்னவோ பளிச்சிட்டது. தன் மனைவி எதுவும் தெரியாதவள் என்று தான் அவளைப் புறக்கணிப்பது தான் நிர்மலாவைத் தன்னிடம் பேச விடாமல் தடுக்கிறதா?


நிர்மலாவின் அண்ணி மேலும் தொடர்ந்தாள்.

''அரசியல், இலக்கியம் மட்டுமே மனிதர்கள் பேசக்கூடிய முக்கிய விஷயங்கள்னு தயவு செய்து நினைக்காதீங்க. நடைமுறை வாழ்க்கை விஷயங்கள் எவ்வளவோ நீங்க பேசலாம். அவளும் உங்களிடம் நல்லா பேசுவா. மனிதர்கள் உறவாட விஷய ஞானம் தேவை இல்லை. அன்புதான் தேவை.''

ரவி, தனக்குள் புதிய ஊற்றுக்கண் திறந்தது போல் உணர்ந்தான்.

சிரித்துச் சிரித்து சிறையிலிடுங்கள்













கேஸ் துவங்கும் போது
அதோ நடந்து போறாரே! அவர் தான் நம்ம வக்கீல
கேஸ் முடிகிற போது!
அதோ நடந்து போறாரே! அவர் தான் நம்ம கட்சிக் காரர்
பிக் பாக்கெட் குற்றத்துக்காக ரூபாய் நூறு அபராதம்
ஒரு அஞ்சு நிமிஷம் டயம் குடுங்க! ஒரு ரவுண்டு வெளியே போயி வந்து அபராத பணத்தைக் கட்டிடறேன்
வெறுமனே நீதிபதி அவர்களென்று சொன்னா போதும்; பட்டி மன்றங்களில் நடுவருக்கு ஐஸ் வைக்கிறது போல பேசக் கூடாது தெரியுதா?
பக்கத்து கோர்ட் நீதிபதி, ஏன் இந்த சாட்சி கூண்டுல நிக்கிறாரு?
அவங்க கோர்ட்டுல நடந்த ரௌடி கொலைக்கு சாட்சி சொல்லத் தான்
கருத்து: ஜீலி
படம்: செல்லம்

புரட்சிக் கொள்கை த.பெ.உ!

தகவல்பெறும் உரிமையை மக்களுக்குக் கலைஞர் வழங்குகிறார் என்று பட்ஜெட் உரையில் படித்ததுமே என் மனசு துள்ளியது.

அமெரிக்காவில் வாட்டர்கேட் ஊழலுக்குப் பிறகு நடந்த ஒரு மகத்தான மாறுதல்தான் இந்தத் தகவல்பெறும் உரிமை. அதாவது ராணுவம், தேசப்பாதுகாப்பு, ஒற்றாடல் போன்ற சில அம்சங்களைத் தவிர மற்ற எதிலும் ரகசியம் இருக்கக் கூடாது. மக்கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் அரசு பதிலளித்தாக வேண்டும். இதனால் மக்கள்தான் எஜமானர்கள் என்பது உறுதிப்படுவதோடு, அரசின் செயல்பாடுகளில் லஞ்ச ஊழலும் ரொம்பக் குறைந்து போகும்.

இத்தகைய புரட்சிகரமான கொள்கையை முதல்வர் அமுல்படுத்துகிறார் என்றதும் அதைப் பரீட்சித்துப் பார்த்துவிட வேண்டும் என்று எனக்குக் கொள்ளை ஆசையாக இருந்தது.

என்னுடைய வட்டாரத்தில் உள்ள ரேஷன் கடையில் முதலில் என்னுடைய உரிமையைப் பிரயோகித்துப் பார்க்கத் தீர்மானித்தேன். அமுதம் அங்காடி அப்புசாமி வரவேற்றார்.

அப்பு : வாங்க ஸார், எங்க வந்தீங்க? இன்னைக்கு உங்களுக்குக் கெரசின் கிழமையுமில்லே, சர்க்கரை தினமுமில்லியே?

நான் : எதையும் வாங்க வரலை. இந்தக் கடைக்கு ஒரு வாரத்துக்கு எத்தனை அரிசி சப்ளை ஆவுது; எத்தனை சர்க்கரை, எத்தனை கெரசின்...

அப்பு : தகவல் பெறும் உரிமையா?

நான் : ஆமாம், எப்படி ஊகிச்சீங்க?

அப்பு : ஏன் ஸார், நீங்க ஒருத்தர்தானா அந்தச் செய்தியைப் படிச்சிருப்பீங்க? காலைலேர்ந்து முப்பத்து நாலு பேர் வந்துட்டுப் போயிருக்காங்க. நீங்க நெம்பர் முப்பத்தஞ்சு!

நான் : அட! அது ரொம்ப சந்தோஷ சமாசாரம் ஆச்சே! அத்தனை பேர் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முன்வருவது வரவேற்கப்பட வேண்டும்தானே.

அப்பு : அது கரெக்டுதாங்க.

நான் : அப்ப சொல்ல வேண்டியதுதானே?

அப்பு : சொல்லிட்டாப் போச்சு. இந்தாங்க இதைப் புடிங்க.

நான் : என்ன இது?

அப்பு : விண்ணப்பப் படிவம். இதுக்கு ரெண்டரை ரூபா சார்ஜ் பண்ணறோம். வெளிய பிளாக்குல வாங்கினா அஞ்சோ பத்தோ கொடுத்து அழணும்.

நான் : எதுக்கு இந்த அப்ளிகேஷனும் அதுக்கு ஒரு விலையும்? நான் கேட்டது ஒரு சின்ன தகவல்.

அப்பு : அப்படி நழுவிட முடியுமா? யார் தகவல் கேட்கிறாங்கன்னு அரசுக்குத் தெரிய வேண்டாமா? ரிகார்ட் பண்ணணுமில்லே. மேலும் தகவல் தரதுன்னா சும்மாவா? அதுக்கு எழுத்தர்ல ஆரம்பிச்சு இயக்குனர் வரை பல பேருக்கு சம்பளம் தரணுமில்ல. அதுக்குத்தான் இந்த அல்ப ரெண்டரை ரூபா சர்வீஸ் சார்ஜ்.

நான் : அப்படியா? சரி, இந்தாங்க.

(பத்து ரூபாய் நோட்டு கொடுக்க, அப்பு சில்லறை இல்லை என்று வருத்தம் தெரிவித்து ஆறரை ரூபாய்களை மூன்று நாணயங்களாகத் தர, வெறுப்புடன் பெற்றுக் கொண்டு திரும்பினேன். சுமார் ஒரு மணி நேரம் அந்த விண்ணப்பப்படிவத்துடன் போராடி, பூர்த்தி செய்து மறுநாள் அப்புவிடம் சேர்ப்பித்தேன். அவர் அதை வாங்கி மேஜை இழுப்பறைக்குள் போட்டார்).

அப்பு : சரி, போயிட்டு வாங்க.

நான் : போய் வரவாவது? நான் கேட்ட தகவல்களைக் கொடுங்க!

(அப்பு என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார்)

நான் : எதற்காக தகவல் கேட்கிறேன்னு பார்க்கறீங்களா?

அப்பு : ஸார்! அதை நான் கேட்கலாமா? உங்களுக்கு உரிமை இருக்கு; கேட்கறீங்க.

நான் : அப்ப பதில் சொல்றது.

அப்பு : சொல்லத்தான் போறேன். இப்பத்தானே விண்ணப்பம் தந்திருக்கீங்க. இதுக்குள்ள ஐம்பத்து நாலு விண்ணப்பங்கள் வித்தியோகமாயிருக்கு. எல்லாம் பூர்த்தியாகி கைக்கு வந்து சேர்ந்ததும் சிவில் சப்ளைஸ் இயக்குனர் ஆபீஸுக்கு அனுப்புவேன். அங்க கையெழுத்தாகி திரும்பி வந்ததும் விவரமா நீங்க கேட்ட தகவல்களைக் கொடுத்திடறேன்.

நான் : நாளைக்கு வரவா?

அப்பு : அவ்வளவு அவசரப்பட்டா நடக்குமுங்களா? ரெண்டு வாரம் பொறுத்து வந்து பாருங்க.

(பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்து, பதினைந்தாம் நாள் போனேன்)

அப்பு : இன்னும் கையெழுத்தாகி வரலீங்களே?

நான் : அப்ப என்னோட தகவல் பெறும்

உரிமை என்ன ஆகிறது?

அப்பு : அடடா! கோவிக்காதீங்க. உங்க உரிமையை மதிக்கிறோம். ஆனா விதிமுறைகளை மீறி நான் ஒண்ணும் செய்ய முடியாது பாருங்க.

நான் : எனக்கு உடனே தெரிஞ்சாகணும்; எனக்கு உரிமை இருக்கு.

அப்பு : அப்ப ஒண்ணு பண்ணுங்க. சிவில் சப்ளைஸ் டைரக்டரைப் போய்ப் பார்த்துருங்க. அவரே கோப்பு தருவிச்சு, ஒரு நோட்டம் விட்டு உங்களுக்குத் தகவல் தந்துருவார்.



அப்பு விலாசம் தர, பெற்றுக் கொண்டு விடாமுயற்சியுடன் போனேன்.

பியூன் : டைரக்டரா? லீவுல இருக்காருங்களே, நாலு நாள் கழிச்சு வந்து பாருங்க.

நான் : என்னுடைய விண்ணப்பம் ஒண்ணு...

பியூன் : தகவல் பெறும் உரிமைதானே? டைரக்டர்தான் கையெழுத்துப் போடணும். புதன் அல்லது வியாழக்கிழமை வந்துடுவார்னு நினைக்கிறேன்.

(ஐந்தாம் நாள் பியூனுக்கு சம்திங் கொடுத்து, அரைமணி காத்திருந்து, இயக்குனரைச் சந்தித்தேன்.)

இயக்குனர் : என்ன, தகவல் பெறும் உரிமைதானே! நிச்சயம் அதை மதிக்கிறோம்! ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்து கொடுத்துடுங்க.

நான் : ஏற்கெனவே கொடுத்திருக்கேனே.

இயக் : அப்படியா? (மணி அடித்து) இந்தாப்பா, செக்ஷன் ஆபீஸரை வரச் சொல்லு... (வந்ததும்) இவர் அப்ளிகேஷன் என்னப்பா ஆச்சு?

செ. ஆ.: பிராஸஸ் ஆயிட்டிருக்கு ஸார்.

இயக் : நீங்க பிராஸஸ் பண்றதுக்குள்ள இவர் பெண்டாட்டிக்கு அடுத்த பிரசவமே ஆயிடும்! இப்பவே பார்த்துச் சொல்லுங்கப்பா. இவரையும் அழைச்சிட்டுப் போங்க. மக்களுக்குத் தகவல்பெறும் உரிமை இருக்குன்றதை முதல்ல புரிஞ்சுக்குங்க.

செ.ஆ. : யெஸ் ஸார்.

(செக்ஷன் ஆஃபீசர் தம்முடைய இருப்பிடத்துக்கே என்னை அழைத்துப் போனார். மேஜை மீது மலையாகக் கோப்புகள். தரையிலும் குன்றுகளாக...)

செ.ஆ. : கோட்டைக்குப் போய் சிவில் சப்ளைஸ் செகரட்டரியைப் பாருங்கன்னு உங்களை நான் தட்டிக்கழிச்சுட முடியும். ஆனா பெரிய மனுஷனா தெரியறீங்க. அதனால சொல்றேன்... இதைப் பார்த்தீங்களா... எத்தனை கோப்புகள்! என் தலையெழுத்து... வழக்கமான காரியங்கள் தவிர, இந்த தகவல் பெறும் உரிமை தொடர்பான கோப்புகளை வேற பார்க்க வேண்டியிருக்கு... இதுக்கு எங்களுக்குக் கூடுதல் சம்பளமா தர்றாங்க? த.பெ.உ இலாகான்னு தனியா உருவாக்கிட்டா எங்களுக்கு நிம்மதி, உங்களுக்கும் சீக்கிரம் காரியம் ஆகும். ஏதோ ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்ததாகவும் இருக்கும்...

நான் : என்னமோ பேசிக்கிட்டே போறீங்க; என் விஷயத்துக்கு வாங்க...

செ.ஆ.: உங்க பேரு, விலாசம் கொடுத்துட்டுப் போங்க. எதுக்கும் ஒரு வாரம் பத்து நாள் கழிச்சு வந்து பாருங்க. அதுக்குள்ள உங்க விண்ணப்பப் படிவத்தைத் தேடி எடுத்துறலாம்.

நான் : விண்ணப்பப் படிவத்துக்கு அழுதது போக ஆட்டோ, பஸ்ஸு, சம்திங் வகையறாவுல நூற்றிப் பதினைஞ்சு ரூபா ஏற்கெனவே நான் செலவழிச்சாச்சு.

செ.ஆ.: ப்பூ! இவ்ளோதானே ஸார். தகவல் பெறும் உரிமைன்றது விலைமதிக்க முடியாத விஷயமாச்சே. ஒரு இட்டிலி, காப்பி சாப்பிட்டாலே பத்து ரூபா ஆவுது. உங்களுக்காகத்தான் நான் மத்த வேலைங்களை ஒதுக்கி வைச்சுட்டு உங்க விண்ணப்பப் படிவத்தைத் தேடியாகணும்.

(அவர் எதிர்பார்ப்பைப் புரிந்து கொண்டு பாக்கெட்டில் கைவிட, அங்கு ஒரே ஒரு பத்து ரூபாய் நோட்டு மட்டுமே தட்டுப்பட்டது.)

நான் : ஸார், என்னிடம் இப்ப இருக்கிறது இந்த ஒரே ஒரு நோட்டுதான். டிபன் வேளை. எனக்கும் வயிற்றைக் கிள்ளறது. நீங்க சொன்ன அந்த இட்டிலி, காப்பியை நானே சாப்பிட்டுடறேன். இந்தத் தகவல் பெறும் உரிமை உங்களுக்கு நிச்சயம் உண்டு. வரட்டுமா?

செம்பியன்



விவசாயி மகன்

முகம் கொள்ளாத மேக்-அப்பும் வியர்வையே தெரியாத பொலிவும் பளபள சட்டையும் கையில் மண்வெட்டியுமாக விவசாயி மகன் ராமராஜன்.

யார் விவசாயி என்று தெரியவில்லை. படம் ஆரம்பிப்பதற்கு முன்பே அன்னார் மாலை போட்ட போட்டோவாகி விடுகிறார். அந்த விவசாயியின் மூத்த மகன் ஒரு தறுதலை. குடும்பப் பொறுப்பும் பாசமும் மிக்க தம்பியின் உயர்ந்த உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல், சண்டை போட்டு பாகப்பிரிவினை செய்து கொள்கிறான். போதாக்குறைக்கு, பங்காளி வில்லனோடு வேறு குலாவல். இப்படியாக இண்டர்வல் வரை கதை ஊர்ந்தால், பிறகு என்ன ஆகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இருக்கிற சினிமா ஃபார்முலாக்களிலேயே மிகவும் புராதனமானதும் பிழிந்து சக்கையாக்கப் பட்டதுமான ஒன்றை எடுத்து, சக்கையில் சாறு பிழியப் பார்த்திருக்கும் ராமராஜனின் துணிச்சல் புல்லரிக்கச் செய்கிறது. நவீனமாக எதுவுமே படத்தில் கூடாது என்பதில் மிக கவனமாக இருந்திருக்கிறார். கதையில் மட்டுமல்ல; காட்சிகள், கேமரா, அட - காமெடி உட்பட!

பக்கவாதத்தில் படுத்துக் கிடக்கிற மாமியார், கை சரியாகி எழுந்து ஒரு கைநாட்டு வைத்தால் பல லட்சம் வரும் என்பதற்காகப் படாதபாடுபடுகிறார் வடிவேல். சிரிக்கலாம் என்று பார்த்தால் - வலது கைப்பக்கம்தான் அட்டாக். எந்த ஊர் தாசில்தார் ஆபீசில் வலது கைநாட்டு கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

காதல் கோட்டை தேவயானி இந்தப் படத்தில் ரா.ராவுக்கு முறைப்பெண்ணாக வந்து ஓரிரு கனவுகள் கண்டு, ஒருதரம் வயலுக்கு சாப்பாடு எடுத்துப் போகிறதோடு சரி. ரசிகர்களை எழுச்சி கொள்ளச் செய்யும் பொருட்டு, கண்ணில் விழுந்த தூசியை எடுக்க ஒரு நவீன உத்தியை அறிமுகப் படுத்தியிருக்கிறார். டைட் குளோசப்பில் இமைகளின் நடுவே நாக்கால் தூசி தேடும் உத்தி. புல்லரிப்பின் உச்சம். (கடவுளே, கடவுளே என்று நூற்றெட்டு முறை சொல்லவும்.)

ராமராஜனுக்கு, இறுதியாகச் சில வார்த்தைகள். தயவுசெய்து டான்ஸ் ஆடுவதை நிறுத்துங்கள். அல்லது தொப்பையைக் குறையுங்கள்.

ஒரே இரவில் திரைக்கதை எழுதச் சொல்லி யாராவது கட்டாயப்படுத்தினார்களா? தூக்கக் கலக்கத்தில் இனி எழுதாதீர்கள். (ஆடியன்ஸ் தூங்கிவிடுகிறார்கள்.)

அடுத்ததைச் சொன்னதும் அடிக்க வராதீர்கள். ஒன்று நடியுங்கள்; அல்லது இயக்குங்கள். இரண்டையும் செய்யும்போது இரண்டிலும் சறுக்குகிறீர்கள்.

(பி.கு : சிற்பியின் இசையில் பாடல்கள் கேட்கும்படி உள்ளன. சூப்பர்ஹிட் நிகழ்ச்சிகளில் காணத்தவறாதீர்கள்.)

—ஆர்.பி.ஆர்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

கீழ்க்காணும் வீ.டி./எஸ்.டி.டி. அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுங்கள் – காலம் கடக்குமுன்னே.



வீ.டி./எஸ்.டி.டி. அறிகுறிகளில் ஏதேனும் அக்கறையின்றி விடப்படுமானால் அது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். சாதாரண மனிதரைக் காட்டிலும், வீ.டி./எஸ்.டி.டி. கொண்டவர், எய்ட்ஸ் நோய்க் கிருமிகளால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு 10 மடங்கு அதிகமாக உள்ளது.

எனவே, சிகிச்சைக்கும் ஆலோசனைக்கும் உங்கள் மருத்துவரை அணுக தயங்காதீர்கள். தாமதிக்காமல் உடனடியாக சிகிச்சை பெற்றால் வீ.டி./ எஸ்.டி.டி. நோய்களை நிச்சயமாக குணப்படுத்திவிடலாம்.

இல்லறமே நல்லறமாய் வாழும்
எங்களுக்கு என்றுமில்லை எய்ட்ஸ் பயம்

வீ.டி./எஸ்.டி.டி. நோய்களுக்கான சில அறிகுறிகள்

பெண்களுக்கு

- கருப்பை வாய்க்குழாயிலிருந்து வழக்கத்துக்கு மாறாக வெள்ளைபடுதல் அல்லது துர்நாற்றம்.
- அடி வயிற்றில் வலி ஏற்படுதல்.
- கருப்பை வாய்க்குழாயைச் சுற்றிலும் எரிச்சல் அல்லது அரிப்பு
- கருப்பை வாய்க்குழாயில் மாதவிலக்கு அல்லாத உதிரப்போக்கு
- உடலுறவு கொள்ளும்போது கருப்பை வாய்க்குழாயின் உட்புறம் வலியெடுத்தல்

பெண்களுக்கும் ஆண்களுக்கும்

- பிறப்புறுப்பில் புண்கள், வீக்கம் அல்லது கொப்புளங்கள்
- சிறுநீர் அல்லது மலம் கழிக்கும்போது எரிச்சல் மற்றும் வலி ஏற்படுதல்
- தொண்டை வீக்கம் அல்லது சிவந்திருத்தல்
- சளிக்காய்ச்சல் போல காய்ச்சல், சன்னி மற்றும் வலிகள்
- பிறப்புறுப்புப் பகுதியைச் சுற்றிலும் வீக்கம்

ஆண்களுக்கு

- ஆண்குறியிலிருந்து சொட்டுச் சொட்டாகவோ அல்லது அதிகப்படியாகவோ சீழ்வடிதல்

எய்ட்ஸ் நோய்க்கிருமிகளை நீங்கள் பெறுவதற்கான அபாயத்தை வீ.டி./ எஸ்.டி.டி. அதிகரிக்கிறது.

வீ.டி./எஸ்.டி.டி. மற்றும் எய்ட்ஸிலிருந்து ஆணுறைகள் உங்களை பாதுகாக்கும்.

மேலும் விவரங்களுக்கு:
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008.
போன் : 8255261 / 8255467 / 8254917
24 மணிநேரமும் இயங்கும் ஹாட் லைன்:
8256882 / 8256864